தவத்திரு திருப்போரூர் சிதம்பர சுவாமிகள்

155

அருளிய

பஞ்சதிகார விளக்கம்

மூலமும் உரையும்

56



உரையாசிரியர்

திரு. அடிகளாசிரியன்

தவத்திரு திருப்போரூர் சிதம்பர சுவாமிகள்

அருளிய

பஞ்சதிகார விளக்கம்

மூலமும் உரையும்

உரையாசிரியர்

திரு. அடிகளாசிரியர்

ஒய்வுபெற்ற தமிழ்ப் பேராசிரியர்

சித்தநாதேச்சுராதீனம்

குகையூர் அஞ்சல் – 606 306

விழுப்புரம் மாவட்டம்

பதிப்பாசிரியர்

சோதிடரத்னா

முனைவர் அ. சிவபெருமான்

4–சி. வெள்ளி விழாச் சாலை

செயங்கொண்ட சோழபுரம் – 621 802

பெரம்பலூர் மாவட்டம்.

குகையூர் சித்தநாதேச்சுராதீனத் திருவருள்
நிலையத்தின் ஆன்ம நல வெளியீடு-15

நூல் குறிப்பு

பெயர்	:	பஞ்சதிகார விளக்கம் மூலமும் உரையும்
ஆசிரியர்	:	திரு. அடிகளாசிரியர்
பதிப்பு	:	முதற்பதிப்பு டிசம்பர்–2003
அளவு	:	டிம்மி 1/8
பக்கங்கள்	:	16 + 96 = 112
விலை	:	ரூ. 20–00
வெளியீட்டாளர்	:	திருவருள் நிலைய வெளியீட்டகம் குகையூர் – அஞ்சல் கல்லக்குறிச்சி – வட்டம் விழுப்புரம் மாவட்டம் – 606 306
அச்சகம்	:	சுபம் பிரிண்டர்ஸ் சுப்பிரமயணிம் தெரு, சிதம்பரம் ✆ 232544

பொருளடக்கம்

பதிப்புரை

திருப்போரூர் தவத்திரு சிதம்பர முனிவர் வரலாறும்

உரையாசிரியர் உரையும்

1. பஞ்சதிகார விளக்கம் மூலமும் உரையும் — 1 – 83

2. திருப்போரூர் முருகன் வழிபாட்டுப் பாடல்கள் — 84 – 88

3. உரையாசிரியர் வாழ்வும் பணியும் — 87 – 96

பதிப்புரை

ஏதுபிழை செய்தாலும் ஏழையேனுக்(கு) இரங்கித்
தீது புரியாத தெய்வமே! — நீதி
தழைக்கின்ற போரூர்த் தனிமுதலே! நாயேன்
பிழைக்கின்ற ஆறுநீ பேசு.

(சிதம்பர சுவாமிகள்)

ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு இறைவன் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழில்களை நடத்துகின்றான். இவ்வைந்து தொழில்களை விளக்கும் நூலிற்குப் பஞ்சதிகார விளக்கம் என்று பெயர். இந்நூலை அருளியவர் தவத்திரு திருப்போரூர் சிதம்பர சுவாமிகளாவர். இவர், திருப்போரூரில் முருகப் பெருமானுக்குக் கற்கோவில் கட்டியதோடு நில்லாமல் சொற்கோவிலும் கட்டினார். அச் சொற்கோவில்களில் ஒன்று பஞ்சதிகார விளக்கமாகும். இந்நூல் குரு, சீடனுக்கு உபதேசிக்கும் முறையில் காப்புச் செய்யுள் உட்பட ஐம்பத்திரண்டு ஆசிரிய விருத்தங்களைக் கொண்டுள்ளது.

ஐந்தொழில் புரிகின்ற இறைவனை நாம் எவ்வாறு உணர்ந்துகொள்ள (17 முதல் 23 பாடல்கள்) முடியும், இறைவனின் சீரடிசேர் நிலை (25), ஐந்தவத்தைகளின் ஐந் தொழில் (27), சமாதி நிலை (82, 83), முதலான பல அரிய கருத்துக்களை இந்நூல் விளக்கிச் செல்கின்றது. இவ்விளக்கத் திற்குப் பெருந்துணையாக இவ்வுரை நூல் விளங்குகின்றது.

அகவை முதிர்ந்த நிலையில் (94), பஞ்சதிகார விளக்கத்திற்கு உரையெழுதி வெளியிட்ட முதறிஞர் பேராசிரியர் திரு அடிகளாசிரியரின் தமிழ்ப்பணி போற்றுதலுக்குரியது. ''அறம் பொருள் இன்பம் வீடடைதல் நூற்பயனே'' ஆகலின் இவ்வுரை நூலும் வீடுபேற்றை அளிக்க உதவும் என்பதாம்.

இந்நூல் வெளிவர உதவிய அனைத்து நெஞ்சங்களையும் வணங்கி மகிழ்கின்றேன்.

இங்ஙன்

05—12—2003 அ. சிவபெருமான்

திருப்போரூர்
தவத்திரு சிதம்பர முனிவர் வரலாறும்
உரையாசிரியர் உரையும்
(அடிகளாசிரியர்)

சிதம்பர முனிவர் வணக்கம்

காரூர் உளத்தில் எழுகின்ற
காம வெகுளி தமைமாற்றி
ஏரூர் சிவமாம் அருள்ஒளியை
ஏற்றி வைக்கும் எழில்ஞானி
நாரூர் தொண்டர் தமக்கெல்லாம்
நல்ல தாயாய் விளங்குகின்ற
போரூர் சிதம்பர நல்முனிவன்
புனிதத் தாளைப் போற்றுதுமே.

பாண்டி நாட்டிலே மதுரையம் பதியிலே மதுரைத் தமிழ்ச் சங்கத்து புலவர் மரபிலே, சிறந்த சைவக் குடும்பத்திலே இன்றைக்கு ஏறக்குறைய முன்னூறு ஆண்டுகளுக்கு முன் சிதம்பரக்கவிராயர் என்கின்ற பேரறிஞர் தோன்றி வாழ்ந்திருந்தார். அவர் அங்கயற்கண்ணியாகிய மீனாட்சி அம்மையின் பேரில் பேரன்பு பூண்டிருந்தார். அவ்வம்மையின் மேல் மீனாட்சியம்மை கலிவெண்பா என்கின்ற சிறு பிரபந்தத்தை இயற்றினார்.

அப் பிரபந்தத்தில்,

"... மூவருக்கும் அன்னையே – எந்தம் இடர்
அல்லல் வினையெல்லாம் அகற்றியே அஞ்சலென்று
நல்லசவு பாக்கியத்தை நல்கியே – வல்லபத்தின்
ஆசுமது ரம்சித்ர வித்தாரம் என்று அறிஞர்
பேசுகின்ற வுண்மைப் பெருவாக்கு – நேசமுடன்

தந்தென்னை ஆட்கொண்டு சற்குருவாய்
என் அகத்தில்
வந்திருந்து புத்தி மதிகொடுத்துச் – சந்ததமும்
நீயே துணையாகி நின்றிரட்சி அங்கயற்கண்
தாயே சரணம் சரண் (85-93)

என்று பாடிய ஈற்றுப் பகுதியில், எம்முடைய இடரையும், அல்லல் வினைகளையும் அகற்றி, சௌபாக்கியத்தை நல்கி, ஆசு முதலான நாற்கவிகளையும் பாடுகின்ற வாக்கினைத் தந்து, சற்குருவாய் என்னை ஆட்கொண்டு, என்னுடைய அகத்திலே வந்திருந்து சிறந்த மதியைக் கொடுத்து, எப்பொழுதும் துணையாகி அங்கயற்கண்ணி தாயே என்னை இரட்சிப்பாயாக என்று வேண்டியுள்ளார்.

எனவே அங்கயற்கண்ணிதாயின் அருள்பெருக்கால் அவர் இவ்வுலகில் வாழ்ந்திருந்து, சொல்லுலகத்திற்கும், பொருளுலகத்திற்கும் தொண்டு செய்துள்ளார்.

இவர் காலத்திலே கொங்கு நாட்டிலே அவிநாசி என்கின்ற பதியில் சைவக்குடும்பத்தில் பெருஞ்செல்வத்தை உடைய மக்கள் பலர் வாழ்ந்திருந்தனர். அவர்கள் தம்முடைய பிள்ளைகளுக்குத் தக்கார் ஒருவரைக்கொண்டு கல்வி கற்பிக்க விரும்பினர். அதற்கு உரியாரை அவர்கள் தேடியபொழுது, மதுரை சிதம்பர கவிராசரைப் பற்றி கேள்விப்பட்டனர். அவரை தம்முருக்கு வருவித்து அவருக்கு வேண்டிய எல்லா வசதிகளையும் செய்து தந்து, அவரிடம் தமது பிள்ளைகளைக் கற்குமாறு செய்தனர்.

இந்த நிலையில் விருத்தாசலத்தில் வீரசைவப் பேரறிஞராய் வாழ்ந்திருந்த தவத்திரு குமாரதேவர் என்பவர் கோவைக்கு அண்மையில் உள்ள பேருரில் வாழ்ந்திருக்கும் தமது குருவாகிய தவத்திரு. சாந்தலிங்க அடிகளாரைக் கண்டு வணங்கி அருள்

பெறுவதற்காக அவிநாசி வழியாக வந்தார். அவர் அவிநாசியில் தங்கியிருந்த பொழுது சிதம்பரக் கவிராயரைப் பற்றி கேள்விப்பட்டு அவரைக்கண்டு அளவலாவினார். அப்பொழுது அவருடைய அன்பு, பணிவு முதலான பண்பையும், பெருங்கல்வித் திறத்தையும் அறிந்து உவந்தார்.

கவிராயர் அவர்கள் குமாரதேவரிடம் வீரசைவ சமயத்தின் பெருமையை அறிந்துகொண்டார். கவிராயர் தானும் இலிங்க தாரணம் செய்துகொண்டு வீரசைவராக விரும்பினார். அப்பொழுது தேவர் கவிராயரை நோக்கி பேரூருக்கு என்னுடன் வந்தால் தவத்திரு. சாந்தலிங்க சுவாமிகளைக் கொண்டு இலிங்கதாரண தீட்சை செய்துகொள்ளலாம் என்றார். கவிராயர் அதற்குச் சம்மதித்து குமாரதேவருடன் பேரூர் சென்றார். இருவரும் சாந்தலிங்கசுவாமிகளைக் கண்டு வணங்கினர். அப்பொழுது குமாரதேவர் சாந்தலிங்க சுவாமிகளை நோக்கி என்னுடன் வந்திருக்கும் சிதம்பர கவிராயர் நன்கு படித்தவர். நல்ல பண்புடையவர். நல்ல மனப்பக்குவ நிலையை உடையவர். இவர் தங்களிடம் சிவலிங்கதாரண தீட்சை செய்துகொள்ள விரும்புகின்றார் என்றார்.

இதனைக் கேட்ட சாந்தலிங்கர் குமாரதேவரை நோக்கி தாங்களே கவிராயருக்கு அத்தீட்சையைச் செய்து வையுங்கள் என்றார். சாந்தலிங்கர் ஆணையைப் பெற்ற குமாரதேவர் கவிராயருடன் விருத்தாசலத்தில் உள்ள தமது மடத்திற்குத் திரும்பினார். பின்னர் ஒரு நல்லநாளிலே குமாரதேவர் சிதம்பர கவிராயருக்கு வீரசைவ சமயத்திற்குரிய இலிங்கதாரனதீட்சை முதலானவற்றை முறைப்படிச் செய்து வைத்தார். பின்னர் இருவரும் சாந்தலிங்க சுவாமிகளைக் கண்டு அருள் பெறுவதற்காக பேரூர் சென்று அவரை வணங்கி நின்றனர். அவரிடம் தங்கள் ஆணைப்படி கவிராயருக்கு வீரசைவ தீட்சை செய்து வைத்துள்ளேன் என்பதையும் கூறினார்.

இதனைக்கேட்டு மகிழ்ந்த சாந்தலிங்கர், கவிராயர் என் மாணவர்க்கு மாணவராய் உள்ளார். அந்த இயைபு பற்றி யான் இயற்றியுள்ள கொலை மறுத்தல், வைராக்கிய சதகம், வைராக்கிய தீபம், அவிரோத உந்தியார் என்கின்ற நூல்களுக்கு நான் கருதும் கருத்து விளங்கும்படி உரை எழுதவேண்டும் என்று கட்டளையிட்டார்.

பின்னர் கவிராயர் குமாரதேவருடன் விருத்தாசலம் வந்து, தங்கி நான்கு நூல்களுக்கும் சிறந்த உரையை எழுதிமுடித்தார். பின்னர் கண்ணுடைய வள்ளலார் இயற்றிய ஒழிவில் ஒடுக்கம் என்னும் நூலைப் படித்துப் பார்த்து, அதற்கும் உரை எழுதினார். கவிராயர் நாள்தோறும் தம் இட்டலிங்க வழிபாட்டைச் செய்து முடித்துவிட்டு முடிவில் இட்டலிங்கத்தை மனத்தால் நோக்கிக் கொண்டு இலிங்க நிருட்டையில் இருப்பார். ஒரு நாள் வழக்க மாகச் செய்யும் சிவபூஜைக்குப்பின் செய்த இலிங்க நிட்டையில் தம் மனத்திற்குள் இஷ்டலிங்க வடிவம் தோன்றாமல் மயில் வடிவமே தோன்றி நின்றது. இதனை தம் ஆசிரியர் குமாரதேவரிடத்தில் கூறினார்.

அவர் சிந்தனை செய்து உமக்கு மயிலேறி அருள் செய்யும் முருகனுடைய திருவருள் கிடைக்கும் போல் உள்ளது. நீ முருகனை வழிபட்டு முருகனுக்குத் தொண்டு செய்யவேண்டும் என்று கூறி, திருக்கழுக்குன்றத்துக்கு அண்மையில் உள்ள திருப்போரூர் என்ற இடத்தில் முருகன் எழுந்தருளியுள்ளார். அங்கு சிறந்த ஆலய அமைப்பு இல்லை. நீ அங்கு சென்று முருகனுக்கு ஆலயம் முதலானவைகளை அமைத்து நல்ல பல தொண்டுகளைச் செய்யவேண்டும் என்று கட்டளையிட்டார்.

குமாரதேவருடைய அருள் ஆணையைப் பெற்ற சிதம்பர முனிவர் திருப்போருருக்குச் சென்றார். திருப்போருருக்குச் செல்லும் வழியில் மயிலம் மலைக்குச் சென்று முருகனை வழிபட்டு,

அங்கு வாழ்ந்து இருக்கும் தவத்திரு பாலையசுவாமிகளையும் வணங்கி அருளாசி பெற்றுக்கொண்டார். தொடர்ந்து செல்லும் வழியில் கிளியனூர் என்னும் ஊரில் ஒரு விதவை அம்மையார் முருகனிடம் பக்தி பூண்டிருத்தலை அறிந்து, அவர் வீட்டில் தங்கி உணவருந்திக்கொண்டு திருப்போரூர் சென்றடைந்தார். சுவாமிகள் திருப்போரூரை அடைந்தபோது அது ஒரு சிற்றூரும் பனங்காடுமாக இருந்தது.

அப்பொழுது சுவாமிகள் தம்முடைய பெருமானாகிய குமாரதேவர் உருவெளித்தோற்றமாக வரக்கண்டு அவர்பால் விரைந்தோடி வணங்கி நிற்க, அப்பெருமான் முன்னர் இருந்து மறைந்த முருகன் கோயிலைத் தம் மாணவர்க்குப் புலப்படக் காட்டி மறைந்தருளினார். அங்கு உள்ள முருகப்பெருமானை வணங்கி தம்முடைய பெருமான் காட்டக்கண்டவாறே கோயிலைக் கட்டத் தொடங்கினார். முன்னர் சுவாமிகளுடைய திருவருளைப் பெற்ற கிளியனூர் அம்மையார் பன்னாட்களாக வருந்திச் சேர்த்து வைத்திருந்த பொன் ஒன்றைச் சுவாமிகட்குப் பாத காணிக்கையாகக் கொண்டுவந்து வைத்து வணங்கினார். சுவாமிகளும் அப்பொன்னை உவந்தெடுத்து மூலத்தானத்தின் சிகரவேலைக்குப் பயன்படுத்தினார்.

அதுகண்ட சென்னைப் பாளையத்தா செட்டியார் என்பவர் இரண்டு பை வராகன்களைக் கொண்டுவந்து சுவாமிகள் திருமுன் செலுத்தினார். சுவாமிகள் அச்செட்டியார் தகுதியற்றவகையில் பொருள் ஈட்டுபவர் என்பதை அறிந்து, அவர்கொடுத்த வராகன்களை ஏற்க மறுத்துவிட்டார். செட்டியார் எட்டு நாள்வரை அங்கேயே தங்கியிருந்து தன் பொருளை ஏற்றுக் கொள்ளுமாறு சுவாமிகளை வேண்டினார். அப்பொழுது சுவாமிகள் போனதெல்லாம் போகட்டும் இனிமேலாவது நல்லவழியிலேயே பொருள்–ஈட்டுவேன் என்ற உறுதிமொழியை நமக்குக்கொடுப்பீரா

என்று கேட்டார். செட்டியார் அதற்குச் சம்மதித்தார். அதன்பின் அந்தப்பொருளை ஏற்று திருப்பணிக்குப் பயன்படுத்திக்கொண்டார்.

சுவாமிகள் அநுபவ நிலையாகிய சமாதி நிலையில் இருந்து மெய்ஞ்ஞானப் பேற்றை அடைய விரும்பினார். அதற்காக ஆரவாரமுள்ள திருப்போரூரை விட்டு அமைதியான நிலையில் உள்ள கண்ணுவப்பேட்டையில் திருமடம் ஒன்றை அமைத்துக் கொண்டு, அம்மடத்தில் சமாதியில் இருப்பதற்குரிய யோக மண்டபத்தை முறைப்படி அமைத்து, அதில் தங்கியிருந்து சமாதி பயிற்சி செய்வாராயினார். சுவாமிகள் தம்முடைய குருநாதரின் திருவருட்கருணையால் பெற்ற சிவானுபூதிச் செல்வமாகிய அறுமுகத் தெய்வத்தை முன்னிலையாக்கியும், அத்தெய்வமும் ஆசிரியரும் ஒரு பொருளென எண்ணியும் இருந்து பாடியருளிய பாடல்களே திருப்போரூர்ச் சந்நிதி முறையென்பது.

சுவாமிகள் அருளிய இப்பாடல்களுள் அவர்கள் தம்முடைய நெஞ்சிற்கு அறிவுறுத்தியவை சில; குருநாதர் தமக்கு அருள் செய்தவற்றை எடுத்துக் கூறியவை சில; உலகத்தோர்க்குச் செவி அறிவுறுத்தியவை சில; திருவருளைப் புகழ்ந்து கூறியவை சில; குருநாதர் முன்னர்க் குறையிரந்து வேண்டியவை சிலவாம். இன்னும் சுவாமிகள் திருக்கழுக்குன்றத்து வேதகிரீசர் பதிகம், குமாரதேவர் பதிகம், குமாரதேவர் நெஞ்சுவிடு தூது, பஞ்சதிகார விளக்கம் என்னும் நூல்களையும் செய்தருளினார். இவை யாவும் அருள் விருப்பம் உடையார்க்குப் பெருவிருந்தாம்.

இன்னும் சுவாமிகள் கிளியனூர் ஞானம்மையாருடைய வேண்டுகோட்கிரங்கிப் ''புணர்ப்பதொக்க எந்தை என்னை'' என்னும் திருவாசகப் பாடற்கும் உரையருளியுள்ளார். சிதம்பர சுவாமிகள், இவ்வாறு மண்ணோரும், விண்ணோரும் வியக்க வீற்றிருக்கையில் பூவிருந்தவல்லியைச் சார்ந்த கோவூரில் திரிபுராந்தக முதலியாருடைய புதல்வரும், பம்மல் வில்வராய

முதலியாருடைய பெண் வயிற்றில் பிறந்த பிள்ளையுமாகிய சிவசங்கரர் என்னும் இளைஞர், தெய்வம் கோட்பட்டார் போல மருள்கொண்டு இருந்தார். இந்த நிலையில் அவரைப் பாம்பு கடித்துவிட்டது. பாம்பின் விஷத்தால் அவர் மூர்ச்சை எய்தினார். மருத்துவர்கள் முயன்றும் அதனைத் தீர்க்க முடியவில்லை. அந்த நிலையில் அவரைச் சிதம்பர முனிவரிடத்துக் கொண்டு வந்தனர். அம்முனிவர் முன்னே விடமயக்கத்தைத் தீர்த்துவிட்டு, பின்னர் அவருடைய மருளுக்கும் மருந்து கொடுத்து மருளையும் தீர்த்து விட்டார். இச்செய்தியைத் தாம் இயற்றிய பஞ்சதிகார விளக்கத்தில் உவமையாகக் குறிப்பிட்டுள்ளார்.

''உறுமருளன் விடத்தான்மூர்ச்
சித்துஅயர்வுற் றிடஅங்கு
ஒருவன்மருந் தால்அருள்கொண்டு
அம்மூர்ச்சை நீக்கிச்
செறிமருளுக்கு அவுடதமும்
கொடுத்துஇதையும் தீர்த்துத்
திகழ்சுகமுற் றிடவைக்கும்
திறமதுவே போல'' (10)

விஷம் தீர்ந்து, மருள் தீர்ந்து நன்றாய் விளங்கிய சிவசங்கரரைத் தொண்டராக வைத்துக் கொண்டு, அவரைக் கொண்டு பல நல்ல தொண்டுகளை எல்லாம் செய்து வந்துள்ளார்.

சுவாமிகளுடைய திருவருளைப் பெற்றவர்களுள் திருவண்ணாமலைச் சோணாசல தேவரும் ஒருவர். அவர் அண்ணாமலையாரே குருவாய் வந்து அருள்புரிய வேண்டும் என்று விரும்பி, முப்பது வயது முதல் தொண்ணூறு வயதுவரை மலைவலம் வரும் உறுதியில் நின்றார். அப்பொழுது ஒருநாள் திருப்போரூர்ச் சிதம்பர சுவாமிகளிடம் செல்லுமாறு அவர்க்குத்

திருவருள் உணர்த்தியது. உடனே அவர் திருப்போரூரை நாடி விரைந்து வந்து சுவாமிகளுடைய திருமுன்பு எய்தி வணங்கி முறையிட்டார். கருணைக் கடலாகிய சுவாமிகளும் அவர்க்கு அருள் செய்தார்.

பின்னர் சுவாமிகள் வைகாசி விசாகமும் பூரணையும் கூடிய நன்னாளிலே சிவசங்கரதேவர் முத்துக்குமரனுடைய திருக் கோயிலில் உற்சவம் செய்துகொண்டு இருக்க, சோணாசல தேவரை அழைத்துத் தம்முடைய பூரண தசையை அவர்க்கு அறிவித்துவிட்டுச் சமாதித்தானத்தில் அமர்ந்து, நிரதிசயானந்த சமாதியிலிருந்து ஒழிவில் ஒடுக்கம் பெற்றார்.

உரையாசிரியர் உரை

நான் மிகவும் முதுமையடைந்துள்ளேன் (94). அதனுடன் நரம்பு வலுவிழந்த நோயும் ஏற்பட்டுள்ளது. அதனால், பிறரைக் கொண்டு இந்நூலை எழுத வேண்டிய நிலை ஏற்பட்டது. சின்னசேலத்தில் சிவநேசர்மடம் என்னும் மேலமடத்தில் வாழ்ந்து வரும் உயர்திரு குகநேசன் என்பவரின் புதல்வன் கு. மோகன சுந்தரமும், எங்கள் ஊரைச் சேர்ந்த சி. முருகனும் அடிக்கடி வந்து எழுத்துப் பணியை மேற்கொண்டு முடித்துக் கொடுத்தனர்.

தாரமங்கலத்தில் வாழ்ந்துவரும் எங்கள் ஆதீனச் சீடர்களாகிய திரு சு. பூபதிராஜனும், திரு பெருமாள் முதலியாரும் குரு காணிக்கையாக வழங்கிய நிதியுடன் மேலும் சில ஆயிரங்களைச் சேர்த்து நூலை அச்சிட்டு வழங்கியுள்ளேன்.

அச்சகப் பணி

வழக்கம்போல் என்னுடைய நூல்களைப் பதிப்பாசிரியராக அமர்ந்து பதிப்பித்துவரும் எனது இளைய மகன் அ. சிவபெருமான் அச்சகம் சென்று, மெய்ப்பு, அட்டை முதலானவற்றை ஒழுங்கு

செய்து தம் கடின உழைப்பால் இந்நூலைப் பதிப்பித்து வழங்கியுள்ளார்.

கடலூரில் தமிழாசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருக்கும் புலவர் திரு வ. ஞானப்பிரகாசம் அவர்கள் மெய்ப்புக்களை மிக்க அன்புடன் திருத்தி உதவினார். சிதம்பரம் சுபம் அச்சக உரிமையாளர்களாகிய திரு கோ. தட்சிணாமூர்த்தியும், திரு மா, குருசாமியும் நல்ல முறையில் அச்சிட்டு வழங்கினர். இவர்களேயன்றி எனது குடும்பத்தினர்களும் இப்பணிக்கு உதவினர். இவ்வாறு நூல் உருவாக்கத்திற்கு உதவிய மேற்கூறிய அனைவரையும் நன்றாக வாழ்த்தி எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

முதுமையான வயதில் நரம்பு நோயால் பாதிக்கப் பெற்றுப் பல ஆண்டுகளாக வீட்டிலேயே தங்கியுள்ள என்னை எங்கள் ஆதீனச் சீடர்கள் புரவலர்களாக இருந்து புரந்து வருகின்றனர்· அவர்கள் என்னைப் புரப்பதாலும் என் குடும்பத்தினர் என்னைக் காப்பதாலும் நான் தமிழையும் ஆன்மீகத்தையும் புரந்து வருகின்றேன், இது இறைவன் திருவருளே.

என்னோடு இருக்கும் இறைவனே
என்றன் நினைவை அறிவாயே
பொன்னோ பொருளோ விரும்புகிலேன்
போதும் போதும் இனிப்பிறப்பு
நின்னோடு ஒன்றிச் சிவமாகும்
நேய நிலைமை கிடைத்துவிட்டால்
என்னோ இனியான் வேண்டுவது
இதன்மேல் ஒன்றும் வேண்டேனே.

இங்ஙன்

03—10—03

திரு. அடிகளாசிரியன்

பிழை திருத்தம்

வ. எண்	பக்க எண்	வரி	பிழை	திருத்தம்
1.	2	2	கூறுவாம்	பூப்பாம்
2.	2	10	முகம்மதி	முகமதி
3.	2	15	மதர்பையும்	மதர்ப்பையும்
4.	5	6	அவக்களைக்கட்கு	அவக்களைக்கட்டு
5.	5	12	புலத்திலேப்	புலத்திலே
6.	5	17	அவையண்ணம்	அவம் என்னும்
7.	6	6	இருபால	இருபால்
8.	11	2	எனவே	எனிலே
9.	13	22	தருவன	தருவன்
10.	14	10	புறத்துள்	புறத்துள
11.	14	13	உருமருளன	உறுமருளன்
12.	15	11	ஆவரன	ஆவரண
13.	16	9	பிரளாயகலருக்கு	பிரளயாகலருக்கும்
14.	23	02	சதசித்தாகிய	சடசித்தாகிய
15.	23	10	செப்புதுநீ	செம்புதும்நீ
16.	27	20	பிஞ்சிதான்	பிஞ்சுதான்
17.	27	23	சிரோனிஎம்	சிரோணிதம்
18.	33	3	கம்மியநல்	கம்மியனல்
19.	35	12	தேவிதர்	சேவிதர்
20.	36	7	அருந்தும்	அருத்தும்
21.	40	5	பகலகனவு	பகல்கனவு
22.	42	15	விடயங்களில்	விடயங்களை
23.	42	17	அழிவதே	அழுந்துவதே

வ. எண்	பக்க எண்	வரி	பிழை	திருத்தம்
24.	46	3	நெகிழும்	நிகழும்
25.	46	25	துரியநிலையாகும்	துரியாதீத நிலையாகும்
26.	47	6	இருந்தும்	இறந்தும்
27.	47	16	மொழிகுதுநாம்	மொழிகுதுநாம்
28.	49	17	ஆரோவித்தல்	ஆரோபித்தல்
29.	49	9	இருந்திகுகால்	இறந்திடுகால்
30.	50	5	இருந்திடுகால்	இறந்திடுகால்
31.	53	4	கருவிகளும்	கருவிகள்
32.	55	13	ஒருஉறுதி	ஒருறுதி
33.	56	4	உந்தப்பெற்றால்	ஆகப்பெற்றால்
34.	56	23	திருவருளையேச்	திருவருளையே
35.	60	23	செய்தியினைச்	செய்தியின் அச்
36.	61	2	சடப்பொருளுக்கு	சடப்பொருளுக்கும்
37.	61	6	அதுநிகழும்	நிகழும்
38.	61	13	செறிவான்	செறிவான
39.	62	4	செல்லுதற்கு	சொல்லுதற்கு
40.	63	25	பிரித்து	நான் பிரித்து
41.	66	22	இறை	இவை
42.	70	19	விதித்ததுவே	உதித்ததுவே
43.	72	15	வானுறு	வளனுறு
44.	73	12	உறும் ஒன்றே	உறும்சிவம் ஒன்றே
45.	74	15	நுதுமல்	நொதுமல்
46.	75	9	மண்ணுறவாம்	மன்னுறவாம்
47.	82	18	நிட்சகலவடிவமாய்	நிட்சகளவடிவமாய்
48.	82	19	சகலவடிவம்	சகள வடிவம்

உ
சிவமயம்

தவத்திரு திருப்போரூர் சிதம்பர சுவாமிகள்

அருளிய

பஞ்சதிகார விளக்கம்

மூலமும் உரையும்

(உரையாசிரியர் - திரு. அடிகளாசிரியர்)

பாயிரம்

காப்பு

ஐங்கர அமுது

முகமதியும் கண்கடுவும் களவணையும்
உத்தரிய முகபடாத்துப்
புகர்மதமா மழகளிறும் கரமலர்க்கற்
பகதருவும் பொருவில் பாதத்
திகழுறுபங் கயநிதியும் தோன்றுபரைப்
பாற்கடலில் சிறந்து தோன்றும்
உகலரும்ஐங் கரஅமுதை உளங்குளிரப்
பூரித்தே உவகை பூப்பாம் 1

உரை: பஞ்சதிகார விளக்கம் என்னும் இந்நூலுக்குக் காப்பாக பராசக்தியாகிய திருப்பாற்கடலில் தோன்றிய ஐங்கர அமுதை உள்ளிருத்தி வணங்கியதாகும் இப்பாட்டு.

பரையாகிய திருப்பாற்கடலில் சிறந்து தோன்றும் உகலரும் ஐங்கர அமுதை உளம் குளிர பூரித்தே உவகை கூறுவாம்:

பராசக்தியாகிய திருப்பாற்கடலிலே தனக்குள்ள சிறப்புடன் உண்டாகின்ற அழிதல் இல்லாத ஐந்து கைகளை உடைய விநாயகப் பெருமானாகிய தேவாமிர்தத்தை அடியார்களாகிய நாங்கள் பஞ்சதிகாரம் என்னும் இந்நூலுக்குக் காப்பாக உள்ளம் குளிரும்படி உள்ளத்தில் நிறைய வைத்து இந்நூல் இனிது முடியும் என்று கருதி உவகை அடைவோம்.

எத்தகைய பாற்கடல் எனில்?

முகம்மதியும் களவளையும் உத்தரிய முகப டாத்துப் புகர்மதமா மழகளிறும் கரமலர் கற்பகதருவும் பொருஇல் பாதத்து திகழுறும் பங்கயநிதியும் தோன்றும் பரைப்பாற்கடல் என்க.

முகமாகிய திங்களும், கண்ணாகிய நஞ்சும், கழுத்தாகிய சங்கும், மேலாடை என்கின்ற முகபடாத்தை அணிந்துள்ள புள்ளிகளையும் மதர்பையும் பெற்றுள்ள முலைகள் என்னும் இளைய யானைகளையும், கைமலர் என்கின்ற கற்பக மரங்களையும், ஒப்பில்லாத கால்கள் என்னும் பத்மநிதியையும் பெற்று விளங்குகின்ற பராசக்தியாகிய திருப்பாற்கடல் என்க.

இப்பாட்டு, முற்றுருவக அணியாகும்.

கருத்து: **பராசக்தியாகிய உமாதேவியின்கண் தோன்றிய ஐங்கரக் கடவுளாகிய அமுதத்தை உள்ளத்தில் வைத்துக்கொண்டு அக்கடவுள் காப்பாய் இருக்க, இப்பஞ்சதிகாரம் என்னும் இந்நூலை இயற்ற துவங்குகின்றேம் என்பது இப்பாட்டின் கருத்து.**

பாயிரத்துள் கடவுள் வணக்கம்
ஐந்தொழில் கூத்தாடும் இறை

பெருங்கருணைக் கடல்ததும்பித் திருவுருவம் தரித்துப்
பேசருமா சான்மறைந்த ஆருயிரை எடுத்தே
இரும்புகழ்சேர் விஞ்ஞான கலராதி மூவர்
எனத்தொகுத்து. தநுவாதி ஈந்துமும்மா யையினல்,
வரும்சகலர்க்கு இருவினையொப் பாக்கிமல பாகம்
வருவித்துத் திருவடிக்கீழ் வைப்பான் மன்றதனுள்
அருங்கருணை ஐந்தொழிற்கூத் தாடும்இறை அடிகள்
அககமலத்து ஒளிவளரக் கருதியிருத் திடுவாம். 2

உரை: உயிர்களுக்கு உதவுகின்ற பெரிய அருள்கடல் ததும்பி திருவுருவமாக அமைந்து வந்து, சொல்ல முடியாத ஆணவமலம் என்னும் மாசினால் மறைந்து கிடக்கின்ற அரிய உயிர்க் கூட்டங்களைக் கேவலா அவத்தையிலிருந்து நீக்கி எடுத்து, நல்ல பெரிய புகழை உடைய விஞ்ஞானகலர் என்றும், பிரளயாகலர் என்றும், சகலர் என்றும் மூன்று வகையினராகத் தொகுத்து, அம்மூவருள் சகலர்க்கு மும்மாயையிடத்து தனுகரண புவன போகங்களைக் கொடுத்து, இருவினை ஒப்பாக்கி, மலபரி பாகம் வருவித்து, அவ்வுயிர்களைத் திருவடிக்கீழ் வைக்க வேண்டி, திருச்சிற்றம்பலம் என்னும் மன்றிலே அருள் நிரம்பிய ஐந்தொழில் கூத்தைச் செய்கின்ற பெருமான், அப்பெருமானுடைய திருவடி களை நெஞ்சத்தாமரையுள் வைத்து ஒளி வளரும்படி உணர்ந் திருப்போமாக.

சிவகாமசுந்தரி

மலர்விரையும் கதிரொளியும் உயிருடலும் மணியின்
வளர்தேசும் உருநிழலும் மலிபொருளோடு உரையும்
நிலவுதல்போல், நிட்களத்தைப் பிரியாது மருவி,
நிகழ்சகளத்து அப்பதிக்கு நிறைமனையாய் மன்னி,
உலகுயிர்மைந் தர்கள்பிறவிப் பசிகெடஎந் நாளும்
ஓவாதஆநந்த அமுதூட்டி அவ்வீட்டிருத்தும்
திலகநுதற் சிவகாம சுந்தரியார் பாதச்
செங்கமலம் தலைமீதில் திகழுறவைத் திடுவாம். 3

உரை: மலரும் மணமும், கதிரவனும் ஒளியும், உயிரும் உடலும், மணியும் தேசும், உருவமும் நிழலும், சொல்லும் பொருளும், ஆகிய இவை ஒன்றுபட்டு விளங்குதல் போல நிட்கள சிவத்திற்கு தாதான்மிய சத்தியாய் பிரியாது பொருந்தி, அச்சிவம் சகள உருவத்தைப் பெற்ற பொழுது பின்னாசக்தியாகி நற்பண்புகள் நிறைந்த மனைவியாயும் பொருந்தி, உலகத்திலே உள்ள உயிர்கள் என்னும் குழந்தைகள் பிறவிப் பசியிலிருந்து நீங்கும்படி அவ்வுயிர்களாகிய குழந்தைகளுக்குப் பேரானந்த அமிழ்தத்தை ஊட்டி, அவ்வுயிராகிய குழந்தைகளை மோட்ச மாகிய வீட்டிலே நிலையாக நிறுத்துகின்ற சிவகாமசுந்தரி என்க. அச்சுந்தரியின் பாதமாகிய செங்கமல மலரைத் தலை மீதில் வைத்து வணங்குவாம்.

சிவபோகம் விளைவிக்கும் களிறு

கவுட்குழிமா மதகுதிறந்து, அருள்மதநீர்ப் பாய்ச்சிக்,
கருதுறுமெய் அடியர்உளப் புலத்துஅஞ்சக் கரமாம்
நவப்பெருவித் திட்டுஅதனில் எழும்அன்பாம் முளையை
நசைவிடயக் கிளிகள்நறுக் காதவகை காத்து, இங்கு
அவக்களைக்கட்டு, அருள்ஞானப் பயிரேற்றி, என்றும்
யான்எனும்ஆ ணவவேழம் அணுகாது துரத்தி,
உவப்புறுமெய்ச் சிவபோகம் விளைவிக்கும் களிற்றை
உளமவுனக் கூடத்தில் பிறிவறவைத் திடுவாம். 4

உரை:

கன்னத்தில் உள்ள குழியாகிய பெரிய மதகைத் திறந்து, அதன் வழியாய் அருள் என்கின்ற மதநீரைப் புலத்திலேப் பாயச் செய்து, கருதுகின்ற உண்மை அடியாருடைய மேற்கண்ட அருள் நீர்ப் பாய்ந்த புலத்திலே பஞ்சாட்சரம் என்கின்ற புதிய, பெரிய விதையை விதைத்து, அதில் நின்று எழும் சிவமாகிய அன்பு என்னும் முளையை, விரும்பும் உலக விஷயங்களாகிய கிளிகள் நறுக்கி அழித்துவிடாமல் காத்து, அவையண்ணம், அவச்சொல், அவச் செயல் என்று கூறும் மூன்று களைகளையும் வெட்டி எறிந்து, சிவஞானமாகிய பயிரை ஏற்றி, எப்பொழுதும் யான் என்கின்ற ஆணவமாகிய யானை தோன்றி, அப்பயிரை அழித்து விடாமல் காத்து, உவகைக்கு ஏதுவான சிவபோகம் என்க.

அச்சிவபோகத்தை விளைவிக்கின்ற யானைமுகக்கடவுள்; அந்த யானைமுகக் கடவுளை உள்ளத்தினாலே செய்யப்படுகின்ற மௌனயோகம் என்கின்ற கட்டுத்தறியிலே வேறுபாடு நீங்க வைத்து வணங்குவாம்.

நீபத் தொடையான் என்னும் கடம்பன் வணக்கம்

கனை கடலின் முடிமீதில் சுடர்விடுஞா யிறுபோல்
 கடிநீலக் கலபமயில் துரகமிசைத் தோன்றி,
வனசரர்தந் தருள்மானும் கடவுளர்கோன் உதவும்
 மாதவயா னையும்இருபால மன்னுற,எந் நாளும்
நினையடியார் பவநோயில் சாராமல் காத்து,
 நிறைசுகபூ ரணவாரி குறைவறவே உதவும்,
புனைமலர்நீ பத்தொடையான் நூபுரமாம் முளரிப்
 பொன்னடியெம் சென்னியிலும் புந்தியிலும் வைப்பாம். 5

உரை:

ஒலிக்கின்ற கடலின் முடிமீதிலே எழுகின்ற ஞாயிறைப் போல நீலநிறமான கலாபங்களை உடைய மயிலின் மேல் தோன்றி, வேடர்தரும் மான் போன்ற வள்ளியும், இந்திரன் உதவுகின்ற பெரிய தவத்தை உடைய தெய்வயானையும், இரண்டு பக்கத்திலும் பொருந்தி இருக்க, எந்த காலத்திலும் கருதுகின்ற தொண்டர்களைப் பிறவி நோய் அணுகாமல் காத்து, நிறைந்த பேரின்பம் என்கின்ற கடலைக் கொடுத்து உதவுகின்ற கடப்பமாலை அணிந்த முருகப் பெருமான்; அம்முருகப் பெருமானுடைய சிலம்பணிந்த தாமரைமலர்போன்ற திருவடியைத் தலையிலும், உள்ளத்திலும் வைத்து வணங்குவாம்.

குமாரதேவர் என்னும் பெயருடைய குரு வணக்கம்

ஐந்தொழிலில் நால்அகற்றி அநுக்கிரகம் ஒன்றும்
அருளுடனே கொண்டு பரதிருஞான வடிவாய்
வந்தருளித், தீவகத்தால் பறவைஅகப் படுத்தும்
ஆறுஅதுபோல் நாயேனை வழியடிமை கொண்டு,
சிந்தைதனில் சிவஞானப் பேரொளியைக் காட்டித்,
திரிமலவல் லிருள்துரந்து, சிற்சுகத்தே வைக்கும்
நந்துலவு நதிபுடைசூழ் முதுகிரிவாழ் குமார
நாயகனைத் தூயவுளத தேமிகவைத் திடுவாம். 6

உரை:

உயிர்களின் நலங்கருதி இறைவன் செய்கின்ற படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருள் செய்தல் என்னும் ஐந்து தொழில்களுள் நான்கை நீக்கிவிட்டு, ஈற்றில் கூறிய அருளல் என்னும் அநுக்கிரகத்தை மட்டும் மேற்கொண்டு, திருவைத்தரும் பரஞானத்தின் வடிவத்தையே தன் வடிவமாக, இவ்வுலகத்தில் வந்து பிறந்தருளி, வேடர்கள் மற்றுள்ள பறவை களைப் பிடிப்பதற்கு தாம் ஒரு பறவையை பழக்கி வைத்திருந்து அதைக்கொண்டு ஏனையப் பறவைகளைப் பிடிப்பது போல, இறைவனாகிய தான் மனித உருவத்தை எடுத்துக் கொண்டு குருவாகத் தோன்றி, நாய்போன்ற அடியேனை வழி வழியாக அடிமை கொண்டு, எங்களுடைய உள்ளத்தில் அறியாமையை நீக்குகின்ற பேரொளியைக் காட்டி, மூன்று மலங்களாகிய இருள்களை நீக்கி, ஞானவடிவாகிய இன்பத்துள் எங்களை வைக்கின்ற, நத்தைகள் ஊர்கின்ற மணிமுத்தா நதி சூழ்ந்த விருத்தாசலம் என்கின்ற பழமலை என்னும் பதியில் எழுந்தருளி யிருக்கும் குமாரதேவர் என்கின்ற பெயரை உடைய தலைமைக் குருவை எங்களுடைய தூய உள்ளத்தில் வைத்து வணங்குவாம்.

விளக்கம்: தீவகத்தைப் பார்வை மிருகம் அல்லது பார்வை பறவை என்பர்.

வேடர்கள் மான் முதலான மிருகங்களையோ, பறவை களையோ தங்கள் வசமாய் வளர்த்து வைத்திருப்பர். அவற்றைக் கொண்டுபோய் காட்டில் வைத்து, அங்கு அதனுடன் உறவாட வருகின்ற மிருகங்களையும், பறவைகளையும் பிடித்துக் கொள்வர். இதற்குத் தீவகம் என்று பெயர். அதனைப்போல மனித உருவம் எடுத்துக்கொண்டு வந்து, உலகத்தில் உள்ள மனிதர்களை வசப்படுத்துவர் என்க. அதனால் தீவகம் போல் என்றார்.

அவையடக்கம்

கருவிகள்ஓர் ஆறாறும் சடமாகும் சீவன்
கருதுறுதற் செயலால் ஒன்றறியாது இங்குஇவற்றை
மருவிஅந்தச் சடசித்தோர் இரண்டிற்கும் தொழிலும்
மன்னறிவும் தன்னருளால் வருவிப்பான் இறைவன்
புரையறஆ கையினால்அவ் விறையருள்கொண்டு அடியேன்
புகல்குவன்பஞ் சதிகார விளக்கம்என்றிந் நூலைப்
பரவுரவோர் கொள்ளுவர்எள் ளார்இதுவும் இறைவன்
பணியெனவே எச்செயலும் பரன்செயலென்று
உனலால். 7

உரை:

இப்பாட்டு இறைவனுடைய செயலைக் கூறி அவையடக்கம் கூறுகின்றது.

தத்துவங்கள் முப்பத்தாறும் சடப்பொருளாகும். அத்தத்துவங் களை மேற்கொண்டுவாழும் சீவர்கள் தாமாக ஒன்றை அறிந்து கொள்ள முடியாத சிற்றறிவினராய் இருப்பர். இந்த நிலையில் இறைவன் தத்துவங்கள் முப்பத்தாறையும் இயக்கி குற்றமற

தொழில் படுத்துவன். சீவர்களை இயக்கி அவர்களுக்குக் குற்றமற அறிவுவருவிப்பன். அந்த இரண்டு காரணத்தினாலே சடத்திற்குத் தொழிலையும், சிற்றறிவுடைய உயிருக்கு அறிவையும் இறைவன் தன்னுடைய அருளால் கொடுத்தலினால், அவ்விறைவனுடைய திருவருளினாலே இப்பஞ்சதிகார விளக்கம் என்னும் இந்நூலை என்னுடைய கருவிகளாலும், அறிவினாலும் இயற்றுகின்றேன்.

இறைவனுடைய திருவருளால் இயற்றுகின்ற இந்நூலை வணங்கப்படும் அறிவுடையோர் எல்லோரும் ஏற்றுக்கொள்வர். இறைவனுடைய அருளால் பிறந்த இந்நூலை எள்ளார். எல்லாச் செயலும் இறைவன் பணி எனவும், எச்செயலும் பரன்செயல் எனவும் கருதுகின்றவர்கள் யான் செய்த இந்த நூலைக் கொள்வரே அன்றி எள்ளார்.

நூல்

திருவளரும் ஒருவன்ஒரு தொழில்புரியின் அதுதான்
திகழ்தருதன் பயன்அயலார் பயனுடன்அப் பயனைக்
கருதிவரும்; அவையுள்தன் பயன்மும்மைத்து ஆகும்
கழறுமிடத்து இடரகலல் சுகமுறுதல் புகழை
மருவுதலாய் வரும்அயலார் பயன்அருளைக் கருதி
வந்திடும்அப் பயன்விளையாட் டாகிவரும் இவையுள்
நிருமலன்ஐந் தொழில்புரிதல் தன்பயனோ பிறர்தம்
நேர்பயனோ அவப்பயனோ நினையுமிடத்து எனிலே.

8

பதவுரை:

திருவளரும் ஒருவன்ஒரு தொழில்புரியின் அதுதான் திகழ்தரு தன்பயன் அயலார்பயனுடன் அப்பயனைக் கருதிவரும்:

ஆசிரியர் இந்நூலைத் திருவளரும் என்கின்ற மங்கலச் சொல்லால் தொடங்குகின்றார். முயற்சி என்கின்ற திருவை உடைய ஒருவன் ஏதாவது ஒரு தொழிலைச் செய்வானானால் அத்தொழில் மூன்று வகைப்படும்.

அம்மூன்று;— தனக்குப் பயன்படுவது, பிறர்க்குப் பயன் படுவது, யாருக்கும் பயனின்மையைக் கருதிவருவது என்பனவாம் அப்பயன் என்பது வடமொழி முடிபாகும்.

ந + பயன் = நபயன் என்கின்ற சொல் இங்கே அப்பயன் என்றாயிற்று. 'ந' என்கின்ற இடைச்சொல்லிற்கு இன்மை என்பது பொருள் அந்த இடைச்சொல் வருமொழியிலே மெய் முதற்சொல் வந்தால் தன்னுடைய மெய்கெட்டு அப்பயன் என்று முடியும்.

''நேர்ந்த மொழிப் பொருளை நீக்க வரும்நகரம்
சார்ந்தது உடலாகில் தன்னுடல் போம்''

என்னும் நேமிநாத விதியை நோக்குக. எனவே அப்பயன் என்பதற்குப் பயனின்மை என்பது பொருளாகும்.

அவையுள் தன்பயன் மும்மைத்து ஆகும். கழறுமிடத்து இடரகலல் சுகமுறுதல் புகழை மருவுதலாய் வரும்:—

மேலே கூறிய மூன்றுள் முதலாவதாகிய தன்பயன் என்பது மூன்று வகையாக வரும். அம்மூன்று வகையைச் சொல்லு மிடத்து ஒன்று தன்துன்ப நீக்கம், மற்றொன்று தான் இன்பம் அடைதல், மேலுமொன்று தான்புகழ் பெறுதல் ஆகும்.

அயலார் பயன் அருளைக் கருதி வந்திடும்:—

இரண்டாவதாகிய அயலார் பயன் பிறர்மேல் தான்கொண்ட அருளைக் கருதி வரும்.

அப்பயன் விளையாட்டாகி வரும்:—

மூன்றாவதாகிய பயனின்மை என்பது விளையாட்டைக் கருதி வரும்.

இவற்றுள் நிருமலன் ஐந்தொழில் புரிதல் நினையுமிடத்து தன்பயனோ பிறர்தம் நேர்பயனோ அவப்பயனோ எனவே:

மேலே சொன்ன இவைகளுள் குற்றமற்ற இறைவன் செய்கின்ற படைப்பு முதலான ஐந்தொழில்கள் எவற்றின் பாற்படும் என்று ஆராயத் தொடங்கினால்,

மலரகிதன் ஆகையினால் ஆநந்த மயனாய்
மன்னுறலால் ஒப்பார்மிக் கிலியாய்மன் னுறலால்
நிலவும்இடர் அகலுதலும் சுகப்பேறும் புகழும்
நேர்தரவேண் டாமையினே தன்பயன்அன் றுஆகும்
இலகருள்பேர் அறிவுடையன் ஆதலினால் விளையாட்
டெண்ணிஒரு தொழில்புரியான் ஆதலின்அப் பயனன்று
உலகுயிர்மேல் வைத்திடுபேர் அருளால்இங்கு இறைவன்
உறுதொழில்செய் குவன்இதைநீ பிறர்பயன்என்று
உணரே. 9

பதவுரை:

மலரகிதன் ஆகையினால் ஆநந்த மயனாய் மன்னுறலால் ஒப்பார் மிக்கிலியாய் மன்னுறலால் நிலவும் இடர் அகலுதலும் சுகப்பேறும் புகழும் நேர்தர வேண்டாமையினே தன்பயன் அன்று ஆகும்:

இறைவன் மலமற்றவன் ஆகையினால் இடர்அகல தொழில் செய்ய வேண்டுவதில்லை. அவன் ஆனந்தமயன் ஆகையினால் சுகப்பேறு அடைய தொழில் செய்ய வேண்டுவதில்லை. அவன் ஒப்பாரும் மிக்காரும் இல்லாத உயர்ந்தவன் ஆகையினால் பிறர்புகழ தொழில் செய்ய வேண்டுவதில்லை. எனவே, இறைவனின் செயல் தன்பயனைக் கருதியது அன்று.

இலகருள்பேர் அறிவுடையன் ஆதலினால் விளையாட்டு எண்ணி ஒரு தொழில் புரியான் ஆதலின் அப்பயன் அன்று:

இறைவன் அருள்வழங்கும் பேரறிவுடையவன் ஆதலினால் பயனின்மையாகிய விளையாட்டைக் கருதி தொழில் செய்யான். எனவே, இறைவனின் செயல் பயனின்மையைக் கருதியதும் அன்று.

உலகுஉயிர்மேல் வைத்திடுபேர் அருளால் இங்கு இறைவன் உறுதொழில் செய்குவன் இதைநீ பிறர்பயன் என்று உணரே:

இறைவன் உலகத்தில் உள்ள உயிர்களின் மேலே கொண்ட பேரருளினாலே தன்னுடைய ஐந்தொழிலைச் செய்வான். ஆகையினால் இறைவன் செய்யும் ஐந்தொழில் பிறர்பயன் கருதிய தொழில் என்க. மேற்கூறிய இரண்டு பாடல்களால் முதலில் தொழில்களின் வகையைத் தன்பயன், பிறர்பயன், அப்பயன் என்று மூன்றாகக் கூறி, அம்மூன்றுள் இறைவன் செய்யும் தொழில் பிறர்பயன் கருதியது என்ற செய்தி பெறப்பட்டது.

ஆருயிர்கட்கு இறைதொழிலால் என்பயன் இங்கு என்னில்
அவ்வுயிர்கட்கு ஈரறிவுஉண்டு அதுவிடய அறிவும்
சோர்வறுநற் சொரூபஅறி வெனவும்அவை தம்மைத்
துகள்இருகூ றாய்மூடும் சொல்லரிதாய் நின்றே
ஏர்விடய ஆவாரகநற் சொரூபஆவா ரகம்என்று
இவ்விருளால் அவ்வுயிர்கள் எண்ணவரும் தமையும்
தேர்வரும்அவ் விறைவனையும் சிறிதேனும் அறியாச்
செய்திதனக்கு உரைதரும்ஓர் திட்டாந்தம் கேளே. 10

பதவுரை:

ஆருயிர்கட்கு இறை தொழிலால் என்பயன் இங்கு என்னில்?

அரிய உயிர்வர்க்கங்கட்கு பதி என்கின்ற இறைவன் செய்கின்ற ஐந்தொழிலினாலே பயன்என்ன என்று வினாவில்?

அவ்வுயிர்கட்கு விடய அறிவும் சோர்வறு நற்சொரூப அறிவு எனவும் ஈரறிவு உண்டு:

அவ்வுயிர்கட்கு விடயஅறிவு எனவும், குற்றமற்ற நல்ல சொரூப அறிவு எனவும் இரண்டு அறிவு உண்டு.

அவை தம்மைத் துகள் இருகூறாய் மூடும் சொல்லரிதாய் நின்றே:

அந்த இரண்டறிவை ஆணவம் அல்லது ஆவரண சத்தி என்கின்ற ஒன்று, இரண்டு கூறாய்ச் சொல்லரிதாய் இருந்து மறைக்கும்.

ஏர்விடய ஆவாரகம் நற்சொரூப ஆவாரகம் என்று:

உயிர்களுக்கு உலக விஷயங்கள் எதுவும் தோன்றாதபடி மறைப்பதை விடய ஆவாரகம் என்று பெயர்க் கூறுவர். சொரூபம் தோன்றாமல் மறைப்பதைச்சொரூப ஆவாரகம் என்று பெயர்க் கூறுவர்.

இவ்விருளால் அவ்வுயிர்கள் எண்ணவரும் தமையும் தேர்வரும் அவ்விறைவனையும் சிறிதேனும் அறியாச்செய்தி தனக்கு உரைதரும் ஓர் திட்டாந்தம் கேளே:

மேலே சொன்ன இரண்டு இருளாலே, அவ்வுயிர்கள் தம்மையும், தம்மைப் பற்றிய விகாரங்கயையும், சொரூபத்தையும், சொரூபத்தைப் பற்றிய விகாரங்களையும் சிறிதளவும் அறிந்து கொள்ளாமல் இருக்கும். அத்தகைய உயிர்களுக்கு இறைவன் ஐந்து தொழிலால் அறியாமை நீக்கி விளக்கம் தருவன மேற் கண்ட இறைவன் செயலுக்கு ஒரு எடுத்துக்காட்டைக் கேட்பாயாக.

குறிப்பு:

ஆவாரகம் என்ற சொல்லுக்கு மறைப்பு என்று பொருள். அவ்ஆவாரகம் விடய ஆவாரகமும் சொரூப ஆவாரகமும் என்று இரண்டு வகைப்படும்.

உலக விடயங்களைத் தோன்றாமல் மறைப்பது விடய ஆவாரகமாகும். உயிர்களாகிய தம்மையும், தமக்கு மேல் உள்ள இறைவனையும் தெரியாமல் மறைப்பது சொரூப ஆவாரகமாகும். மேலே கூறப்பட்ட ஆவாரக சத்தி செய்யும் மறைப்பைக் கீழ் வரும் கைவல்லிய நவநீதம் தத்துவவிளக்கப் பாடல் மூலம் அறியலாம்.

பூன்றமாம் பிரமத்துக்கும் புறத்துள் விகாரங் கட்கும்
ஆன்றகூடஸ்தனுக்கும் அகத்துள விகாரங்கட்கும் தோன்றியபேதம்
சற்றும் தோன்றாமன் மறைத்துமுடும். (50)

உருமருளன் விடத்தான்மூர்ச் சித்துஅயர்வுற் றிட அங்கு
ஒருவன்மருந் தால்அருள்கொண்டு அம்மூர்ச்சை நீக்கிச்
செறிமருளுக்கு அவுடதமும் கொடுத்துஇதையும் தீர்த்துத்
திகழ்சுகமுற் றிடவைக்கும் திறமதுவே போல
அறையிருளில் செறிவுயிர்கட்கு உடல்முதலா மாயை
அதனிடைதந்து இருள்விடய ஆவாரகம் முன்நீககி
மறைகுருவால் அனுபவத்தால் சொரூபஆவா ரகமும்
மாற்றிஇன்பம் தரும்இறைவன் மாதொழிலால் அறியே.
11

பதவுரை:

உறுமருளன் விடத்தான் மூர்ச்சித்து அயர்வுற்றிட அங்கு ஒருவன் மருந்தால் அருள்கொண்டு அம்மூர்ச்சை நீக்கிச் செறி மருளுக்கு அவுடதமும் கொடுத்து இதையும் தீர்த்துத் திகழ் சுகமுற்றிட வைக்கும் திறமதுவே போல;

ஒருவன் இயல்பாகவே மருளனாய் [பித்தனாய்] பிறந்தான். அவனைப் பாம்பு கடிக்க அதனாலே அவன் மயக்கமுற்றான். இந்த நிலையில் சிறந்த ஒரு மருத்துவன் தோன்றி விடம் தீர்க்கும் மருந்தால் விடமயக்கத்தைத் தீர்த்தான். பொருந்திய பைத்தியத்தைத் தீர்ப்பதற்கு அதற்குரிய மருந்தைக் கொடுத்து பைத்தியத்தையும் தீர்த்து, அவனை நலமடையச் செய்தாற் போல,

அறையிருளில் செறிவுயிர்கட்கு உடல்முதலா மாயை அதனிடைதந்து இருள்விடய ஆவாரகம் முன்நீக்கி மறைகுருவால் அனுபவத்தால் சொரூப ஆவாரகமும் மாற்றி இன்பம் தரும் இறைவன் மாதொழிலால் அறியே:

சொல்லப்பட்ட ஆணவ இருள் (அ) ஆவரன இருளில் அகப்பட்டு, கேவலா அவத்தையில் நின்ற உயிர்கட்கு மாயை என்னும் காரணப்பொருளில் இருந்து உடல் முதலானவற்றைக் கொடுத்து, சகலராய் பிறக்கச் செய்து, விடய ஆவாரகத்தை நீக்கியும், ஞான நூல்களினாலும் குருவினாலும் சொரூப மறைப் பையும் மாற்றி இறைவன் தன்னுடைய ஐந்தொழிலால் உயிர் களுக்கு இன்பம் தருவான் என்றவாறு.

உயிர்களும் ஓர் படித்து அவைமுடு ஆணவம்ஓர் தன்மைத்து
உறும்இறைஏ கன்பக்க பாதமிலி ஆனால்
செயிரறுவிஞ் ஞானகலர்க்கு உடலாதி தந்த
செய்தியின்மற்று இருவர்க்கும் செய்தால்என் னென்னின்
இயல்பொடுகண் களும்அவைமு டும்படலம் தானும்
இருந்திடஅப் பிணிகுணகுற் றங்களைநன்கு அறிவோன்
தயவொடுநன் மணிமருந்து ஊசியினால்நீக் கிடுமால்
சாற்றியமு வகைஆக்கித் தணிக்குமலம் இறையே. 12

பதவுரை:

உயிர்களும் ஓர்படித்து அவைமுடு ஆணவம் ஓர் தன்மைத்து உறும்இறை ஏகன் பக்க பாதமிலி ஆனால் செயிரறு

விஞ்ஞான கலர்க்கு உடலாதி தந்த செய்தியின் மற்று இருவர்க்கும் செய்தால் என்னெனின்:

உயிர் என்னும் பசுக்கள் ஒரே தன்மைத்தாகும். அவற்றை மூடுகின்ற ஆணவமலமும் ஓர் தன்மைத்தாகும். பதி என்கின்ற இறைவன் ஒருவனே ஆகும். அவனும் பட்சபாதம் இல்லாத நடுநிலைமை உடையவன் ஆவன். மேற்சொன்னபடி, ஆனால் குற்றமற்றவராகிய ஒரே ஒரு மலத்தோடு கூடிய விஞ்ஞானகலர் என்னும் உயிர்களுக்கு நல்ல உடலும், உயர்ந்த அதிகாரமும் கொடுத்த செயல்போல, ஏனைய இரண்டு மலமுடைய பிரளாய கலருக்கும், மூன்று மலமுடைய சகலருக்கும், விஞ்ஞான கலருக்குக் கொடுத்த உடல் முதலானவற்றைப் போல கொடுக்காதது என்ன என்று வினாவில்?

இயல்பொடு கண்களும் அவைமூடும் படலம் தானும் இருந்திட அப்பிணி குணகுற் றங்களை நன்கு அறிவோன். தயவொடு நன்மணி மருந்து ஊசியினால் நீக்கிடுமால் சாற்றிய மூவகை ஆக்கித் தணிக்கு மலம் இறையே:

கண்களும், கண்களை மூடுகின்ற படலம் என்னும் நோயும் தமக்குள்ள இயல்புடனே இருக்க, அவற்றின் குணக்குற்றங்களை உணர்ந்த கண் மருத்துவன் ஒருவன் ஒரே படித்தாக மருத்துவம் செய்யாமல், சில நோய்களை மணியினாலும், சில நோய்களை மருந்தினாலும், சில நோய்களை ஊசியினாலும் தீர்க்கின்ற முறைபோல, சொல்லப்பட்ட தணிக்கும் மூன்று முறைகளைச் செய்து விஞ்ஞானகலருடைய ஒரு மலத்தையும், பிரளயாகலரின் இரண்டு மலத்தையும், சகலரின் மூன்று மலத்தையும் தணிக்கும் என்க.

இறைவன் செய்யும் ஐந்தொழில் எவை?

ஐந்தொழில் ஆவனஎவைஎன் றிடில் அவைதாம் சிருட்டி
ஆனதிதி சங்காரம் திரோபாவத் துடனே
வந்திலகும் அநுக்கிரகம் என்றாம்அச் சிருட்டி
மாயையினில் தனுகரண புவனமுடன் போகம்
தந்திடலாம் தனுஎண்பத்து ஒருநான்கொடு உற்ற
தகுநூறா யிரபேதம் சாற்றியஅக் கரணம்
நந்தும்உயிர்க் கரணம்வித்தி யாகரணம் உடனே
நற்சிவமா கரணம் என நண்ணுறும் ஈங்கு இவையுள் 11

பதவுரை:

ஐந்தொழில் ஆவன எவை என்றிடில்:

பதியாகிய இறைவன் செய்கின்ற ஐந்தொழில்கள் எவை என்று வினாவில்,

அவைதாம் சிருட்டி ஆனதிதி சங்காரம் திரோ பாவத்துடனே வந்திலகும் அநுக்கிரகம் என்றாம்:

அவைதாம் படைத்தலும், காத்தலும், அழித்தலும் மறைத் தலும் அருள் செய்தலும் என்பவையாகும்.

அச்சிருட்டி மாயையினில் தனுகரண புவனமுடன் போகம் தந்திடலாம்:

அவற்றுள் படைத்தல் என்பது மாயை என்கின்ற முதல் கருவியிலிருந்து உடம்புகளையும், கருவிகளையும், இட மாகிய புவனங்களையும் போகப் பொருள்களையும் உண்டாக்கு தலாம்.

தனு எண்பத்து ஒருநான்கொடு உற்ற தகு நூறாயிர பேதம்:

உடம்பு என்பவை எண்பத்து நான்கு லட்சம் பேதமாய் இருக்கும்.

நூறாயிரம் – லட்சம்

சாற்றிய அக்கரணம் நந்தும் உயிர்க்கரணம் வித்தியாகரணம் உடனே நற்சிவமா கரணம் என நண்ணுறும்:

பொருந்திய அக்கரணங்கள் ஆத்மதத்துவம் என்றும், வித்யாதத்துவம் என்றும், சிவதத்துவம் என்றும் மூன்று வகையாய் இருக்கும்.

இங்கு இவையுள்:

மேலே சொன்ன கருவிகளுள் [அடுத்த பாட்டில் தொடங்கும்.]

ஆத்மதத்துவம் வித்யா தத்துவம் இவை என்றல்

சீவன் இடைக் கரணம்விட யாதிகளைத் தேரும்
திறமதுவாம் வித்தியா கரணமுறை செப்பில்
ஓவறுபோ கம்துய்ப்பத் திரிகால மாயும்
உறுபோகம் வினைகட்கூ டுறவரைவ தாயும்
தாவில்உயிர்க் குக்கிரியை அறிவுஇச்சை எழுப்பும்
சார்பாயும் விடயத்தில் தங்குகறங்கு ஒப்ப
மேவிஇயக் குதலாயும் விடயந்தான் என்ன
வேறு அறமால் தரலாயும் விளங்குறுமால் என்னே.

பதவுரை:

சீவன் இடைக் கரணம் விடயாதிகளைத் தேரும் திறமதுவாம்:

சீவன் இடைக் கரணம் என்கின்ற ஆத்மதத்துவம் உலக விடயங்களை தேர்ந்து அறியும் கூறுபாடுகளை உடையது.

வித்தியா கரணமுறை செப்பில்:

வித்தியா தத்துவம் ஏழினை முறையாகச் சொல்லத் தொடங்கினால்

ஓவறு போகம் துய்ப்பத் திரிகால மாயும்:

நீக்கமற்ற உலக போகங்களை அனுபவிக்கும் கருவியாக இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்கின்ற பாகுபாட்டால் நடைபெறும் கால தத்துவமாயும்.

உறுபோகம் வினைகட்கு ஈடுற வரைவதாயும்:

வருகின்ற உலக போகங்களை இவ்வளவு என்று வரையறை படுத்தும் நியதி என்கின்ற தத்துவமாயும்.

தாவில் உயிர்க்குக் கிரியை அறிவு இச்சை எழுப்பும் சார்பாயும்:

கெடாத உயிர்க்குக் கிரியை எழுப்புகின்ற கலை என்கின்ற தத்துவமாயும், அறிவை எழுப்புகின்ற வித்தை தத்துவமாயும இச்சையை எழுப்புகின்ற இராகதத்துவமாயும்.

விடயத்தில் தங்கு கறங்கு ஒப்ப மேவி இயக்குதலாயும்:

உலக விஷயங்களிலே தங்கி இருந்து காற்றாடியைப் போல் திரிந்து இயக்குகின்ற புருட தத்துவமாயும்

விடயம்தான் என்ன வேறுஅறமால் தரலாயும்:

உலக விடயங்களே தான் என்று கருதும்படி மயக்கத்தைச் செய்கின்ற மாயை என்னும் தத்துவமாயும்,

விளங்குறுமால் என்னே!

வித்தியாதத்துவம் ஏழுவிதமாய் விளங்கும் என்க.

இப்பாட்டு வித்தியா தத்துவத்தை சிவதத்துவம் இயக்கும் என்பதையும் புவனங்கள் இத்தனை என்பதையும் போகங்கள் இவை என்பதையும் கூறி இவற்றை உயிர்கள் யான்எனது என்கின்றஇருவகைப் பற்றுக்கும் உரியதாகக் கொள்ளும் என்பதையும் கூறுகின்றது.

மன்னியநல் சிவகரணம் வித்தியா கரணத்தை
மருவிநடத் தும்புவனம் இருநூற்றி இருபான் நான்கு
உன்னுறுபோ கம்சிவிகை கவிகைபரி கரிதேர்
உயர்கலையா திகள்கந்தம் சடுரசமாம் தொகுதி
துன்னுறுபல் லுருவங்கள் வனிதாதி பரிசம்
தோற்றிடுகீ தாதிகளாம் மற்று இவையுள் தனுவைப்
பன்னலுறு கரணத்தை யான்எனஒண் புவனம்
பகர்போகம் எனதெனஆர் உயிர்கருத வைத்தே **15**

பதவுரை:

மன்னியநல் சிவகரணம் வித்தியா கரணத்தை மருவி நடத்தும்:-

பொருந்திய சிவம், சத்தி, சாதாக்கியம், மகேசம், சுத்த வித்தை என்கின்ற சிவதத்துவங்கள் ஐந்தும் மேலே கூறிய வித்தியா தத்துவங்களைப் பொருந்தி இயக்கும்.

புவனம் இருநூற்றி இருபான் நான்கு:-

புவனம் இருநூற்றி இருபத்து நான்கு ஆகும்.

உன்னுறு போகம் சிவிகை, கவிகை பரிகரிதேர் உயர் கலை யாதிகள், கந்தம், சடுரசமாம் தொகுதி, துன்னுறு பல்லுருவங்கள் வனிதாதி பரிசம், சாற்றிடு கீதாதிகளாம்:-

கருதும் போகங்களைக் கூறில், பல்லக்கு என்றும், குடை என்றும் குதிரை என்றும், யானை என்றும், தேர் என்றும், உயர்ந்த ஆடை முதலானவை என்றும் பாகுபட்டு வருவனவாய், மூக்கினால் நுகரும் மணப்பொருளாயும், நாக்கினால் நுகரும் அறுசுவைப் பொருளாயும், கண்ணினால் பார்த்து அநுபவிக்கப் படும் உருவப் பொருளாயும், ஆண்குறி பெண்குறி என்னும் இருவகை குறிகளால் உற்று அநுபவிக்கப்படும் பெண்வடிவங் களாயும், காதினால் கேட்டு அநுபவிக்கப் பெறும் இசை இன்பங்களாயும் போகம் வரும்.

மற்று இவையுள் தனுவைப் பன்னலுறு கரணத்தை யான் என ஒண் புவனம் பகர்போகம் எனது என ஆர்உயிர் கருதவைத்தே:

மேலும் மேலே சொன்ன தனு கரண புவன போகங்கள் என்ற நான்குள் உயிரானவை தனுவையும் கரணத்தையும் யான் என்று பற்றுச் செய்யும்படியும், புவன போகங்களை எனது என்று பற்றுச் செய்யும்படியும் இறைவன் வைத்து, (எச்சப் பொருளை அடுத்த பாட்டில் கொள்க).

சுகதுன்பம் துய்ப்பித்தல் திதியாகும்; உயிர்க்குத்
தோற்றியஎல் லாம்ஒடுக்கல் சொல்லுறு சங்காரம்;
மிகுசிருட்டி திதிசங்கா ரத்துஉழன்றும் இடரை
வெறுக்காது ருசிப்பித்தல் விளம்புதிரோ பாவம்;
பகர்பொருளைப் பகுத்தறிவித் திடுதல் அநுக்கிரகம்;
பரம்பரன்ஐந் தொழிலாலே உறுசடசித்து எவைக்கும்
அகல்தொழிலும் அறிவும்உதித் திடும்இதனால் அன்றே
அகிலமும்இங்கு அவன்அசையில் அணுஅசையும்
எனுமால். 16

மேலே சொன்ன தனு, கரண, புவன, போகங்கள் என்ற நான்குள் உயிரானவை தனுவையும் கரணத்தையும் யான் என்று பற்றுச் செய்யும்படியும், புவன போகங்களை எனது என்று பற்றுச் செய்யும்படியும் இறைவன் வைத்து,

பதவுரை:

சுகதுன்பம் துய்ப்பித்தல் திதியாகும்:

இன்ப துன்பங்களை அநுபவிக்கச் செய்தல் திதியாகும்.

உயிர்க்குத் தோற்றிய எல்லாம் ஒடுக்கல் சொல்லுறு சங்காரம்:

உயிர்கள் இவ்வுலகில் வாழ்வதற்குப் பயன்படும்படி உண்டாக்கிய தனு, கரண, புவன, போகங்களை எல்லாம் அழித்தல் சங்காரமாகும்.

மிகு சிருட்டி திதி சங்காரத்து உழன்றும் இடரை வெறுக்காது ருசிப்பித்தல் விளம்பு திரோபாவம்:

உயிர்களெல்லாம் இறைவன் செய்கின்ற படைத்தல், காத்தல், அழித்தல் என்கின்ற மூன்று தொழில்களிலே மாறி மாறி உழன்றும், உண்டாகும் துன்பங்களை வெறுத்து விட்டு விடாமல் அதைப் பற்றும்படியாகச் செய்வது திரோபாவம் என்னும் மறைப்புச் சத்தியாகும்.

பகர்பொருளைப் பகுத்தறிவித்திடுதல் அநுக்கிரகம்:

பதி, பசு, பாசம் என்று சொல்லப்படுகின்ற மூன்று பொருள் களையும் பிரித்து அவற்றின் இலக்கணங்களை அறிந்து உண்மை அறிவு பெறச் செய்தல் அருள் என்கின்ற அநுக்கிரகமாகும்,

பரம்பரன் ஐந்தொழிலாலே உறுசடசித்து எவைக்கும் அகல் தொழிலும் அறிவும் உதித்திடும்:

மேலான இறைவன் செய்கின்ற படைத்தல், முதலான ஐந்து தொழில்களால் சடமாகிய அறிவில்லாத பொருளுக்கு இயங்குகின்ற தொழிலும், சித்தாகிய ஆன்மாவிற்கு அறிவு விளக்கமும் உண்டாகும்

இதனால் அன்றே:

தொழிலும், அறிவும், உதிக்கும் காரணத்தினாலே,

அகிலமும் இங்கு அவன் அசையில் அணு அசையும் எனுமால்.

உலகம் இறைவன் இயக்கினால் சதசித்தாகிய சிறு பொருளும் இயங்கும் என்று கூறும்.

இறைவன் ஐந்தொழில் புரிபவன் ஆனால் அவனை நாம் எவ்வாறு அறிந்து கொள்வது

அவ்விறைவன் இவ்வகைஐந் தொழில்புரிவ தானால்
அவனைஎவ்வாறு அறிவதெனில்? அநுமானத் தாலே
செவ்விதின்முன் அறிவித்தங்கு அவனடியைச் சேரும்
திகழுறுநல் விரகும்இனிச் செப்புதுநீ கேட்டி
தவ்வலரும் சந்திரசூ ரியர்உடுவிண் மேகம்
சாகரம்மா மலைதீகால் சரஅசர பேதம்
ஒவ்வலுறாது உறுபஞ்ச பூதமும்மற் றுளவும்
உயிரால்உண் டாக்குதல்கூ டாதமுறை யானும். 17

பதவுரை:

அவ்விறைவன் இவ்வகை ஐந்தொழில் புரிவதானால் அவனை எவ்வாறு அறிவதெனில்?

பரம்பரனாகிய அவ்விறைவன் மேலே கூறிய முறையில் ஐந்து தொழில்களைசெய்பவன் ஆனால் அவ்விறைவனை, எந்த அளவைகளால் அறிவது என்று கேட்டால்,

அநுமானத்தாலே செவ்விதின் முன் அறிவித்து (பின்) அங்கு அவன்அடியைச் சேரும் திகழுறும் நல்விரகும் இனிச் செப்புதும்நீ கேட்டி:

எட்டு அளவைகளுள் ஒன்றாகிய அநுமானப் பிரமாணத் தாலே முன்னே விளங்கும்படி அறிவித்து பின்னர் அவனுடைய

திருவடியை அடைகின்ற உபாய நெறிகளையும் யாம் அறிவிப்போம். நீ அதனைத் தெளிவாகக் கேட்பாயாக.

விளக்கம்:

அறிஞர் உண்மைப் பொருளைக் காட்சி முதலான எட்டு அளவைகளால் அறிவிப்பர். அந்த எட்டு அளவைகளாவன:– 1. காட்சி 2. கருதல் 3. உரை 4. அபாவம் 5. அருத்தாபத்தி 6. ஒப்பு 7. பாரிசேடம் 8. சம்பவம். இந்தஎட்டுள் காட்சி அளவையும், ஆகம அளவையும், அநுமான அளவையும், ஆகிய மூன்றும் சிறந்தனவாகும். அநுமான அளவையாவது; புகை முதலான ஒரு குறியால் நெருப்பு உண்டு என்பதை அறிவால் கருதி உணர்வதாம். இதனாலே இதற்கு கருதல் அளவை என்றும், அநுமான அளவை என்றும் பெயர் கூறப்படும். அநுமானித்தல்–கருதுதல் என்று பொருள். இவ் அநுமான அளவை தன் பொருட்டு அநுமானம் என்றும், பிறர் பொருட்டு அநுமானம் என்றும் இரு வகைப்படும். தன் பொருட்டு அநுமானமாவது புகை முதலான ஏதுக்களால் நெருப்பு உண்டு என்று தான் தெளிதலாகும். பிறர் பொருட்டு அநுமானமாவது தெளிந்த ஒன்றை பிறர்க்கு ஐந்து வகையான சொற்களால் உணர்த்துவதாகும். ஐந்து வகையான சொற்களாவன: 1. மேற்கோள் 2. ஏது 3. எடுத்துக்காட்டு 4. உபநயம் 5. நிகமனம்.

மேற்கோளாவது: இந்த மலை நெருப்பினை உடையது என்று கூறுவர். புகை உண்மையால் என்பது *ஏது* அடுக்களைப் போல என்பது *எடுத்துக்காட்டு*, யாது யாது புகை உடைத்து அது அது நெருப்புடைத்து என்று கூறுதல் *உபநயம்*, இதுவும் அது போன்றது என்று கூறுவது நிகமனம்.

மேலே கூறிய ஐந்து உறுப்புக்களுள் ஏது முக்கிய மானது என்க. ஆசிரியர் கடவுள் உண்டு என்பதற்கு அநுமான உறுப்புக்களில் பல ஏதுக்களை வரிசையாகச் சொல்லுகின்றார். கடவுள் உண்டு என்பதற்கான ஏதுவை வரிசையாகக் காண்க.

தவ்வல்அரும் சந்திர சூரியர் உடு விண் மேகம் சாகரம் மாமலை தீ கால் சர அசரபேதம் ஒவ்வலுறாது உறுபஞ்ச பூதமும் மற்றுளவும் உயிரால் உண்டாக்குதல் கூடாத முறையானும்:

கெடுதல் அற்ற திங்களும், ஞாயிறும், நட்சத்திரங்களும் இவற்றிற்கு இடமான வானமும், அவற்றிடையே இயங்கும் மேகங்களும், கடலும், பெரியமலையும், நெருப்பும், காற்றும், இயங்குதிணை நிலைத்திணை என்கின்ற இருவகை உயிர் வர்க்கங்களும், ஒன்றோடு ஒன்று பொருந்தாத நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்கின்ற ஐந்து பஞ்சபூதக் கூறும் என்னும் இவற்றைப் போல மற்றுமுள்ள பொருள்களும் உயிர் வர்க்கங்களால் உண்டாக்க முடியாத பொருள்களாகும்.

ஆகையினால் இவற்றை எல்லாம் தருவதற்கு ஒரு இறைவன் வேண்டும் என்று கருதலளவையால் கருதுக.

சந்திரசூ ரியர்உடுஅந் தரம்அதில்எந் நாளும்
தத்தம்முறை வழுவாது கொட்புறுத லானும்;
கந்தரம்வா ரியின்மொண்டே பொழிதருத லானும்
கடல்தன்எல் லையைமீறிக் கடவாமை யானும்
செந்தழல்மா ருதமீறிச் செறியாமை யானும்
திகழ்காலம் பலவிதமாய்ச் சேர்ந்துறுத லானும்
மந்திரத்தால் பாம்பாதி வசம்ஆகை யானும்
மன்னுயிர்பா ரம்பரைமா றாதுஉறைத லானும்.

பதவுரை:

சந்திர சூரியர் உடு அந்தரம் அதில் எந்நாளும் தத்தம் முறை வழுவாது கொட்புறுதலானும்:

திங்களும், ஞாயிறும், நட்சத்திரங்களும் வானத்திடத்தே தம்தம் நிலை வழுவாமல் சுழன்று கொண்டு இருத்தலானும், இப்படி சுழலச்செய்யும் இறைவனை அநுமானத்தால் அறியலாம்.

கந்தரம் வாரியின் மொண்டே பொழி தருதலானும்:

மேகம் கடலிடத்தே நீரை முகந்து உலகத்துக்கு மழையாகப் பொழிதலானும், அப்படி பொழியச்செய்யும் இறைவன் உண்டு என்பதை அநுமான அளவையால் அறியலாம்.

கடல் தன் எல்லையை மீறிக் கடவாமையானும்:

கடலானது தனக்கு எல்லையாகிய கரையைக் கடவாமை யானும், அப்படி கடவாமையைச் செய்யும் இறைவன் உண்டு என்பதை அநுமான அளவையால் அறியலாம்.

செந்தழல் மாருதம் மீறிச் செறியாமையானும்:

உலகத்தில் உள்ள நெருப்பும், காற்றும், அளவுக்குமீறி எரிக்காமலும், வீசாமலும் இருத்தலால், அதைச் செய்யும் இறைவன் உண்டு என்பதை அநுமானத்தால் அறியலாம்.

திகழ்காலம் பலவிதமாய்ச் சேர்ந்துறுத லானும்:

விளங்குகின்ற காலம் என்கின்ற ஒன்று வெய்யில் கால மாகவும், மழைக்காலமாகவும், பனிக்காலமாகவும் நடத்தலால் அவற்றை அவ்வாறு செய்யும் இறைவன் உண்டு என்பதை அநுமானத்தால் அறியலாம்.

மந்திரத்தால் பாம்பாதி வசம் ஆகையானும்:

மந்திரத்தின் ஆற்றலால் பாம்பு முதலான நச்சுப்பொருள்கள் மக்களுக்கு வசப்பட்டு நடத்தலால் அம்மந்திர சக்திக்கு ஏதுவான இறைவன் உண்டு என்பதை அநுமானத்தால் அறியலாம்.

மன்னுயிர் பாரம்பரை மாறாது உறைதலானும்:

நிலைபெற்ற எழுவகைத் தோற்றமான உயிர்வர்க்கங்க ளெல்லாம் பழைய காலத்தில் தோன்றிய முறைபடியே இன்றும் மாறாமல் இருந்து வருதலானும், அப்படி மாறாமல் இருந்து வருவதற்கு ஏதுவான இறைவன் உண்டு என்பதை அனுமானத் தால் அறியலாம்.

செந்நீரில் வெண்ணீர்போய்ச் சேர்ந்துஒருபால் திங்கள்
சிந்துஉதிரம் சிந்தாமல் பந்தமுறத் தங்கி
அந்நீர்கண் மண்ணதனால் சித்திரிகன் பதுமை
ஆக்குதல்போல் ஒருவரும்பண் ணாதுஆக்கை யாகித்
தம்நீர்மை குறையாமல் தாயுதரத் திருந்து
தகுகடப்பூ சனிப்பிஞ்சு தான் பருத்து வெளியில்
மன்னீர்மை குன்றாமல் கடமும்உடை யாமல்
வருவதுபோல் யோனிவழி குழவிவர லானும். 19

பதவுரை:

செந்நீரில் வெண்ணீர் போய்ச் சேர்ந்து ஒருபால் திங்கள் சிந்து உதிரம் சிந்தாமல் பந்தமுறத் தங்கி அந்நீர்கண் மண்ண தனல் சித்திரிகன் பதுமை ஆக்குதல் போல் ஒருவரும் பண்ணாது ஆக்கையாகித் தம்நீர்மை குறையாமல் தாய் உதரத்து இருந்து தகுகடப் பூசனிப் பிஞ்சிதான் பருத்து வெளியில் மன்னீர்மை குன்றாமல் கடமும் உடையாமல் வருவது போல் யோனிவழி குழவி வரலானும்:

தாயிடத்தில் உள்ள சுரோனிதம் என்னும் செந்நீரில் தந்தையினிடத்தில் உள்ள சுக்கிலம் என்னும் வெண்ணீர்போய் சேர்ந்து, ஒன்றாவது மாதத்தில் இருந்து உதிரமாக மாறி அழியாமல் ஒன்றோடு ஒன்று சேரும் வகையில் சேர்ந்து, அந் நிலையிலே சித்திரம் செய்யும் ஒருவன் மண்ணாலே பதுமை

செய்தல் போல ஒருவரும் செய்யாமல் தானே வளர்ந்து, உடம்பாகி தாய் வயிற்றிலிருந்து தன்னுடைய தன்மை குறையாமல், குடத்தினுள் இறங்கிக் காய்த்த பூசனிப்பிஞ்சு தன் தன்மையில் குறையாமலும், குடமும் உடையாமல் வெளிவருதல் போல, தாயின் யோனி வழியாக குழந்தை பிறத்தலானும், இதனை இவ்வாறு செய்கின்ற இறைவன் ஒருவன் உண்டு என்பதை அனுமானத்தால் அறியலாம்.

யானைமுதல் யாவைகளும் ஆண்பெண்அவை கூடில்
அவ்வுருவ வேடம்போட்டு ஆங்குவர லானும்
ஊனமில்ஆண் பெண்கூடாது உயிர்தோன்ற லானும்
உறும்விதைவர்க் கப்படிதா வரம்எழுத லானும்
தீனமுள்இந் திரியபங்கர் அங்கமதில் பங்கர்
திகழ்உருவி லார்நோயர் இவைகள்இலா வடிவர்
ஆனமிடி யினர்செலவர் அறிஞர்அறி வில்லார்
அதிபாவ புண்ணியர்க ளாகிஉற லானும். 20

பதவுரை:

யானைமுதல் யாவைகளும் ஆண்பெண் அவை கூடில் அவ் உருவ வேடம் போட்டு ஆங்கு வரலானும்:

யானை முதல் எறும்பு ஈறான ஆண் பெண் கூடினால் கூடியவற்றின் உருவத்தை மேற்கொண்டு அவை உலகத்தில் பிறத்தலானும், அப்படி நியதியோடு செய்கின்ற இறைவன் உண்டு என்பதை அனுமானத்தால் அறியலாம்.

ஊனமில் ஆண்பெண் கூடாது உயிர் தோன்றலானும்:

குற்றமில்லாத ஆணும் பெண்ணும் சேராமலேயே பல உயிர்கள் தோன்றுதலானும், அப்படி தோன்றுவதற்குக் காரணமான இறைவன் உண்டு என்பதை அனுமானத்தால் அறியலாம்.

உறும் விதை வர்க்கம்படி தாவரம் எழுதலானும்:

எந்தவிதை போட்டோமோ அந்த விதைப்படி தாவர வர்க்கங்கள் தோன்றுதலானும், அப்படி தோன்றுவதற்குக் காரணமான இறைவன் உண்டு என்பதை அநுமானத்தால் அறியலாம்.

தீனமுள் இந்திரிய பங்கர் அங்கமதில் பங்கர் திகழ் உருவிலார் நோயர் இவைகள் இலாவடிவர் ஆனமிடியினர் செல்வர் அறிஞர் அறிவில்லார் அதிபாவ புண்ணியர்களாகி உறலானும்:

எளிமையுள்ள கண், காது முதலான இந்திரியங்கள் இல்லாதவரும், கை, கால் முதலான உறுப்பு இல்லாதவரும், அழகான உருவம் இல்லாதவரும், நோயுடையவரும், மேலே கூறியவைகள் இல்லாத நல்ல வடிவத்தை உடையவரும், பொருந்திய வறுமை உடையவர்களும், பொருள் உடையவரும், அறிவுடையவரும், அறிவில்லாதவரும், அதிகமான பாவம் செய்கின்றவர்களும், அதிகமான புண்ணியம் செய்கின்றவர்களும் என மேலே கூறியபடி பல்வேறு வகையினராய் இருத்தலானும் அவரவர்கள் வினைநோக்கி அவ்வாறு செய்கின்ற இறைவன் உண்டு என்பதை அநுமானத்தால் அறியலாம்.

ஒன்பதுவா யுடன்ஒருவாய் விட்டுஉடலில் உறைய
உயிர்கட்குக் கூடாமை யானும்ஓரங்க நீங்கின்
தன்சுயமாய் வருவிக்கக் கூடாமை யானும்
தனுக்கள்தொறும் ஓர்காற்றுத் தங்கிஉற லானும்
அன்புடன்ஆண் பிள்ளைவேண்டிற் பெண்ணுறுத லானும்
அழகியபெண் வேண்டுமிடத்து ஆண்உறுத லானும்
தென்பயில்ஆண் பெண்வேண்டில் சிகண்டிஉற லானும்
சிந்தையில்எண் ணியவாறே சேராமை யானும். 21

பதவுரை:

ஒன்பது வாயுடன் ஒருவாய் விட்டு உடலில் உறைய உயிர்கட்குக் கூடாமை யானும்:

ஒன்பது வாயுடன் கூடிய உடலிலே அன்றி ஒருவாய் குறைந்துவிட்டாலும் அவ்வுடலில் உயிர் நன்கு வாழ இயலாமை யானும், இப்படி இயலாமையைச் செய்கின்ற இறைவன் உண்டு என்பதை அநுமானத்தால் அறியலாம்.

ஓர் அங்கம் நீங்கின் தன் சுயமாய் வருவிக்கக் கூடாமையானும்:

உடலில் ஓர் உறுப்பு நீங்கினால் அவ்வுறுப்பைத் தானாக உண்டாக்கிக் கொள்ள முடியாமையானும், இப்படி குறைபாடு களைச் செய்கின்ற இறைவன் உண்டு என்பதை அநுமானத்தால் அறியலாம்.

தனுக்கள்தோறும் ஓர்காற்றுத் தங்கி உறலானும்:

ஒவ்வொரு உடம்புகள் எல்லாவற்றுள்ளும் ஒரு மூச்சுக் காற்று தங்கி இயக்கி வருதலானும், அப்படி மூச்சுக்காற்றால் இவ்வுடம்பை இயக்குகின்ற இறைவன் உண்டு என்பதை அநுமானத்தால் அறியலாம்.

அன்புடன் ஆண்பிள்ளை வேண்டில் பெண்ணுறுதலானும் அழகிய பெண் வேண்டுமிடத்து ஆண் உறுதலானும், தென்பயில் ஆண்பெண் வேண்டில் சிகண்டி உறலானும், சிந்தையில் எண்ணியவாறே சேராமையானும்:

நமக்கு ஆண்குழந்தை பிறக்கவேண்டும் என்று விரும்பினால் பெண்குழந்தை பிறத்தலானும், நமக்கு அழகிய பெண்குழந்தை பிறக்கவேண்டும் என்று கருதுமிடத்து ஆண்குழந்தை பிறத்தலானும், அழகோடு கூடிய ஆண்குழந்தை, பெண்குழந்தை வேண்டினால் அலியாகப் பிறத்தலானும், மேற்கூறியவைகளைப் போன்றவை நாம் எண்ணியது எண்ணியதுபோல முடியாமை யானும், இப்படிச் செய்கின்ற இறைவன் ஒருவன் உண்டு என உணரலாம்.

மகவுஇனிவேண் டாம்எனவும் மகவுவருத லானும்
மகவுக்காய்ப் பால்அருந்த மரித்துறுத லானும்
மிகைசெய்தான் தனைஒருவன் வெட்டுமிடத்து ஒருவன்
விடுவித்து ஆள்கையினானும் விளம்புறுமற் றொருவன்
பகைவர்தமக்கு அஞ்சிஒளித் துறவும்அவர் கையில்
படலானும் தாவரங்கள் பரிந்துதமைக் காக்கும்
தகைஅறிவி லாதிருந்தும் தங்கியுற லானும்
சாற்றியமுற் பிற்பிறவி தாம்அறியா மையனும். 22

பதவுரை:

மகவு இனி வேண்டாம் எனவும் மகவு வருதலானும்:

இனி மகப்பேறே வேண்டாம் எனக் கருதினால் மகவு தோன்றுதலானும், அப்படிச் செய்கின்ற இறைவன் உண்டு என்பதை அநுமானத்தால் அறியலாம்.

மகவுக்காய் பால் அருந்த மரித்துறுத லானும்:

குழந்தை உயிர்வாழ வேண்டும் என்று கருதி தாய் முதலானோர் அக்குழந்தைக்குப் பாலினை உண்பிக்க, சில

சமயத்தில் அக்குழந்தை பால் புரையேறி இறந்து விடுதலானும், அவ்வாறு செய்கின்ற இறைவன் உண்டு என்பதை அநுமானத்தால் அறிாலாம்.

மிகை செய்தான் தனை ஒருவன் வெட்டுமிடத்து ஒருவன் விடுவித்து ஆள்கையினாலும்:

குற்றம் செய்த ஒருவனை ஒருவன் வெட்டுமிடத்து, ஒருவன் இடையிலே வந்து வெட்டாமல் தடுத்து காப்பாற்றுதலானும், இப்படிச் செய்கின்ற இறைவன் உண்டு என்பதை அநுமானத்தால் அறியலாம்.

விளம்புறு மற்றொருவன் பகைவர்தமக்கு அஞ்சி ஒளித்துறவும் அவர்கையில் படலானும்:

விளங்குகின்ற மற்றொருவன் பகைவனுடைய கையில் அகப்படுவதற்கு அஞ்சி ஒளிந்துகொள்ள, அவன் அப்பகைவன் கையிலே அகப்படுதலானும் இப்படிச் செய்கின்ற இறைவன் உண்டு என்பதை அநுமானத்தால் அறியலாம்.

தாவரங்கள் பரிந்து தமைக்காக்கும் தகைஅறிவிலாதிருந்தும் தங்கியுறலானும்:

தாவரம் என்கின்ற மரம் முதலானவை தம்மைக் காத்துக் கொள்கின்ற செயலைச் செய்யமுடியாமல் இருந்தாலும், அவை உலகத்தில் நிலையாகத் தங்கி தளிர்த்து, பூத்து, காய்த்து, பழுத்து வருதலானும், அவற்றைக் காத்துவருகின்ற இறைவன் உண்டு என்பதை அநுமானத்தால் அறியலாம்.

சாற்றிய முற்பிற் பிறவி தாம் அறியாமையானும்:

சொல்லப்பட்ட ஒருவர் முன்னே பிறந்த பிறப்பையும், பின்னே பிறக்கப்போகும் பிறப்பையும் அறியாமையானும், இப்படி அறியாமையைச் செய்து இயக்குகின்ற இறைவன் ஒருவன் உண்டு என்பதை அநுமானத்தால் அறியலாம்.

இம்முறையே அளவிறந்த பேதமதாய்ச் சடமும்
இலங்குஉயிரும் சுதந்தரம்இன் றாய்நிகழ்த லானும்
கம்மியநல் குயவன்கைக் கோளன்தே வாரங்
கடபடம் உண் டாக்கிடும்ஓர் காரணமே போலச்
செம்மை தரும் அருள்கோடாது இறைஉயிர்கள் செய்த
தீவினைநல் வினைக்குஈடாய்ச் செறிதனுவா
திகள்தந்த
அம்முறையே அளித்து அழிப்பன் அருள்தருவான் அதனால்
அக்கடவுள் உளன்எனநீ மிக்கதிடத்து அறியே. 23

பதவுரை:

இம்முறையே அளவிறந்த பேதம் அதாய்ச் சடமும் இலங்கு உயிரும் சுதந்தரம் இன்றாய் நிகழ்தலானும்:

மேலே சொன்ன முறைப்படி அறிவில்லாத சடப்பொருள் களும், அறிவுடைய உயிர்ப்பொருள்களும் தம்உரிமையின்றி இயங்குவதானும், அவற்றை இயக்குகின்ற இறைவன் உண்டு என்பதை அநுமானத்தால் அறியலாம்.

கம்மியன்நல் குயவன் கைக்கோளன் தேவாரங் கடபடம் உண்டாக்கிடும் ஓர் காரணமே போலச் செம்மை தரும் அருள் கோடாது இறை உயிர்கள் செய்த தீவினை நல்வினைக்கு ஈடாய்ச் செறிதனுவாதிகள் தந்து அம்முறையே அளித்து அழிப்பன் அருள் தருவான் அதனால் அக்கடவுள் உளன் என நீ மிக்க திடத்து அறியே:

கன்னானும், நல்லகுயவனும், கைக்கோளனும் முறையே வார்ப்படப் பொருள்களை வார்த்தும், சட்டி முதலானவைகளைச் செய்தும், ஆடைகள் பலவற்றைச் செய்தும் வருதல் போல, இறைவன் தன் அருள் குறையாமல் உயிர்கள் செய்த நல்வினை தீவினைகளுக்கு ஈடாக தனு கரண புவன போகங்களைப் படைத்து அம்முறையே காத்து, அழிப்பன், பின்னாலே அருள்

செய்வான் அதனால் ஐந்தொழில் செய்கின்ற இறைவன் உண்டு என்பதை மிக உறுதியாக அறிவாயாக.

விளக்கம்:

ஒருவர் தனக்குள்ள விபரீத அறிவால் கடவுள் இல்லை என்றும், ஐய உணர்வால் கடவுள் உண்டோ, இல்லையோ என்றும் கருதாமல் உண்மை அறிவால் கடவுள் உண்டு என்றே அறிக என்பார் மிக்க திடத்து அறியே என்றார்

இவ்விடத்தில் திருஞானசம்பந்தப் பெருமானும் தாம் அருளிய திருக்கடைக்காப்பில் ''ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்குச் சோதிக்க வேண்டா சுடர் விட்டுளன் எங்கள் சோதி'' என்று கூறி கடவுள் உண்மையை நிலைநாட்டுவதை அறிஞர் ஆழ்ந்து உணர்க.

கீழ்வரும் இரண்டு பாடல்களும் ஐயவினாவும் அதற்கு விடையுமாகும்

நன்றேநீர் உரைத்தனசம் மதித்தேன்; நான்முகவன்
ஆதியர்கா சிபன், விசுவா மித்திரன்ஆ தியர்கள்
ஒன்றோடுஒன்று ஒவ்வாத சமயகட வுளர்கள்
உறுதொழில் செய்குவர்என்பது என்னையது கேள்நீ
குன்றாவோர் குடையில்கு வலயம்முழுது ஆள்வோன்
குரைகழல்சே விதர்அவன்தன் தொழில்புரிவார் எனினும்
தென்றார்அவ் வரசனதுஆ ணையைவிடவே நிகழாச்
செய்தியின், மெய் இறைஅருளால் செய்வர்அவர் தொழிலே. 24

பதவுரை:

நன்றேநீர் உரைத்தன சம்மதித்தேன்:

கடவுள் உண்டு என்பதற்குச் சான்றாக தாங்கள் நன்றாக எடுத்துக் கூறிய செய்திகளை எல்லாம் கேட்டு, ஆராய்ந்து,

தெளிந்து, கடவுள் உண்டு என்பதை மிக்க திடமாக உடன் பட்டேன்.

நான்முகவன் ஆதியர் காசிபன் விசுவாமித்திரன் ஆதியர்கள் ஒன்றோடு ஒன்று ஒவ்வாத சமயகடவுளர்கள் உறுதொழில் செய்குவர் என்பது என்னை அது கேள் நீ?

பிரமதேவன் முதலான கடவுளர்கள், காசிபன், விசுவாமித்திரன் முதலான முனிவர்கள், ஒன்றோடு ஒன்று ஒவ்வாத பல சமயவாதிகளின் தெய்வங்கள் ஆகிய இவர்கள் எல்லாம் படைத்தல் முதலான காரியங்களைச் செய்வார்கள் என்று கூறினால் அதனாலே வரும் செய்தி என்ன? என்று வினாவில்,

குன்றாவோர் குடையில் குவலயம்முழுது ஆள்வோன் குரைகழல் தேவிதர் அவன்தன் தொழில் புரிவார் எனினும் தென்றார் அவ்வரசனது ஆணையை விடவே நிகழாச் செய்தியின் மெய் இறைஅருளால் செய்வர் அவர் தொழிலே:

குறையாதபடி தன் ஆணையாகிய குடையின் கீழ் இவ்வுலகத்தை எல்லாம் காத்து வருகின்ற பேரரசன், அவனுடைய திருவடியைச் சேவித்து அவன் பணி புரிந்து வருகின்ற அமைச்சர் முதலானவர்களும் அழகிய மாலையை அணிந்த அரசனுடைய ஆணையைக்கடந்து செயல்படமாட்டார்கள் ஆகையினாலே மேலே சொன்னவர்களும் உண்மையான பரம்பொருளின் ஆணையைக் கடந்து இவர்கள் தொழில் செய்யார் என்பதை உணர்க.

விளக்கம்:

பிரமன் முதலானவர்களும் முழுமுதற் கடவுளின் ஆணையைக் கடவாது தொழில் செய்வர் என்பது கருத்து.

மெய் இறை – முழுமுதற் கடவுள்.

இந்தஉலகு ஆள்இறைவன் தனைஅறியாது, அமைச்சர்
எண்ணுறுமற் றயலோர்ஓர் தொழில்புரிவார் அதுபோல்
அந்தஇறை தனைஅறியாது அயன்முதலாம் அவர்கள்
ஐந்தொழில்கள் சிற்சிலசெய் யாரோஇங்கு என்னின்
நந்துறுபல் லுயிர்கள்தமை மலத்தினைவிட்டு எடுத்த
நாள்தொடங்கி வீட்டிருத்து நாள்காறும் அவைசெய்
பந்தவினை அறிந்துஅருந்தும் அஃதல்லால் அந்தப்
பண்ணவர்மா முனிவர்க்கும் பண்ணுவன்ஐந்தொழிலே. 25

பதவுரை:

இந்த உலகு ஆள்இறைவன் தனைஅறியாது, அமைச்சர் எண்ணுறு மற்றயலோர் ஓர் தொழில் புரிவார் அதுபோல் அந்த இறைதனை அறியாது அயன் முதலாம் அவர்கள் ஐந்தொழில்கள் சிற்சில செய்யாரோ இங்கு என்னின்?

இந்நில உலகத்தை ஆட்சி செய்கின்ற அரசன், அவனை அறியாமல் அமைச்சரும், எண்ணப்பட்ட சேனாதிபதி முதலான பிறரும் தொழில் செய்வதுபோல, அந்த முழுமுதல் கடவுளை அறியாமல் பிரமன் முதலானோர் ஐந்து தொழில்களில் சிலவற்றை செய்வார்களோ? என்று கேட்டால்,

நந்துறுபல்லுயிர்கள் தமை மலத்தினை விட்டு எடுத்த நாள் தொடங்கி வீட்டிருத்து நாள்காறும் அவைசெய் பந்தவினை அறிந்து அருத்தும் அஃதல்லால் அந்தப் பண்ணவர் மாமுனிவர்க்கும் பண்ணுவன் ஐந்தொழிலே:

இறைவன் முழுமுதற் கடவுள் ஆதலால், பொருந்திய பல உயிர்களை ஆணவ மலத்திலிருந்து எடுத்து சகலாவத்தைக்குக் கொண்டுவந்து, சுத்தா அவத்தையாகிய மோட்ச வீட்டில் இருக்கச் செய்யும் வரையிலும், அவ்வுயிர்க் கூட்டங்கள் செய்கின்ற பற்றுக்கு ஏதுவான வினைக் கூட்டங்களை எல்லாம் அறிந்து, அவற்றை நீக்கும். அதுவன்றி அந்த பிரமன் முதலானோர்க்கும் ஐந்தொழிலைச் செய்வன்.

திருவடி சேரும் விரகு

நனிஉயர்ந்தோர் யாவர்க்கும் யாவைக்கும் மேலோர்
நாயகன்உண்டு என்று அறிவித் திடநீகைக்கொண்டாய்
இனிஅவன்தன் சீரடிசேர் விரகும்உரைத் திடுதும்
இதைமாறாது இதயத்தில் பரிவாகக் கொள்வாய்
முனம்உரைசெய் ஐந்தொழில்போல் சூக்குமகா ரணத்தும்
உண்டுஅதனைத்தெளிவது அவன் திருவடியைச் சேரும்
தனிவிரகுஇங்கு அதுஎதுஎனில் சாற்றியஐந் தொழில்கள்
சடசித்தோர் இரண்டின்இடை தாம்பகுப்பாய் நிகழும். **26**

பதவுரை:

நனி உயர்ந்தோர் யாவர்க்கும் யாவைக்கும் மேலோர் நாயகன் உண்டு என்று அறிவித்திட நீ கைக் கொண்டாய்:

மிக உயர்ந்த தேவர் முதலான எல்லோர்க்கும் மிக உயர்ந்த கற்பக விருட்சம் முதலிய எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு தலைவன் என்று யாம் அறிவிக்க நீ உணர்ந்து கொண்டாய்.

இனி அவன் தன் சீரடிசேர் விரகும் உரைத்திடுதும் இதை மாறாது இதயத்தில் பரிவாகக் கொள்வாய்:

இனிமேல் அத்தகைய இறைவனுடைய சிறப்புற்ற அடியை எந்தக் காலத்திலும் மாறுபாடு இல்லாமல் மனத்தில் உணர்ந் திருக்கும் முறையை நன்றாக ஏற்றுக் கொள்வாயாக.

முனம் உரைசெய் ஐந்தொழில்போல் சூக்கும காரணத்தும் உண்டு அதனைத் தெளிவது அவன் திருவடியைச் சேரும், தனி விரகு இங்கு அது எது எனில்?

முன்னர் கூறிய தூல ஐந்தொழில்போல, அவ்ஐந்தொழில் சூக்குமமாகவும், காரணமாகவும், நிகழ்தல் உண்டு. அவ்

இரண்டையும் நன்றாகத் தெளிவது அவ்விறைவனுடைய திருவடியைச் சேருவதற்குக் காரணமான சாதனச் செய்தி யாகும். மேலே கூறிய அது எது என்று வினாவில்?

சாற்றிய ஐந்தொழில்கள் சடசித்து ஓர் இரண்டின் இடை தாம் பகுப்பாய் நிகழும்:

சாற்றில், சொல்லப்பட்ட இறைவனுடைய ஐந்தொழில் களும் சடப்பொருளாகிய தனுகரணபுவன போகங்களிடத்தும், அறிவுப்பொருளாகிய ஆன்மாக்களிடத்தும் பகுப்புடையதாய் நிகழும்.

இறைவனுடைய ஐந்தொழிலில், திதி என்கின்ற ஒன்று இன்பத்தி என்றும், துன்பத்தி என்றும் இரண்டு வகைப் பட்டதால் ஆறாகும் என்பதையும் அந்த ஆறுள் மூன்று இன்பம் மூன்று துன்பம் என்பதையும் இப்பாட்டு கூறுகின்றது.

சடம்அதனில் சிருட்டிதிதி சங்காரம் நிகழும்
தகும்உயிரில் திரோபாவம் அநுக்கிரகம் தங்கும்
திடமுறும்அத் திதிஇரண்டாம சுகதுன்பம் அருத்தும்
செய்தியில்இம் முறையால்செய் தொழில்ஆறாம் அவையுள்
படிதருநல் சிருட்டியினில் சுகம் அருத்தும் திதியில்
பகரும்அநுக் கிரகத்தில் பன்னலுறும் உயிர்க்குக்
கடிதலில்இன் பாம்துன்பத் திதிசங்கா ரத்தில்
கழறுதிரோ பாவத்தில் காணுறுதுன் பாமே. 27

பதவுரை:

சடம் அதனில் சிருட்டி திதி சங்காரம் நிகழும் தகும் உயிரில் திரோபாவம் அநுக்கிரகம் தங்கும்:

சடப் பொருளாகிய தனு கரண புவன போகங்களில் படைப்பும், திதியும். அழித்தலும் நிகழும். சித்துப் பொருளாகிய உயிரில் திரோபாவமும், அருள் என்னும் அநுக்கிரகமும் தங்கும்.

திடமுறும் அத்திதி இரண்டாம் சுகதுன்பம் அருத்தும் செய்தியில்:

திதி என்கின்ற ஒன்று இன்ப, துன்ப காரணத்தினால் இன்பத்தை அருத்தும் திதி என்றும், துன்பத்தை அருத்தும் திதி என்றும் இரண்டு விதமாய் இருக்கும்.

இம்முறையால் செய்தொழில் ஆறாம்:

இத் திதி இரண்டு வகைப் பட்டதால் இறைவன் செய்யும் ஐந்து தொழில்கள் ஆறாய் இருக்கும். (படைத்தல், இன்பம், அருத்தும் திதி, துன்பம் அருத்தும் திதி, அழித்தல், திரோபாவம், அநுக்கிரகம் என்று ஆறாம்).

அவையுள் படிதரு நல்சிருட்டியினில் சுகம்அருத்தும் திதியில் பகரும் அநுக்கிரகத்தில் பன்னலுறும் உயிர்க்குக் கடிதலில் இன்பாம்:

மேலே சொன்ன ஆறுள் முறையான படைப்பிலும், இன்பத்தை அருத்துகின்ற திதியிலும், அநுக்கிரகத்திலும், சொல்லப்பட்ட உயிர்க் கூட்டங்களுக்கு நீங்காத இன்பம் உண்டாகும்.

துன்பத் திதி சங்காரத்தில் கழறு திரோபாவத்தில் காணுறு துன்பாமே:

துன்பத்தை விளைவிக்கும் திதியிலும் அழித்தலிலும் சொல்லப்பட்ட திரோபாவத்திலும் சொல்லப்பட்ட உயிர்க் கூட்டங்களுக்கு நீங்காத துன்பம் உண்டாகும்.

சகலமதே சிருட்டியதாம் கேவலம்சங் காரம்
தகுசுத்தம் திதியாகும் சாக்கிரம் சொப்பனத்தோடு
இகல்சுழுத்தி துரியம்துரி யாதீதம் இவற்றுள்
இயமபுமுதல சாக்கிரமே சிருட்டியது வாகும்
பகலகனவு திதியாகும் சுழுத்தி முதல் மூன்றும்
போக்கிடுசங் காரம்தாம் பொருநனவில் கனவில்
பகர்சுகதுன்பு உண்டாகும் சுழுத்தி முதல மூன்றில்
படிறுஇடராம் இவைபாணடிற் சகடெனவே வருமால்.
28

பதவுரை:

சகலமதே சிருட்டியதாம் கேவலம் சங்காரம் தகுசுத்தம் திதியாகும்:

மேலே சொன்ன இறைவனுடைய ஐந்து தொழில்களில் படைப்புத் தொழில் சகலாவத்தையின் பாற்படும். அழித்தல் தொழில் கேவலாவத்தையின்பாற்படும். திதித்தொழில் சுத்தாவத்தையின்பாற்படும்.

சாக்கிரம் சொப்பனத்தோடு இகல் சுழுத்தி துரியம் துரியாதீதம்:

நனவு நிலையும், கனவு நிலையும், சுழுத்தி நிலையும், துரியநிலையும துரியாதீத நிலையும் என ஐந்து அவத்தை ஆன்மாக்களுக்கு உண்டாகும்.

இவற்றுள் இயம்பு முதல் சாக்கிரமே சிருட்டியது வாகும் பகல் கனவு திதியாகும் சுழுத்தி முதல் மூன்றும் போக்கிடு சங்காரம் தாம்:

உயிர்களுக்கு நிகழ்வதாகக் கூறிய ஐந்து அவத்தைகளுள் நனவு சிருட்டியாகும், கனவு திதியாகும் சுழுத்தி முதலான மூன்றும் சொல்லப்பட்ட சங்காரமாகும்.

பொரு நனவில் கனவில் பகர்சுக துன்பு உண்டாகும்:

மேலே சொன்ன நனவு என்னும் சாக்கிரத்திலும் கனவு என்னும் சொப்பனத்திலும் உயிர்களுக்கு இன்பமும் துன்பமும் உண்டாகும்.

சுழுத்தி முதல் மூன்றில் படிறு இடராம்:

சுழுத்தி முதலான மூன்று அவத்தைகளில் பொய்மை தங்கிய துன்பம் உண்டாகும்.

இவை பாண்டில் சகடெனவே வருமால்:

மேலே சொன்ன நனவு முதலான ஐந்து அவத்தைகளும் உயிர்களுக்கு வண்டியில் சக்கரம் சுழல்வதைப் போல மாறி மாறி வரும் என்க.

(பாண்டில் - வண்டி)

ஐம்பொறி நுகர்வில் ஐந்தொழில்

நனவினில்ஐம் புலன்நுகரும் பொழுதுஐந்துஇந் தியத்தும்
நவின்றிடும்ஐந் தொழில்களும்வந்து உறும்அவை
இங்கு உரைப்பின்
முனமுறைஓர் இந்தியத்தைப் பொருந்தியதே சிருட்டி
முதிர்விடயம் அருந்துவதே திதியாகும் விடயம்,
தனை அறியும் தனைவேறாச் சாற்றஒண்ணாது அழுந்தல்
சங்காரம்; இதைருசிப்பித் திடுதல்திரோ பாவம்
இனிதுஇனிதன்று எனவுணர்தல் அநுக்கிரகம் ஆகும்
இம்முறைஉட் கரணத்தும் இயங்குறும்ஐந் தொழிலே.
29

பதவுரை:

நனவினில் ஐம்புலன் நுகரும் பொழுது ஐந்து இந்தியத்தும் நவின்றிடும் ஐந்தொழில்களும் வந்து உறும்:

விழிப்பு நிலையாகிய சாக்கிரத்தில், ஆன்மா ஐம்பொறிகளோடு கூடி ஐம்புலன்களை நுகரும் பொழுது ஐம்பொறிகளிலும் மேலே சொன்ன படைத்தல் முதலான ஐந்து தொழில்களும் வந்து பொருந்தும்.

அவை இங்கு உரைப்பின்:

அவற்றைக் கீழே முறையாகக் கூறின்

முனமுறைஓர் இந்தியத்தைப் பொருந்தியதே சிருட்டி:

முன்னே சொன்ன ஐந்து இந்தியங்களில் ஒன்றை உயிர் பொருந்தியதே படைப்பாகும்.

முதிர்விடயம் அருந்துவதே திதியாகும்:

ஆன்மா இந்தியத்தைப் பொருந்தி அதற்குள்ள ஏற்றசத்தம் முதலான விடயங்களை நுகர்வதே திதியாகும்.

விடயம் தனைஅறியும் தனைவேறாச் சாற்ற ஒண்ணாது அழுந்தல் சங்காரம்:

இந்திரியங்களோடு பொருந்திய விடயங்களில் ஆன்மா நுகரும்பொழுது ஆன்மாவாகிய தாமும் விடயங்களும் வேறாகாமல் ஒன்றி அழிவதே சங்காரம் ஆகும்.

இதை ருசிப்பித்திடுதல் திரோபாவம்:

ஆன்மாவிற்கு விடய, சுவையை உண்டாக்குதல் திரோ பாவமாகும்.

இனிது இனிதன்று எனவுணர்தல் அநுக்கிரகம் ஆகும்:

விடயங்கள் இனிமையால் இருக்கின்றது, அல்லது இனிமை அற்றதாய் இருக்கின்றது என்று ஆன்மா உணர்தல் அநுக்கிரகம் ஆகும்.

இம்முறை உட்கரணத்தும் இயங்குறும் ஐந்தொழிலே:

மேலே, பொறிகளாகிய புறக்கரணங்களுக்குச் சொன்ன முறைபோல மனம் முதலான அந்தக்கரணங்களுக்கும் ஐந் தொழில் உண்டு.

உட்கரணம் – அந்தக்கரணம்.

விளக்கம்:

ஒருபொருளை நினைந்தெழுதல் சிருட்டியது தனைஅங்கு
உனிமகிழ்தல் திதியதனை மறந்திடல் சங்காரம்
மருவிஅதில் மயங்குதலே திரோபாவம் பின்னர்
மற்றுஅதனைத் தெளிந்துஅறிதல் அநுக்கிரகம் ஆகும்
கருவிகள்ஒவ் வொன்றில்உயிர் கலந்துறுபோ தெல்லாம்
காரணன்ஐந் தொழில்உளமுன் கழறுமுறை காணின்
விரவுகரு வியினமூன்றும் உயிரினிடத்து இரண்டும்
மேவுறும்ஐந் தொழில்களும் முன்மெய்க்கு உயிர்க்கு
ஓதியபோல். 30

பதவுரை:

ஒருபொருளை நினைந்து எழுதல் சிருட்டி அது:

உயிர் அந்தக்கரணங்களோடு கூடி ஏதாவது ஒரு பொருளை எண்ணி எழுவது படைப்பாகும்.

தனை அங்கு உனி மகிழ்தல் திதி:

அந்த நிலையில் உயிர் விடயங்களை எண்ணி மகிழ்தல் திதியாகும்.

அதனை மறந்திடல் சங்காரம்:

மேலே நினைத்ததை மறந்துவிடுதல் சங்காரம் ஆகும்.

மருவி அதில் மயங்குதலே திரோபாவம்:

மேலே சொன்ன விடயங்களில் உயிர் அந்தக்கரணங்களோடு பொருந்தி மயங்கியிருத்தலே திரோபாவமாகும்.

பின்னர் மற்று அதனைத் தெளிந்து அறிதல் அநுக்கிரகம் ஆகும்.

பின்னர்முன்னே சொன்னவற்றை நினைந்து, எண்ணி மகிழ்ந்து, மயங்கி உணர்ந்த செய்திகளைத் தெளிந்து அறிவது அநுக்கிரகமாகும்.

கருவிகள் ஒவ்வொன்றில் உயிர் கலந்துறுபோதெல்லாம் காரணன் ஐந்தொழில் உள:

புறக்கருவிகளும், அகக்கருவிகளுமாக இரண்டிலும் உயிர் கலந்து செயல்படும்போதெல்லாம் காரணனாகிய இறைவனுடைய படைத்தல் முதலாகிய ஐந்து தொழில்களும் நிகழும்.

முன் கழறுமுறை காணின்:

அவற்றை முன்னே சொல்லியபடி காண்போமேயானால்.

விரவு கருவியின் மூன்றும் உயிரினிடத்து இரண்டும் மேவுறும் ஐந்தொழில்களும் முன்மெய்க்கு உயிர்க்கு ஓதியபோல்:

மேலே சடப்பொருளில் மூன்றும், சித்துப்பொருளில் இரண்டும், நிகழும் என்று சொன்ன முறையைப்போல இங்கு புறக்கருவி, அகக்கருவி ஆகிய கருவிகளில் மூன்றும் உயிரினிடத்தே இரண்டும் நிகழும் என்க.

விளக்கம்:

மேலே சொன்ன இரண்டு பாடல்களின் கருத்தைக் கீழ் வரும் திருமந்திரப் பாடல் ஒன்றால் அறிக.

''மெய்வாய் கண்மூக்குச் செவியென்னும் மெய்த்தோற்றத்து
அவ்வாய அந்தக் கரணம் அகிலமும்
எவ்வாய் உயிரும் இறை ஆட்ட ஆடலால்
கைவாய் இலாநிறை எங்குமெய் கண்டதே'' (2586)

எல்லா உயிர்களையும் மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் புறக்கருவிகளோடும், மனம் முதலான உட்கருவி களோடும் சேரச்செய்து இறைவன் இயக்க அவைகளெல்லாம் இயங்குதலால் இறைவன் எங்கும் நிறைந்தவன் என்ற உண்மை புலப்படும்.

தூல பஞ்சாதிகாரமும் சூக்கும பஞ்சாதிகாரமும் பிறவும்

நால்இருபத்து ஒருநான்கை நண்ணிலக்க விதமா
நவிலுடலில் தொழில்இறைவன் புரிவதுதூ லமதாம்
தூலவுடல் அவத்தைகளில் கருவிகள்ஒவ் வொன்றில்
தொழில்புரிதல் சூக்குமமாம் நீக்கமற நின்றே
ஏலுறும்இவ் உடல்உயிர்ஓர் கருவியினில் பிறந்தும்
இருந்தும்இறந் தும்கணத்தில் சுழலும் இவ்வாறு
அளவில்
காலம்அவற் றுற்றுஇடரே கண்டதலால் அந்தக்
கடவுளடி சேர்சுத்தங் கண்டதுஇல்அவ் வுயிரே. 31

பதவுரை:

நால்இருபத்து ஒருநான்கை நண்ணிலக்க விதமா நவில் உடலில் தொழில் இறைவன் புரிவது தூலமதாம்:

எண்பத்து நான்கு லட்சம் என்னும் உடல் பேதங்களில் இறைவன் ஐந்தொழில் புரிவது தூல ஐந்தொழில் ஆகும்.

நால்இருபத்தொன்னு – எண்பத்து நான்கு

தூலவுடல் அவத்தைகளில் கருவிகள் ஒவ்வொன்றில் தொழில் புரிதல் சூக்குமமாம்:

தூல உடம்பில் நெகிழும் சாக்கிரம் முதலான ஐந்து அவத்தைகளில் அந்த அவத்தைகளுக்கு உரிய கருவிகளில் இறைவன் தொழில் புரிவது சூக்குமம் ஆகும்.

விளக்கம்:

அறிவுக் கருவி தொழில் கருவி என்னும் பத்தும், அவற்றின் செய்திகளாகிய ஒலி முதலானவை ஐந்தும், பேசுதல் முதலான ஐந்தும் ஆகிய ஈரைந்து மாத்திரையும், மனம் முதலான அந்தக் கரணம் நான்கும், பிராணன் முதலான பத்துக் காற்றும் என்னும் இம்முப்பத்து நான்கு கருவிகளுடன் உயிரும் கூடி முப்பத்தைந்தாகி உலகப் பொருள்களை அறிந்துவரும்நிலை விழிப்புநிலை என்னும் சாக்கிராவத்தை ஆகும். இச்செய்தி திருமந்திரப்பாட்டைக் (2144) கருதியது.

மேற் கூறிய முப்பத்து நான்கில் இருவகை கருவிகளை நீக்கி, எஞ்சிய இருபத்து நான்கு தத்துவங்களுடன் உயிரும் கூடி, இருபத்தைந்தாகி, இன்ப துன்பம் நுகர்வது கனாநிலை என்னும் சொப்பனாவத்தையாகும். அந்தக் கரணங்களுள் சித்தம் ஒன்றும், பத்துக் காற்றுள் பிராணன் ஒன்றும் ஆகிய இரண்டு கருவிகளுடன் உயிரும் கூடி மூன்றாகியுள்ள நிலை தானே சுழுத்தியாகும்.

சித்தம் நீங்க பிராணவாயு ஒன்றுடன் உயிரும் கூடி இரண்டாயுள்ள நிலை தானே துரிய நிலையாகும். பிராண வாயுவும் நீங்க, உயிர் மட்டும் தனித்திருக்கும் நிலை துரிய நிலையாகும்.

நீக்கமற நின்றே ஏலுறும் இவ்வுடல் உயிர்ஓர் கருவியினில் பிறந்தும் இருந்தும் இறந்தும் கணத்தில் சுழலும் இவ்வாறு அளவில் காலம் அவற்றுற்று இடரே கண்டதலால் அந்தக் கடவுளடி சேர்சுத்தங் கண்டதுஇல் அவ்வுயிரே:

இத்தூல உடலில் இயக்கும் இறைவனுடன் உயிர்கூடி உடல் முற்றிலும் நீக்கமற பிறந்தும், இருந்தும், இறந்தும் தூல அவத்தைகளிலும், சூக்கும அவத்தைகளிலும் சுழலும். உயிர் உடம்புடன் கூடி இதே போல தூல அவத்தைகளிலும், சூக்கும அவத்தைகளிலும் சுழன்று, பிறவித் துன்பமாகிய இடரே கண்டது அல்லாமல் அந்த இறைவனுடைய திருவடியைச் சேர்கின்ற சுத்தா அவத்தையைத் தான்அறிந்து அடைந்த தில்லை.

சுத்தாவத்தை நிலை

இறைவன்அடி சேர்சுத்தம் எங்ஙன்என்னின் அதுதான்
இயம்புறுகா ரணபஞ்ச கிருத்தியத்தால் அறியும்
முறைமையதாம் இஃதும் இனி மொழிகுதுநாம்: முன்னர்
மொழிந்தனகேட்டு அறிவது போல் அறிவது
அன்று இதனை
நெறிகொள்சமா தியினில்இருந்து அறிவதுவாம், அறிந்தால்
நேர்படுதல் சுத்தம்இது நிகழ்ந்துறவே விளங்கின்
அறிதரலாம் திருவடியும் ஆநந்தப் பேறும்
அதனால்முன் னுறுதுயர்கள் இயாவும்அகன் றிடுமே.
32

பதவுரை:

இறைவன்அடி சேர்சுத்தம் எங்ஙன் என்னில்:

உயிர்கள் இறைவனுடைய திருவடியைச் சேர்வதற்குரிய சுத்தா அவத்தை என்கின்ற நிலை எத்தகையது என்று வினாவில்?

அதுதான் இயம்புறு காரண பஞ்ச கிருத்தியத்தால் அறியும் முறைமையதாம்:

அச்சுத்தாவத்தையாகிய அதுதான் சொல்லப்படும் இறைவன் செய்யும் காரணமான ஐந்து தொழில்களால் பெறப்படுவதாம்.

இஃதும் இனி மொழிகுதும் நாம்:

நாம் இதையும் இனி சொல்லுகின்றோம்.

முன்னர் மொழிந்தன கேட்டு அறிவது போல் அறிவது அன்று:

முன்னே கூறிய தூல சூக்கும பஞ்சக்கிருத்தியம் முதலானவற்றைப் போல காரண பஞ்சக்கிருத்தியத்தைக் கேட்டு அறிவதன்றாம்.

இதனை நெறிகொள் சமாதியினில் இருந்து அறிவதுவாம்:

இச்சுத்த நிலையில் நிகழும் காரண பஞ்சகிருத்தியத்தை முறைமையினைக் கொண்ட சமாதியினில் இருந்து அறிந்து கொள்ளத் தக்கதாம்.

அறிந்தால் நேர்படு நல்சுத்தம் இது நிகழ்ந்துறவே விளங்கின் அறிதரலாம் திருவடியும் ஆநந்தப்பேறும் அதனால் முன்னறு துயர்கள் யாவும் அகன்றிடுமே?

இறைவன் செய்யும் காரணபஞ்சக்கிருத்தியத்தை அறிந்தால் சுத்தாவத்தை நிகழும். அச்சுத்தா அவத்தை நிகழ்ந்தால் இறைவனுடைய திருவடியும் ஆநந்தப்பேறும் உண்டாகும். அவை நிகழவே இதுவரையில் நாம் பெற்றிருந்த பிறவித் துன்பங்கள் எல்லாம் நீங்கும்.

சமாதியில் இருந்து காரண பஞ்சாவத்தையை அறியும் முறை

அறைந்தசமா தியினிலிருந்து அறிவது எவ்வாறு என்னின்
அறுவகையாம் பயனின்முயற் சிகளைவிடுத்
துஉடன்மேல்
செறிந்திடுபோ கங்களின்மேல் பற்றுகளேனோர் சற்றும்
சேராமல் கைவிட்டுஒரு ஏகாந்தம் கைக்கொண்டு
உறைந்தவிடத் தினில்ஒன்றைச் சாராமல் செவ்வே
உடல்வளையா மல்தேகக்கு ஒன்றுசுகா தனமுற்று
இருந்திடுகால் அங்நிகழ்கா லம்எதிர்கா லத்தில்
எய்துபயன் கருதாதுஏ காக்கிரசித் தமதாய். 33

பதவுரை:

அறைந்த சமாதியினிலிருந்து அறிவது எவ்வாறு என்னின்:

மேலே கூறிய சமாதியிலிருந்து அறிய வேண்டிய பொருள்களை அறிவது எவ்வாறு என்று வினாவில்?

விளக்கம்:

சமாதி என்ற வடசொல்லுக்கு நன்றாக ஆரோவித்தல் என்று பொருளாகும். இடமும் காலமும் நன்கு அமைய அந்த இடத்திலே, காலத்திலே இருந்து தன்னுடைய உலகியல் தொழில்களை எல்லாம் விட்டு உணர்வை ஒருமுகப்படுத்தி, ஒரு முகப்பட்ட உணர்வால் அறிய வேண்டிய பொருளை முதலில் ஆராய்ந்து துணிய வேண்டும் என்க. பின்னர் ஆராய்ந்து துணிந்த அப்பொருளோடு தான்வேறாகாமல் ஒன்றி அப்பொருளாக ஆகவேண்டும்.

அறுவகையாம் பயனின் முயற்சிகளை விடுத்து:

உழுதல், தொழுதல், வரைதல், வாணிபம் செய்தல் சிற்பத்தொழில் செய்தல், பல வித்தைகளைக் கற்றல் என்று உலகியல் தொழில்களைச் சிறிதும் அணுகாமல் விட்டுவிட்டு.

உடல் மேல் செறிந்திடு போகங்களின் மேல், பற்றுகள் ஓர் சற்றும் சேராமல் கைவிட்டு:

தன் உடம்பின் மேலும், தன் உடம்பிற்குப் பயன்படுகின்ற உறைவிடம், ஆடை, ஆபரணம், உணவு முதலான போகப் பொருள்களின் மேல் சிறிதும் பற்று கொள்ளாமல்.

ஒரு ஏகாந்தம் கைகொண்டு:

தாம் சமாதியில் இருப்பதற்கு ஓர் தனிஇடத்தைத் தேர்ந்தெடுத்து,

விளக்கம்:

இது மலை, குகை, ஆற்றங்கரை, திருக்கோயில், தானே அமைத்துக் கொள்கின்ற மடம் முதலான இடங்களில் தனியாக இருந்து பயிலுதல்.

உறைந்த இடத்தினில் ஒன்றைச் சாராமல் செவ்வே உடல் வளையாமல் தேகக்கு ஒன்று சுகாதன முற்று:

தனியிடத்தைப் பொருந்திய இடத்து அங்கே சுவர், தூண் முதலான ஒன்றைச் சாராமல் தறிபோல் உடல் வளையாமல் நேராக இருந்து உடம்பு துன்பம் இல்லாமல் இருப்பதற்குப் பொருத்தமாக அமைந்த சுகாதனத்தில் இருந்து.

விளக்கம்:

'தறிபோல் உடலம் நேர் இருந்து' என்று
கூறுவர் சிவப்பிரகாசர். [பிரபுலிங்கலீலை]

யோக நூல்களில் கூறும் பத்மாசனம் முதலானவற்றில் இருந்தால் அவ் ஆசனங்கள் கால்களுக்கும் உடம்புக்கும் வலியைத் தரும் ஆகையினால் அவை நிகழாதபடி சுகாசனத்தில் இருக்க வேண்டும்.

இருந்திடுகால் அங்நிகழ் காலம் எதிர்காலத்தில் எய்து பயன் கருதாது:

இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் என்னும் முக் காலங்களில் தனக்குக் கிடைக்கும் உலகப் பயன்களைச் சிறிதும் கருதாமல்

ஏகாக்கிர சித்தமதாய்:

ஒன்று பட்ட உள்ளமாகி,

பிருதிவிதத் துவம்முதலாம் நாதமதுஈ றாகப்
பேசியநால் ஒன்பானுள் ஓர்ஒருமா கருவிக்கு
உருவமுடன் தரிசனசுத் தியும்இவைஎன்று உன்னி
ஒவ்வொன்றா [1]நேதிகளைந்து உயர்நாதம் ஏறிக்
கருவிகளை யென்னாலே கண்டதனால் சடமாம்
கண்டிவற்றைக் கழன்றவன்நான் காட்டியது கடவுள்
திருவருளென்று அறிந்து, அருளைச் செறிந்திடுதிஇதனுட்
சிவன்ஐந்து தொழில்நடக்கும் செய்தியது கேளே. 34

1 பாடபேதம்:

நியதிகளைந்து:- **நியதி** என்ற பாடம் பிழையான பாடமாகும். **நேதி** என்றபாடமே சரியானதாகும்.

பதவுரை:

பிருதிவிதத்துவம் முதலாம் நாதமது ஈறாகப் பேசிய நால் ஒன்பானுள்:

நிலதத்துவம் முதலாக சிவதத்துவம் ஈறாக உள்ள முப்பத்தாறு தத்துவங்களுள், ஒவ்வொன்றையும் தனித்தனியே ஆராய்ந்து.

ஓர் ஒருமா கருவிக்கு உருவமுடன் தரிசன சுத்தியும் இவை என்று உன்னி:

அவ்வொன்றின் உருவத்தையும், அவற்றைத்தான் காண்டலும் அவற்றை நான் அல்ல என்று நீக்குதலுமாகிய சுத்தியும் செய்து.

விளக்கம்: இவற்றை அறிஞர் முறையே தத்துவ ரூபம், தத்துவக்காட்சி, தத்துவசுத்தி என்பர்.

ஒவ்வொன்றாய் நேதிகளைந்து உயர்நாதம் ஏறி:

ஒவ்வொரு தத்துவங்களையும் அவற்றின் உருவம் முதலானவற்றையும் ஆராய்ந்து இத்தத்துவங்கள் நான் அல்லேன் என்று அவற்றை விலக்கிவிட்டு, ஈற்றில் உள்ள உயர்ந்த நாதம் என்கின்ற சிவதத்துவத்திலே ஏறி நின்று (தன்னை உணர்ந்து).

விளக்கம்:

நேதி – இது வடசொல்

ந + இதி = நேதி என்றாயிற்று. இதற்கு இது அன்று என்று பொருள் ஆகும். இதனைப் பெருந்திரட்டு அவாந்தர வாக்கியம் என்று கூறும். இச்சொல் பொய்ப்பொருளை நீக்கி விட்டு மெய்ப்பொருளை உணர்வதற்குப் பயன்படும்.

கருவிகளை என்னாலே கண்டதனால் சடமாம், கண்டி வற்றைக் கழன்றவன் நான் காட்டியது கடவுள் திருவருள் என்று அறிந்து:

முப்பத்தாறு தத்துவங்களாகிய கருவிகளும் ஆகிய இவை என்னாலே ஆராய்ந்து அறியப்படுதலின் இம்முப்பத்தாறும் சடப்பொருள் ஆகும் என்றும், இவற்றை நேதி என்னும் வாக்கி யத்தால் ஆராய்ந்து கண்டு நீக்கியவன் யார் எனில் ஆன்மா வாகிய நான் என்றும் இதனை எனக்குக் காட்டியது என்னுடன் பிரியாது உறையும் காயக்கடவுளின் உணர்வாகிய கடவுள் திருவருள் என்றும், (மேலே கூறிய மூன்றையும்) தெளிவாக அறிந்துகொண்டு,

அருளைச் செறிந்திடுதி:

இப்படி உணர்த்திய காயக்கடவுளின் உணர்வாகிய திருவருள் உணர்வைத் தெரிந்து கொள்.

இதனுள் சிவன்ஐந்து தொழில்நடக்கும் செய்தி அது கேளே:

மேலே கூறிய இதனுள் இறைவனுடைய படைப்பு முதலான காரண ஐந்துதொழில்களும் நடக்கும் என்பதை அறிந்து கொள்வாயாக.

மேலே இதனுள் சிவன் ஐந்துதொழில் நடக்கும் என்பதை விளக்குகின்றார்

கருவிகள் ஒவ்ஒன்றாகத் தோன்றுதலே சிருட்டி;
கண்டதனில் நின்றுதரி சித்தல்திதி; அதனை
ஒருவுதலே சங்காரம், அருள்மீதில் பேரன்பு
உற்று எழுதல் சொல்திரோ பாவமதே ஆகும்.
திருவருளே கண்ணாகக் காண்பதுஅநுக் கிரகம்
திருவருளில் பிறிவறநீ தினமும்இருந் திடுபோது
ஒருநினைவு அங்கு உற்றுஎழுதல் சகலம்மறைப் பாகி
உறுவதுகே வலமாம் இங்கு இருவகையும் ஒருவ. 35

பதவுரை:

கருவிகள் ஒன்றாகத் தோன்றுதலே சிருட்டி, கண்டதனில் நின்று தரிசித்தல் திதி, அதனை ஒருவுதலே சங்காரம்:

நிலம் முதலான முப்பத்தாறு தத்துவங்களை ஒவ்வொன்றாகக் கண்டு அறிதலே படைத்தல் என்னும் தொழிலாம். அவற்றைக் கண்டபிறகு அதனை நன்றாக ஆராய்ந்து பார்த்து உணர்வது திதி என்னும் தொழிலாம். இத்தத்துவங்கள், ஆன்மாவாகிய நான் அல்ல என்று நீக்கி உணர்தல் அழித்தல் என்னும் தொழிலாம்.

அருள்மீதில் பேரன்பு உற்று எழுதல் சொல் திரோபாவமதே ஆகும், திருவருளே கண்ணாகக் காண்பது அநுக்கிரகம்:

கருவிகளை உணர்த்திய அருளாகிய பரதுரியத்தின் மீது பெரிய அன்பைச் செலுத்துதல் திரோபாவம் ஆகும். திருவருள் என்னும் காயக்கடவுள் என்றும் பரதுரியத்தைத் தனக்கு உள்விழியாகக் கொண்டு மெய்ப்பொருளை அறிவது அநுக்கிரகம் என்னும் தொழிலாம்.

திருவருளில் பிறிவற நீதினமும் இருந்திடுபோது ஒருநினைவு அங்கு உற்று எழுதல் சகலம், மறைப்பாகி உறுவது கேவலமாம் இங்கு இருவகையும் ஒருவ:

பரதுரிய உணர்வாகிய திருவருளில் நீ தினமும் இருந்திடும் காலத்தில் பழக்கவாசனையால் உலக எண்ணங்கள் ஏதாவது அங்குத் தோன்றினால் அது சகலமாகும். அந்த எண்ணங்கள் அங்கு மறைந்தால் அது கேவலமாகும். உலகநினைவு தோன்று தலாகிய சகலமும், அதனை மறைத்தலாகிய கேவலாவத்தையும் என்னும் இரண்டு வகையும் நீங்க.

குறிப்பு

''மோனங்கை வந்தோர்க்கு ஐங்கருமமும் முன்னுமே'' என்ற திருமந்திரப் பாடலை (1611) ஒப்பு நோக்கி அறிக.

ஒருஉறுதி சொல்லுதும்நீ கேட்டிநினை வெழுந்தால்
உறுநினைவின் வயமாவை யுற்றபின்னர்த் தெளிந்து
சீரருளின் நிற்பைஇதில் நின்றால்அந் நினைவுஉன்
செங்கைவய மாம்இவ்வண்ணம் செறிந்திடும்அப்போது
சேருநினைவு எழுந்ததனின் வயமாகும் அதனைத்
திரோபாவம் என்றறிதி; திருவருளைச் சென்று
சார்தல்அநுக் கிரகம்எனத் தெளிதிஅருள் தன்னைத்
தான்வேண்டில் சின்னாளில் சகலம்அறும் தானே. 36

பதவுரை:

ஒரு உறுதி சொல்லுதும் நீ கேட்டி

மாணவனாகிய உனக்கு யாம் ஒன்றாகிய முழுப்பயன் தருகின்ற ஒன்றைச் சொல்லுகின்றோம். அதனை மனம் ஒன்றும் படி கேட்பாயாக.

நினை வெழுந்தால் உறுநினைவின் வயமாவை உற்றபின்னர்த் தெளிந்து சீரருளில் நிற்பை:

உலக நினைவு எழுமேயானால் நீ அந்த நினைவின்வசம் ஆகிவிடுவாய். அந்த நினைவின் வசம் உந்தப்பெற்றால் நீ தெளிவடைந்து அருளின் வசமாவை.

இதில் நின்றால் அந்நினைவு உன்செங்கை வயமாம்:

அந்த அருளின் வசம் நின்றால் உன் நினைவெல்லாம் உன் வசமாகிவிடும்.

இவ்வண்ணம் செறிந்திடும் அப்போது சேருநினைவு எழுந்து அதனின் வயமாகும்.

இவ்வாறு நீ பொருந்தி இருக்கும் போது உன் நினைவு அருளின் வசமாகிவிடும்.

அதனைத் திரோபாவம் என்றறிதி:-

அதனை இறைவன் செய்யும் திரோபாவமாகிய மறைக்கும் தொழில் என்று அறிவாயாக.

திருவருளைச் சென்று சார்தல் அநுக்கிரகம் எனத்தெளிதி:

ஆன்மாவாகிய நீ திருவருளாகிய பரதுரியத்தைச் சென்று அடைதல் இறைவன் செய்யும் அநுக்கிரகம் என்கின்ற சாக்கிராதீதம் என்பதைத்தெளிந்து அறிவாயாக.

அருள் தன்னைத் தான்வேண்டில் சின்னாளில் சகலம் அறும் தானே:

இந்த நிலையில் ஆன்மாவாகிய நீ பரதுரியமாகிய திருவருளையேச் சார்ந்து ஒழுகினால் சாக்கிராதீத நிலை கிடைத்தலின் சகலாவத்தை நீங்கிவிடும் என்க.

சகலம் அறில் கேவலம்தான் வந்துவந்து தாக்கும்
தகைமைத்தாம்; எங்ஙனெனில் தண்மதியை மேகம்
இகலொடுவந்து அடிக்கடிமூ டுதல்போல் இதுமுன்
இருஞ் சகலத் தொடுகலந்து வரும்தகைமைத் தாகும்
புகரில்சமா தியினில்உடல் கற்றூணைப் போலப்
பொற்பின்வளை யாது உற்றுப் பித்திகையில் சாயாது
இகலறுபே ரருளாலே கண்டதனைத் தடுக்க
இசைந்திடுகே வலமும்அறும்; இருவகையும் அறவே
37

பதவுரை:

சகலம் அறில் கேவலம் தான் வந்து வந்து தாக்கும் தகைமைத்தாம்:

அறிவினைச் செய்கின்ற சகலாவத்தை வந்து பொருந்தினால், அடுத்து அறியாமையைச் செய்கின்ற கேவலாவத்தையானது வந்து வந்து பொருந்தும் தகைமைத்தாகும்.

எங்ஙனெனில் தண்மதியை மேகம் இகலொடு வந்து அடிக்கடி மூடுதல் போல்:

எவ்வாறென்றால் ஒளி விளங்குகின்ற குளிர்ந்த திங்களை மேகம் மாறுபாடுடன் வந்து அடிக்கடி மூடுதல் போல என்க.

இதுமுன் இருஞ்சகலத்தோடு கலந்து வரும் தகைமைத் தாகும்:

அறியாமையைச் செய்கின்ற இந்த அவத்தை அறிவினைச் செய்கின்ற சகலாவத்தையோடு கலந்து வரும் தன்மையை உடையதாகும்.

புகரில் சமாதியினில் உடல் கற்றூணைப் போலப் பொற்பின் வளையாது உற்றுப் பித்திகையில் சாயாது இகலறு பேரருளாலே

கண்டதனைத் தடுக்க இசைந்திடு கேவலமும் அறும்; இருவகையும் அறவே:

குற்றமற்ற சமாதியில் இருக்கும் பொழுது சமாதி இருப்பவரின் உடம்பு கல்தூணைப் போல நேராக இருந்து, சுவரில் சாயாமல் இருந்து, மாறுபாடற்ற பெரிய அருளினாலே அந்த சகல கேவல நிலையாகிய அறிதல், அறியாமையைக் கண்டு, அதனைத் தடுத்தால் வந்து வந்து தாக்குகின்ற கேவல மாகிய அறியாமையும் சகலத்தொடு நீங்கும். அறிதல் அறியா மையாகிய சகல கேவலங்கள் நீங்கவே.

விசேடம்:

'அறியாமை அறிவகற்றி' என்ற சிவஞான சித்தியார் பாடலை நோக்குக.

மாயையும்கன் மமும்அந்தச் சகலத்தோடு ஒழியும்
வழுத்தியகே வலத்துடன்ஆ ணவம்மாயும் இவைதாம்
ஆயஅசுத் தம்இவைகள் அகன்றதுவே சுத்தம்
அதனைஉரைத் திடின்மலைவாய்க் கதிர்வீழ்
காலம்போல்
தூயஅரு ணோதயம்போல் தோன்றும்இதைப் பெரியோர்
துன்னும்இராப் பகல்அற்ற விடம்என்றும் மறப்பும்
மேயநினைப் பும்இல்லா இடமென்றும் இறப்பும்
மிகுபிறப்பும் இல்லாத இடமென்றும் புகல்வார். 38

பதவுரை:

மாயையும் கன்மமும் அந்தச் சகலத்தோடு ஒழியும் வழுத்திய கேவலத்துடன் ஆணவம் மாயும் இவைதாம் ஆய அசுத்தம்:

மும்மலங்களுள் மாயாமலமும், கன்மமலமும் என்னும் இரண்டும் அறிவு என்னும் சகலாவத்தையோடு நீங்கும்.

மும்மலங்களுள் ஒன்றாகக் கூறப்பட்ட ஆணவ மலமாகிய ஒன்றும், அறியாமையைச் செய்கின்ற கேவலாவத்தையோடு நீங்கும். மும்மலங்களோடு கூடியிருக்கின்ற சகல கேவலா வத்தைகள் அசுத்த நிலையாம். [பற்றுள்ள நிலை]

இவைகள் அகன்றதுவே சுத்தம்:

மேலே கூறிய சகல, கேவல அவத்தைகள் நீங்கப் பெறுதலே சுத்தம் என்னும் பற்றற்ற நிலையாகும்.

அதனை உரைத்திடின் மலைவாய்க் கதிர்வீழ்காலம் போல் தூயஅரு ணோதயம் போல் தோன்றும்இதைப் பெரியோர் துன்னும் இராப்பகல் அற்ற விடம் என்றும் மறப்பும், மேய நினைப்பும் இல்லா இடம் என்றும், இறப்பும் மிகுபிறப்பும் இல்லாத இடம் என்றும் புகல்வார்:

மேலே சொன்ன நிலையை விளக்கிக் கூறினால் சூரியன் அஸ்தமன மலையிலே இருந்து கீழே இறங்கும் காலத்தில் தோன்றுகின்ற மாலைச் செக்கர்வான் போலவும் தோன்றும்.

காலையிலே சூரியன் தோன்றுவதற்கு முன் தோன்றும் அருணோதயமாகிய காலைச் செக்கர் போலவும் தோன்றும். இந்த நிலையை அறிஞர் இரவு பகல் அற்ற இடம் என்றும், மறப்பும் நினைப்பும் அற்ற இடம் என்றும், இறப்பும் பிறப்பும் அற்ற இடம் என்றும் கூறுவர்.

விளக்கம்:

செக்கர் வானம் மாலைச் செக்கர் என்றும் காலைச் செக்கர் என்றும் இரண்டு வகையாக இருக்கும்.

மாலைச் செக்கர்: சூரியன் அஸ்தமன மலையில் இருந்து கீழே இறங்கியபின் தோன்றுவதாகும்.

காலைச் செக்கர்: சூரியன் உதயமலைக்கு வருவதற்கு முன் தோன்றும் காலைச் செக்கரை அருணோ தயம் என்பர்.

குறிப்பு:

மேலே மலை என்றது - அஸ்தமன மலையைக் குறிக்கும்.

பேரருள் தோற்றம்

சுத்தத்தைப் பெற்றுஅதனில் உன்போதம் சிறிதும்
தோன்றாமல் நின்றிடவே தோன்றும்பே ரருள்தான்
எத்திக்கும் பலகோடி சூரியரோர் உழியின்
எய்தியவாறு ஐயம்அறும் பேரொளிய தாகித்
தித்திக்கும் அமுதகடல் உலகமெலாம் பரந்த
செய்தியினே சடசித்துக்கு உட்புறனாய் நிறைவாய்
வர்த்திக்கும் நிர்வயமாய் நிட்களமாய் நிமல
வடிவாகிக் கேடில்லா வான்பொருளாய் எங்கும். 39

பதவுரை:

சுத்தத்தைப் பெற்று அதனில் உன்போதம் சிறிதும் தோன்றாமல் நின்றிடவே தோன்றும் பேரருள்தான்:-

மாயை கன்மங்களுக்கு உரிய அறிதல் என்னும் சகலாவத்தையும், ஆணவத்துக்குரிய கேவலாவத்தையும் நீங்கிய சுத்த நிலையைப் பெற்று, அந்த நிலையில் ஆன்ம அறிவாகிய உன் அறிவு சிறிதளவும் தோன்றாமல் இருக்கப் பழகினால் இறைவனுடைய அருளாகிய பேரருள் தோன்றும்.

எத்திக்கும் பலகோடி சூரியர்ஓர் உழியின் எய்தியவாறு ஐயம் அறும் பேரொளியதாகி:-

எந்த இடத்திலும் பலகோடி சூரியர்கள் ஒரு இடத்தில் உதித்தாற்போல ஒளி தோன்றவே அதனால் உன்னுடைய ஐயம் எல்லாம் நீங்கும்.

தித்திக்கும் அமுதகடல் உலகமெலாம் பரந்த செய்தியினைச் சடசித்துக்கு உட்புறனாய் நிறைவாய் வர்த்திக்கும் நிர்வயமாய் நிட்களமாய் நிமலவடிவாகிக் கேடில்லா வான் பொருளாய் எங்கும்:-

அமிழ்தகடல் உலகமெல்லாம் பரந்தசெயல்போல இனிப்பு உண்டாகும். அப்பொழுது அறிவில்லாத சடப்பொருளுக்கு அறிவுடைய சித்துப் பொருளுக்கும் உள்ளாகவும் புறமாகவும் விளங்கும் பூரணப்பொருளாய் நம்வசம் இல்லாத பொருளாய், வடிவமில்லாத பொருளாய் மலமில்லாத வடிவாகி கெடுதல் இல்லாத உயர்ந்த பொருளாய் அது நிகழும்.

அது என்றது	—	பேரருளை
வர்த்தித்தல்	—	நிகழ்தல்
நிர்வயம்	—	வசமில்லாதது
நிட்களம்	—	வடிவில்லாதது
நிமலம்	—	குற்றமில்லாதது

அறிவாய் அசத்துஎன்னும் ஆறாற கன்று
செறிவான் மாயை சிதைத்து அருளாலே
பிறியாத பேரருள் ஆயிடும் பெற்றி
நெறியான அன்பர் நிலையறிந் தாரே. [திருமந்திரம்-617]

இப்பாடலால் ''பேரருள் ஆயிடும் பெற்றி''யை உணர்க.

இப்படிதோன் றிய அருளில், உன்போதம் தோன்றும்
எங்ஙன் எனின்? முனர்மாயா போதத்தைக் கொண்டே
செப்பரிய பிரவஞ்சம் அறிவதுபோல் இந்தத்
திருவருட்போ தத்தாலே அவ்வருளைச் சிவத்தைத்
தப்பரிய நின்போதம் எதிரிட்டுக் காணும்
தற்பரனை அப்போதம் தணந்தணைய வேண்டும்
அப்பொருளைப் பகுத்ததனில் நிற்கும்நிலைக்கு உவமை
அலர்விழிதே சைக்கதிரைப் பிறிபடநோக் குதலே. 40

பதவுரை:

இப்படி தோன்றிய அருளில் உன்போதம் தோன்றும் எங்ஙன் எனின் முனர்மாயா போதத்தைக் கொண்டே செப்பரிய பிரவஞ்சம் அறிவது போல்:

மேலே சொன்னவாறு தோன்றிய பேரருளில் உன் அறிவாகிய ஆன்மபோதமும் கலந்து தோன்றும். எவ்வாறு தோன்றும் எனில், முந்தி மாயையினால் தோன்றிய அறிவைக் கொண்டே செல்லுதற்கு அரிய உலகத்தை அறிவது போல தோன்றும் என்க.

இந்தத் திருவருட் போதத்தாலே அவ்வருளைச் சிவத்தைத் தப்பரிய நின்போதம் எதிரிட்டுக் காணும் தற்பரனை அப்போதம் தணந்தணைய வேண்டும்:

பேரருள் என்னும் திருவருள் போதத்தாலே அந்த அருளையும் அருளுக்கு முதலாகிய சிவத்தையும் கெடுதலற்ற உன்னுடைய போதம் முன்னிலையாகக் காணும் அப்பொழுது மேலான பரனைத் தற்போதம் நீங்க நின்று காணவேண்டும்.

அப்பொருளைப் பகுத்ததனில் நிற்கும் நிலைக்கு உவமை அலர்விழி தேசைக் கதிரைப் பிறிபட நோக்குதலே:

மேலே சொன்ன பேரருளைப் பிரித்து அறிவதற்கு உவமை சொன்னால், மலர்ந்த விழியானது சூரியனுடைய கதிரையும், சூரியனையும் வேறாக நோக்கி அறிதல்போலாம்.

விளக்கம்:

ஆன்மா தன்போதத்தால் செப்பரிய பிரவஞ்சம் அறிவது போல், ஆன்மாவானது இந்த உலகப்பொருள்களை ஐம்புலப் பொருள்களை அறிவதுபோல காணும் என்க.

உன்போதம் அறவிரகுஉண்டு உரைசெய்தும் கேள்நீ
உறுவிழிதே சைக்கதிரைப் புடைபெயர்ந்து நோக்காது
அன்போடுஅக் கதிரெதிரங்கு அசைவறநின் றிடவே
அதுஇதுஎன்று இரண்டறவே தோன்றும்அது போல,
நின்போதம் அருள்சிவம்நான் என்னபகுக் காது
நிகழ்சிவநேர் நின்றிடஒன்று இரண்டாகா அயிக்கியம்
இன்போடுஎய் துறும்இதனைக் கண்டுகொள்நீ கண்டே
இதனில்எழும் பேரின்பம் ஏழ்கடலில் பெரிதே. 41

பதவுரை:

உன்போதம் அற விரகுஉண்டு உரை செய்தும் கேள் நீ:-

ஆன்ம போதமாகிய உன்போதம் நீங்குவதற்கு ஒரு உபாயம் உண்டு. அதை நாம் சொல்லுகின்றோம் கேட்பாயாக.

உறுவிழி தேசைக் கதிரைப் புடைபெயர்ந்து நோக்காது அன்போடு அக்கதிர் எதிர் அங்கு அசைவற நின்றிடவே அது இது என்று இரண்டறவே தோன்றும் அதுபோல:-

பொருந்திய கண், சூரியனுடைய கதிரையும், சூரியனையும் வேறுபடுத்தி நோக்காமல், பேரன்போடு அச்சூரியன்முன் அசைவற நின்று இருக்க வெயிலாகிய அதுவும், அதற்கு முதலாகிய கதிரும் என்னும் இரண்டும் அற ஞேயமாகிய சூரியன் ஒன்றே விளங்குதுல் போல.

நின்போதம் அருள்சிவம் நான் என்று பகுக்காது நிகழ் சிவநேர்நின்றிட ஒன்று இரண்டாகா அயிக்கியம் இன்போடு எய்துறும்:-

உன்னுடைய போதம் என்றும், அருள் என்றும், சிவம் என்றும் பிரித்து உணராது, சிவமாகிய ஒன்றின் முன்னே நிற்க ஞாதுருவாகிய ஒன்றும் ஞானமாகிய இரண்டும் ஆகாமல்,

ஞேயமாகிய ஒன்றையே கருதுகின்ற ஒன்றுபட்ட தன்மை இன்பத்தோடு தோன்றும் என்க.

அதனைக் கண்டுகொள் நீ கண்டே அதனில் எழும் பேரின்பம் ஏழ்கடலில் பெரிதே:-

ஞேயப்பொருளில் நிற்கும் தன்மையாகிய அதனை நீ அறிந்து கொள்வாயாக. இந்த அறிவால் பெறும் இன்பம் ஏழ்கடலில் பெரிது என்க.

விளக்கம்:

ஒன்று இரண்டாகா ஐயிக்கியம் என்பது, ஞாதுரு, ஞானம், ஞேயம் என்ற மூன்றுள் ஒன்றாகிய ஞாதுரு ஆகாமல், இரண்டாகிய ஞானமும் ஆகாமல் இரண்டையும் விட்டு அறிந்த ஞேயப் பொருள் ஒன்றாகவே நிற்பது.

முன்னர்உறும் கருவிதுகள் பசுவின்அறிவு எனவே
மொழிந்தஅவையுள் ஒன்றேனும் கண்டிலன்ஈது என்னை!
துன்னும்இருள் உடுமதியின் சுடர்இவைகள் கதிர்முன்
தோன்றாவா சிவத்தின்முன்னர்த் தோன்றா என்றுஅறிவாய்
உன்னலருஞ் சுகம்அதனில் உதித்ததுஎவ்வாறு என்னின்
உறுபெண்ஆண் கூடுமிடத்து உற்றெழும்இன் பேபோல்
மன்னுயிர்ஆ கியபெண்ணும் சிவம்என்னும் ஆணும்
மணந்திடும்போது எழுந்திடும்பே ரானந்த வாரி. 42

பதவுரை:

முன்னர் உறும் கருவிதுகள் பசுவின்அறிவு எனவே மொழிந்த அவையுள் ஒன்றேனும் கண்டிலன் ஈது என்னை:

ஞேயப்பொருள் ஒன்றினையே நான் கண்ட பொழுது, முன்னே பொருந்திய மாயாக் கருவிகளாகிய தத்துவங்களையும்,

ஆணவ மலத்தையும், ஆன்ம அறிவாகிய தற்போதத்தையும் என்னும் இவற்றுள் ஒன்றையும் கண்டிலேன். (ஈது என்னை - வியப்புச் சொல்) இது என்ன வியப்பு.

துன்னும்இருள் உடுமதியின் சுடர்இவைகள் கதிர்முன் தோன்றாவா சிவத்தின் முன்னர்த் தோன்றா என்று அறிவாய்;

சூரியனின் முன்பொருந்திய இருளும், நட்சத்திரங்களின் சுடர்களும், சந்திரரின் சுடர்களும் தோன்றாமல் இருப்பது போல, சிவத்தின் முன் கருவியும் துகளும், பசுவின் அறிவும் முதலான இவைகள் தோன்றா என்பதை அறிவாய்.

உன்னலரும் சுகம் அதனில் உதித்தது எவ்வாறு என்னில் உறுபெண் ஆண் கூடுமிடத்து உற்றெழும் இன்பே போல் மன்னுயிர் ஆகிய பெண்ணும் சிவம் என்னும் ஆணும் மணந்திடும் போது எழுந்திடும் பேரானந்த வாரி:

ஞேயப் பொருளைக் கண்ட இடத்து தோன்றிய நினைத்தற் கரிய இன்பம் அந்நிலையில் தோன்றியது எவ்வாறு என்று வினாவில், பொருந்திய பெண்ணும், பொருந்திய ஆணும் கூடு மிடத்து, உற்று எழுகின்ற அவ்விருவராலும் சொல்லமுடியாத இன்பம் போல, நிலை பெற்ற உயிராகிய பெண்ணும், சிவம் என்கின்ற ஆணும் கூடிய பொழுது, பேரானந்தக் கடல் தோன்றும் என்க.

முன் திருவடிசேர் விரகு என்று கூறியதில் அத்திருவடி எவை என்பதை விளக்குகின்றார்

திருவடிசேர் விரகுஎனமுன் உரைதந்தீர் அந்தத்
 திருவடிஇங்கு ஏதென்னில் திரோதம்அருள் என்னும்
இருவகையும் இறைபாதம் இவைகீழ்மேல் நோக்கி
 இருந்திடும்கீழ் நோக்கியதாள் எய்துறும்ஆ ருயிர்க்கு
இருவினைஒப் பாக்கிமல பரிபாக மாக்கும்
 மற்றதுபே ரானந்த வாரிதரும் இவைகள்
பொருவில்உயிர்ச் சிரசின்மிசைப் பிறிவறவே தங்கும்
 பொற்சபையின் நின்றநிலை திட்டமது காணே. 43

பதவுரை:

திருவடி சேர்விரகு எனமுன் உரைதந்தீர் அந்தத் திருவடி இங்கு ஏதென்னில்:

முன்னே திருவடியைச் சேரும் உபாயம் என்று சொன்னீர். அத்திருவடி எவை? என்று வினாவில்,

திரோதம் அருள் என்னும் இருவகையும் இறைபாதம்:

இறைவன் செய்யும் ஐந்து தொழில்களில், திரோதம் என்கின்ற மறைத்தல் தொழிலும், அருள் என்கின்ற அநுக்கிரகமும் என்னும் இரண்டும் இரண்டு திருவடிகளாம்.

இவை கீழ்மேல் நோக்கி இருந்திடும்

இறை இறைவனுடைய நிட்களவடிவத்திலும் சகல வடிவத்திலும் கீழே ஊன்றிய திருவடியாகவும், மேலே தூக்கிய திருவடியாகவும் இருந்திடும்.

கீழ்நோக்கிய தாள் எய்துறும் ஆருயிர்க்கு வருவினை ஒப்பாக்கி மலபரிபாக மாக்கும்:

திரோதம் என்னும் ஊன்றிய திருவடி பொருந்திய உயிர்களுக்கு இருவினை ஒப்பையும் மலபரிபாகத்தையும் உண்டாக்கும்.

மற்றது பேரானந்த வாரி தரும்:

அருள் என்னும் மேல்நோக்கிய அடி ஆன்மாவிற்கு ஆனந்த பெருங்கடலைத் தரும்.

இவைகள் பொருவில் உயிர்ச் சிரசின் மிசைப்பிறிவறவே தங்கும்:

இந்த இரண்டு அடிகளும் ஒப்பற்ற பக்குவமுள்ள உயிர்களின் தலையின்மேல் நீக்கமற விளங்கும்.

பொற்சபையின் நின்றநிலை திட்டமது காணே:

இறைவன் பொற்சபையின்கண் நடனம் செய்து நிற்கும் நிலையின் திட்டத்தைக் கண்டறிக.

திருவடியைச் சேர்ந்த இடத்து ஐந்தொழில்

இவ்வடியைச் சேர்ந்தஇடத்து ஐந்தொழில்ஏது என்னின்?
இயைதருமா யையில்உதித்தாங்கு அருளில்உதித்
ததுவே
செவ்வியநல் சிருட்டியதாம்; சுகப்பேறே திதியாம்;
சீவன்இருட் போதம்அறல் சங்காரம் ஆகும்;
அவ்வியமாம் பிரவஞ்சம் தோன்றாத அதுவே
ஆனதிரோ பாவம்அதாம்; ஆயவொரு நான்கும்
தவ்வல்அற விளங்குதல்இங்கு அநுக்கிரக மாகும்
தணப்பில்சுகா தீதத்தில் கிளக்கவொண்ணாது
உறுமே. 44

திருமந்திரம் ஏழாம் தந்திரத்துள் ‘திருவருள் வைப்பு’ என்ற தலைப்பில் வந்துள்ள ஒரு பாடலில் ‘‘அருள்ஐங் கருமத்து அதிசூக்கம் உன்னார்’’ [1798] என்னும் பகுதி அருளாலே விளைகின்ற அதிசூக்குமச் செயல்கள் ஐந்து உண்டு. அவற்றை உன்ன வேண்டும் என்ற செய்தியை நமக்குப் புலப்படுத்து கின்றது. இந்த ஐந்து செய்தியை மேல் பாட்டு கூறுகின்றது.

திருப்போரூர்ச் சந்நிதி முறையில் சிற்சுகம் என்ற ஒரு பகுதி உண்டு. அப்பகுதி பதினெட்டு பிரிவாகக் கூறப்பட்டுள்ளது. அதில் பதின்மூன்றாவது பிரிவில் உள்ள ஐந்தாவது பாட்டு, மேற்கூறப்பட்டுள்ள பஞ்சதிகாரப் பாடலின் கருத்தையே கூறுகின்றது.

‘‘பிறப்பறு வீட்டுஉற் பவம்எனக்கு அருளிப்,
பிறங்குசிற் சுகஅமிர்து அருத்தி.
ஒறுக்கும்என் போதம் அனைத்தையும் அறுத்து இங்கு
உலகியல் உணர்வெலாம் மறைத்து,
விறல்தகும் உனது திருவடி விளக்கி,
மேன்மைஐந் தொழில்இவண் புரிவாய்
மறைக்குஉரி யவனால் இனிப்பிறப்பு அறியார்
மலிசம ராபுரிக் குகனே.’’

அறிஞர் இப்பாட்டையும் பஞ்சதிகாரப் பாட்டையும் ஒப்பு நோக்கி உரை கருத வேண்டும்.

இவ்வடியைச் சேர்ந்த இடத்து ஐந்தொழில் ஏது என்னில்?

திரோபாவம், அநுக்கிரகம் என்கின்ற இறைவனுடைய இரண்டு திருவடிகளில் ஈற்றில்கூறிய அநுக்கிரக அடி என்னும் அருளைச் சேர்ந்த இடத்து ஐந்தொழில் எவை என்னில்.

இயைதரும் மாயையில் உதித்தாங்கு அருளில் உதித்ததுவே செவ்விய நல் சிருட்டியதாம்:

பொருந்திய மாயையிலே ஆன்மா தோன்றி இயங்குவது போல, அருளில் தோன்றி இயங்குவது நல்ல படைப்புத் தொழிலாகும்.

இவ்வடியின் கருத்தை மேற்கண்ட சிற்சுகப்பாட்டு "பிறப்பறு வீட்டு உற்பவம் எனக்கு அருளி" என்று கூறும். பிறப்பறு வீடு என்பது திருவருள் ஆகும்.

சுகப்பேறே திதியாம்:

சிற்சுகப்பேறே திதி என்னும் தொழிலாகும். இக்கருத்தை சிற்சுகப்பாட்டு "பிறங்கு சிற்சுக அமிர்து அருத்தி" என்று குறிப்பிடுகின்றது.

சீவன் இருள்போதம் அறல் சங்காரமாகும்:

சீவனுடைய தற்போதமாகிய இருள் அறிவு அழிதல் சங்காரம் என்னும் தொழிலாகும். இக்கருத்தை மேற்கண்ட சிற்சுகப்பாட்டு "ஒறுக்கும் என் போதம் அனைத்தையும் அறுத்து" என்று குறிப்பிடும்.

அவ்வியமாம் பிரவஞ்சம் தோன்றாத அதுவே ஆன திரோபாவம் அதாம்:

பற்றுக்கு ஏதுவான உலகப் பொருள்களில் எதுவும் தோன்றாமல் இருப்பதுவே திரோபாவம் என்னும் தொழிலாகும்.

இக்கருத்தை மேற்கண்ட சிற்சுகப்பாட்டு, "இங்கு உலகியல் உணர்வெலாம் மறைத்து" என்று கூறும்.

ஆயஒரு நான்கும் தவ்வல்அற விளங்குதல் இங்கு அநுக்கிரகமாகும்:

மேலே சொன்ன நான்கும் பொருந்துதல் நீங்க திருவருளடி மட்டும் நன்றாக விளங்குதல் அநுக்கிரகம் என்னும் அருளாகும்.

இதனை மேற்கண்ட சிற்சுகப்பாட்டு "விறல்தகும் உனது திருவடி விளக்கி" என்று கூறும்.

துணப்புஇல் சுகாதீதத்தில் கிளக்க ஒண்ணாது உறுமே:

நீங்குதல் இல்லாத சுகத்திற்கு அதீதமான அருள்சிவ நிலையில் ஆன்மா இருந்து சொல்ல ஒண்ணாத இன்ப அநுபவத்தைப பெற்று விளங்கும் என்க.

விளக்கம்:

> **"அருளில் பிறந்திட்டு அருளில் வளர்ந்திட்டு**
> **அருளில் அழிந்துஇளைப் பாறி மறைந்திட்டு**
> **அருளான ஆனந்தத்து ஆரமுது ஊட்டி**
> **அருளால் என்நந்தி அகம்புகுந் தானே" [1800]**

திருமந்திரம் ஏழாம் தந்திரத்துள் திருவருள் வைப்பு என்ற தலைப்பில் இப்பாடல் வந்துள்ளது. இப்பாடலில் அருளில் பிறந்திட்டு என்பது மேலே சொன்ன பாடலில் மாயையில் உதித்தாங்கு அருளில் விதித்ததுவே என்றும், அருளில் வளர்ந்திட்டு என்பது மேலே சொன்ன பாடலில் சுகப்பேறே திதியாம் என்றும், அருளில் அழிந்து என்பது மேலே சொன்ன பாடலில், சீவன் இருள்போதம் அறல் சங்காரம் என்றும், இளைப்பாறி மறைந்திட்டு என்பது மேலே சொன்ன பாடலில் அவ்வியமாம் பிரவஞ்சம்தோன்றாத அதுவே ஆன திரோபாவம் என்றும், அருளான ஆனந்தத்து ஆரமுது ஊட்டி அருளால் என்நந்தி அகம் புகுந்தானே என்பது மேலே சொன்ன பாடலில் ஆய ஒரு நான்கும் தவ்வல்அற விளங்குதல் இங்கு

அநுக்கிரகமாகும். தணப்புஇல். சுகாதீதத்தில் கிளக்க ஒண்ணாது உறும் என்று கூறியுள்ள உண்மையை ஒப்பிட்டு அறியலாம்.

குறிப்பு:

அடிகள் சமாதி என்ற தலைப்பில் கூறும் செய்தி எல்லாம்

''முப்பதும் ஆறும் படிமுத்தி ஏணியாய்
ஒப்பிலா ஆனந்தத்து உள்ளொளி புக்குச்
செப்ப அரிய சிவங்கண்டு தரம்தெளிந்து
அப்பரி சாக அமர்ந்திருந் தாரே.'' [126]

என்ற திருமந்திரப் பாடலில் அடங்கியுள்ளது. இதை அறிஞர் ஆராய்க.

மேற்கண்ட செய்திகளைக் கேட்ட மாணவனுடைய புகழ்ச்சி யுரையும் அவன் கேட்பதும்

அளவறுநாள் பிறவிஇடர்க் கடல்அலையில் கிடந்த
அடியேனைத் தூக்கிஉமது அருள்நடனம் காட்டி
உளமகிழ்வுற்று அறியாத யாவைகளும் உணர்த்தி
உயர்மவுனா னந்தத்தண் கடல்வைத்தீர் அடிகள்
களவினன் ஈதுக்குஓர்கைம் மாறுஅறியேன் உமது
கமலபதம் எந்நாளும் அருளுடனே வாழி
வளனுறுநும் அருள்அடியார் நடைபுகல வேண்டும்
வாரீசத் திருவாயான் மதுரநறை போல. 45

பதவுரை:

அளவறுநாள் பிறவி இடர்க்கடல் அலையில்கிடந்த அடியேனைத் தூக்கி உமது அருள்நடனம் காட்டி உளமகிழ்வுற்று அறியாத யாவைகளும் உணர்த்தி உயர் மவுனானந்தத்தண் கடல் வைத்தீர் அடிகள்:

எனக்கு அடியான ஆசிரியரே! கணக்கற்ற காலம் பிறவி என்கின்ற துன்பம் என்கின்ற கடலில் அழுந்திக் கிடந்த அடியேனை அருட்கையால் எடுத்துத் தாங்கள் செய்துவரும் அருள் நடனத்தை எனக்கு உணர்த்தி, உள்ளம் மகிழ்ந்து யான் இதுவரை அறிந்திராத எல்லாவற்றையும் எனக்கு உணர்த்தி உயர்ந்த மௌன சமாதியில் இருந்து அநுபவிக்கப் பெறும் சிவானந்தமாகிய தண்கடலிலே என்னை வைத்துவிட்டீர்.

களவினன் ஈதுக்கு ஓர் கைம்மாறு அறியேன்:

இதற்குமுன் திருடனாய் இருந்த யான் இந்த உயர்ந்த நிலையைத் தங்களால் பெற்றதற்குக் கைம்மாறான உதவி ஒன்றும் செய்ய அறியேன்.

உமது கமலபாதம் எந்நாளும் அருளுடனே வாழி:

இவ்வாறு எமக்கு உபதேசித்த தங்களுடைய தாமரைமலர் போன்ற திருவடி எப்பொழுதும் வாழ்வதாகும்.

வானுறு நும்அருள் அடியார் நடைபுகல வேண்டும் வாரீசத் திருவாயான் மதுரநறை போல:

இனி உங்களுடைய மலர்போன்ற திருவாயினால் திருவருள் யோகத்தைப் பயின்றுள்ள அடியார்களினுடைய சீலமான ஒழுக்கம் எப்படி இருக்கும் என்பதையும் எமக்குத் தேன்போல் அருளவேண்டும்.

அருளடியார் நடை

புங்கமுறு மெய்ஞ்ஞானப் புதல்வாகேள் அடியார்
புன்னெறிஏ தும்அறியார் நன்னெறியைத் தானே
எங்கும்உறும் சிவம்ஒன்றே கண்டிடுவர் காணார்
எண்ணரிய பலவிதமாய் நண்ணுறுமா யைகளைத்
தங்கியபல் உயிர்கட்கும் தண்ணளியே புரிவார்
தாய்போல்சேய் போல்நாளைக்கு என்றுன்னார்சற்றும்
மங்கியும்முற் பவம்உற்றும் வருமவர்போல் பிறரை
வருபகைவர் உறவர்என் வாடார்மகி ழாரே. 46

பதவுரை:

புங்கமுறு மெய்ஞ்ஞானப் புதல்வாகேள் அடியார் புன்னெறி ஏதும் அறியார் நன்னெறியைத் தானே எங்கும் உறும் ஒன்றே கண்டிடுவர்:

சிறப்பினைப் பெற்ற உண்மை ஞானத்தை உணர்ந்த மாணவனே! நான் சொல்வதைக் கேட்பாயாக. திருவருள் நெறியைப் பின்பற்றிய அடியவர்கள் தீய வழியைச் சிறிதும் கருதார். அவர் நல்வழி ஒன்றையே கருதி சிவமாகிய பரம்பொருள் எங்கும் நிறைந்திருக்கின்றது என்ற உண்மையையே காண்பவராக இருப்பர். இது அடியாருடைய பரிபூரணநிலை ஆகும்.

காணார்: சிவத்தைத் தவிர்த்து வேறு ஒன்றைக் காணார்.

எண்ணரிய பலவிதமாய் நண்ணுறு மாயைகளைத் தங்கிய பல்லுயிர்கட்கும் தாய்போல், சேய்போல் தண்ணளியே புரிவார்:-

கணக்கற்ற பலவகைப் பொருளாகி, மூன்று மாயைகளை இடமாகப் பெற்று, அவற்றில் வாழும் பலவிதமான உயிர் வர்க்கங்கட்கும் அன்பு ஒன்றையே செய்வார்கள். இது அடியாருடைய அன்புப்பண்பு.

தாய்போல் சேய்போல் தண்ணளியே புரிவார்:

ஒருதாய் தன்னுடைய மகவுக்குச் செய்கின்ற அன்புபோலப் புரக்கும் அன்பு ஒன்றையே செய்வார்கள். இது அடியாருடைய அன்புப்பண்பு நிலையாகும்.

நாளைக்கு என்று உன்னார்:-

நாளைச் சேர்வது நினையார் என்றபடி, எதிர்காலத்திலே தமக்கு இன்னது வேண்டும் என்று கருதும் பற்றினைச் செய்யார். இது அடியாருடைய பற்றற்ற நிலை ஆகும்.

சற்றும் மங்கியும் உற்பவமுற்றும் வருமவர்போல் பிறரை வருபகைவர் உறவர் என வாடார் மகிழாரே:-

மயங்கியும் பிறந்தும் வருகின்ற பிறமக்களைப் போல, பிற மக்களைப் பகைவர் என்று கருதி அவர்களிடத்துச் சற்றும் வெறுப்பும், சிலரை உறவென்று கருதி விருப்பும் செய்யார்.

அடியார் பகை எனக் கருதுவதும் உறவு எனக் கருதுவதும் நொதுமல் எனக் கருதுவதும் ஆகிய மூன்று நிலைகளை இப்பாட்டு கூறுகின்றது.

ஆணவமே ஆருயிர்கட்கு உட்பகைஎன்று அறிவார்
அளவறுநா ளுறமுடித் துயர்உறவைத் ததனால்
தாஹுஎமைக் கேளாது தண்ணளியால் எடுத்துத்
தனுவாதி தந்ததனைப் பரிபாக மாக்கி
மாணுறும்இன் பந்தரலான், அக்கடவுள் தானே
மன்னுறவாம்; என்றுஅறிவார் அன்னவனைத்தொழுவார்
காணுயிர்தற் சுதந்தரமாய்ச் சுகதுன்பம் தருமோர்
காரணம் இன்மையின் அதனைப் பொதுவாகக்
காண்பார். 47

பதவுரை:

அளவறு நாள் உறமூடித் துயர்வுற வைத்ததனால் ஆணவமே ஆருயிர்கட்கு உட்பகை என்று அறிவார்:

அளவற்ற காலம் நன்றாக அறியாமையைச் செய்து, மூடி, துன்பத்தை உண்டாக்கியதால் ஆணவமலம் ஒன்றே ஆருயிர்களுக்கு உட்பகை என்பதைத் தெளிவாக அறிவார்.

தானுஎமைக் கேளாது தண்ணளியால் எடுத்துத் தனுவாதி தந்ததனைப் பரிபாகமாக்கி மாணுறும் இன்பம் தரலான் அக் கடவுள் தானே மண்ணுறவாம் என்று அறிவார்:

தாணுவாகிய இறைவன் உயிர்வர்க்கங்களாகிய எங்களைக் கேளாமலே தன்னுடைய திருவருளால் கேவலாவத்தையிலிருந்து எங்களை எடுத்து, தனுகரண புவன போகங்களை எல்லாம் எங்களுக்குக் கொடுத்து, எங்களுக்கு மலபரிபாகம் வரச்செய்து, எங்களுக்கு மோட்சமாகிய பேரின்பத்தைத் தருதலால், அத்தாணுவே நிலைபெற்ற உறவாகும் என்று அறிவார்.

அன்னவனைத் தொழுவார்:

அத்தகைய இறைவனையே உறவாகக் கருதி வழிபட்டு வருவார்.

காணுயிர் தற்சுதந்தரமாய்ச் சுகதுன்பம் தரும்ஓர் காரணம் இன்மையின் அதனைப் பொதுவாகக் காண்பார்:-

காணப்பட்ட உயிர்க் கூட்டங்கள் இறைவன் இயக்க இயங்குதலே அன்றி தனக்குள்ள உரிமைக் குணத்தால் எதுவும் செய்யாமையால் அவ்வுயிர்க் கூட்டங்களைப் பகை உணர்வும், உறவு உணர்வும் இன்றி நொதுமல் உணர்வாகவே பார்ப்பார்.

ஊழ்வினையாலே பிறருக்கு உயர்நன்மை செயினும்
ஒருவர்தமக்குத் தீமை உறுநன்மை செயினும்
தாழ்வறுபே ரருளாளன் தன்செயலா நினைவார்
தன்பாலோர் தீமையுறில் தம்மைவெறுத் திடுவார்
காமுறுநெஞ் சினர்பிறருக்கு ஒருநன்மை செயினும்
கருதயலார் தீதுதமக்குச் செயினும் காண்பர்
ஏழ்கடலில் சுகதுன்பம் யாம்பிறர்என்று உன்னி
இவைமாறிச் செய்யும்இடத்து ஈசன்மேல் வைப்பார்.
48

பதவுரை:

ஊழ்வினையாலே பிறருக்கு உயர்நன்மை செயினும் ஒருவர் தமக்குத்தீமை உறுநன்மை செயினும் தாழ்வறு பேரருளாளன் தன் செயலா நினைவார்:

ஆகூழாலே பிறருக்குத் தாம் உயர்ந்த நன்மையைச் செய்து விட்டாலும், பிறர் தமக்குத் தீமையையும், நன்மையையும் கலந்து செய்யினும், தாழ்ச்சியில்லாத பேரருளாளனாகிய இறைவனுடைய செயலாலே இவை நிகழ்ந்தது எனக் கருதுவார்.

தன்பாலோர் தீமையுறில் தம்மை வெறுத்திடுவார்:

தம்மிடத்தில் உலகநடைக்கு ஒவ்வாத தீயசெயல்கள் ஏதாவது நிகழ்ந்துவிட்டால் அதற்காக மிகவும் வருந்துவர்.

காமுறுநெஞ்சினர் பிறருக்கு ஒருநன்மை செயினும் கருதயலார் தீது தமக்குச் செயினும் காண்பர்:

விருப்பம் உற்ற பிறர், பிறருக்கு ஒரு நன்மையைச் செய்தாலும், கருதப்பட்ட பிறர் தமக்குத் தீமை செய்தாலும் இவ்விரண்டினையும் பொதுவாகவே காண்பர்.

ஏழ்கடலில் சுகதுன்பம் யாம் பிறர் என்று உன்னி இவை மாறிச் செய்யும் இடத்து ஈசன்மேல் வைப்பார்:

ஏழ் கடலைப்போன்ற இன்ப துன்பங்களை, எமக்கு என்றும், பிறர்க்கு என்றும் கருதி, இன்பத்தைச் செய்யாமல் துன்பத்தைச் செய்யின் இது இறைவனுடைய திருவருள் என்று கருதியிருப்பார்.

முளையாதி சராசரம்ஓர் முன்னிலையால் எழினும்
மொழிந்தவையோர் முன்னிலையால் காக்கப்பட்டு உறினும்
வளைகடல்சூழ் உலகினில்ஓர் உயிர்க்குஓர்முன் னிலையான்
மலிநாசம் வந்துறினும் நூல்பிறரால் மனத்தால்
உளைவுறுமா மயக்குறினும் அவைகளினால் தெளிதல்
உற்றிடினும் முன்னிலையைச் சற்றெனினும் உன்னார்
தளையவிழும் பூங்கொன்றைச் சங்கரனார் புரியும்
தண்ணளிஐந் தொழில்என்றே எண்ணிவியந் திடுவார். 49

பதவுரை:

முளையாதி சராசரம் ஓர் முன்னிலையால் எழினும்:

இயங்குதிணை, நிலைத்திணையாகிய எவையும் ஓர் முன்னிலைப் பொருளாலே முளைத்தல் முதலான தொழிலைப் பெற்று படைக்கப்பட்டாலும். (படைப்பு)

மொழிந்தவை ஓர் முன்னிலையால் காக்கப்பட்டு உறினும்:

மேலே சொன்னவை, ஏதோ ஒரு முன்னிலைப் பொருளால் காக்கப்பட்டாலும், (திதி)

வளைகடல்சூழ் உலகினில் ஓர்உயிர்க்கு ஓர்முன்னிலையான் மலிநாசம் வந்து உறினும்:

வளைந்த கடல் சூழ்ந்த உலகத்திலே ஓர் உயிர்க்கு, ஓர் முன்னிலைப் பொருளால் அழிவு (சங்காரம்) வந்தாலும்,

நூல்பிறரால் மனத்தால் உளைவுறுமா மயக்குறினும்:

படிக்கும் நூல்களாலும், நம்மொடு பழகும் பிறராலும் நம்முடைய மனத்தாலும் பெரிய மயக்க உணர்ச்சி வந்தாலும் (திரோபாவம்)

அவைகளினால் தெளிதல் உற்றிடினும்:

மேலே சொன்ன நூல், பிறர், மனம் முதலானவற்றால் தெளிவை (அநுக்கிரகம்) அடைந்தாலும்,

முன்னிலையைச் சற்றெனினும் உன்னார்:

மேலே சொன்ன ஐந்திற்கும் காரணமான முன்னிலைப் பொருளைச் சிறிதேனும் கருதார்.

தளையவிழும் பூங்கொன்றைச் சங்கரனார் புரியும் தண்ணளி ஐந்தொழில் என்றே எண்ணி வியந்திடுவார்.

மலரும், பூங்கொன்றை அணிந்த சிவபெருமான் செய்கின்ற அருளோடு கூடிய ஐந்தொழில் என்றே இவற்றை எண்ணி வியப்புடன் இருப்பார்.

வியப்பு - அதிசயம்.

பருத்திஅசத் தின்மயிர்மண் பாடாணா திகள்தாம்
பரன்சிருட்டி அவனருளால் பகர்சீவ சிருட்டி
விரித்தபடங் கம்பளம்மட் கடம்சிகரி கோயில்
விளம்பும்இவை யாதிகளாம் இவைபோல உலகம்
அருத்தியுடன் விளங்குறினும் சீவர்கள்போல் மயங்கார்
அருள்விளையாட்டா நினைவர் ஆதலில்புற் புதமாய்
உருக்கொளினும் சிருட்டிதிதி சங்காரம் உளஎன்று
உன்னிடுவார் துன்னிடுவார் உயர்சுகவா ரியதாய். 50

பதவுரை:

பருத்தி அசத்தின்மயிர் மண் பாடாணாதிகள் தாம் பரன் சிருட்டி:

பருத்தி என்னும் பஞ்சும், ஆட்டின் மயிரும், மண்ணும், கல் முதலானவைகளும் ஆகிய இவை கடவுளின் படைப்பாகும்,

அவன் அருளால் பகர்சீவசிருட்டி விரித்த படம் கம்பளம் மட்கடம் சிகரிகோயில் விளம்பும் இவை யாதிகளாம்:

இறைவனுடைய திருவருளாலே நிகழும் சீவனுடைய படைப்பு எது என்றால் முறையே விரித்த ஆடையும், கம்பளமும், மண்குடமும், கோபுரம், கோயில் முதலானவைகளும் என்னும் இவைகளாம்.

இவைபோல உலகம் அருத்தியுடன் விளங்குறினும் சீவர்கள் போல் மயங்கார்; அருள் விளையாட்டா நினைவர்:

மேலே கூறியவை போலக் காணப்பட்ட இவ்வுலகம் கடவுள் படைப்பு, சீவன் படைப்பு என்று இரண்டு விதமாய் இருந்தாலும். அறிஞர் இவ்வுலகத்தைப் பார்த்து மயங்கமாட்டார்கள். இறைவனுடைய திருவிளையாட்டாகவே கருதியிருப்பர்.

ஆதலில் புற்புதமாய் உருக்கொளினும் சிருட்டிதிதி சங்காரம் உளஎன்று உன்னிடுவார்:

மேலே சொன்ன காரணத்தினாலே நீரின்கண் ஒரு குமிழி தோன்றினாலும், அதற்கும் சிருட்டியும், திதியும் சங்காரமும் உள்ளன என்று கருதிடுவர்.

உயர்சுகவாரியதாய் துன்னிடுவார்:

எப்பொழுதும் உயர்ந்த சிவம் என்னும் இன்பக்கடலையே கருதி பொருந்தியிருப்பார்.

காமமுறின் மோகமும்லோ பமும்தோன்றும்; அந்தக்
காமம்அறில் இரண்டும்அறும்; காமம்மறு தலையில்
ஏமம்மிகும் கோபம்உறும் இதனின்மத வயிரம்
எழும்அதறில் இவைஅறும்என்று இச்சைசினம் சாரார்
யாமறிவிங்கு இவ்வறிவில் எழும்இன்பும் எமதென்று
எண்ணிடுவார் மண்ணவனிலை யாம்எமதென்று
எண்ணார்
சேமநிதி இறைவன்அவன் இறைவிஅவள் அதுதான்
சிற்சுகம்என்று எண்ணிடுவார் நற்சுகபூர ணரே. 51

''காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றின்
நாமம் கெடக் கெடும் நோய்''

என்பது திருக்குறள்.

அதனால் துன்பத்திற்கு ஏதுவானவை காமமும், வெகுளியும், மயக்கமும் என்பவைகளாம். மேலே சொன்ன மூன்றில் மயக்க உணர்வை காமத்திற்குள்ளும், வெகுளிக்குள்ளும் அடக்கி, காமமும் வெகுளியும் அறவேண்டும் என்ற செய்தியை இப்பாட்டு கூறுகின்றது.

காமம்உறின் மோகமும் லோபமும் தோன்றும்; அந்தக் காமம் அறில் இரண்டும் அறும்:

காமம் என்கின்ற குணம் ஒருவரிடத்தில் பொருந்தினால் அவரிடத்திலே மயங்கி விரும்புதல் என்னும் மோகமும், காமத்தால் விரும்பிய பொருளை பிறர்க்கு ஈயாத லோபமும் தோன்றும். அந்தக் காமம் அற்றால் மோகம், லோபம் என்கின்ற இரண்டு தீய குணங்களும் அடியோடு போய்விடும்.

காமம் மறுதலையில் ஏமம்மிகும் கோபம் உறும்; இதனின் மதவயிரம் எழும். அது அறில் இவை அறும்:

காமத்திற்கு எதிரான குணம், சினம் என்னும் கோபம் ஆகும். ஆதலின், அக்கோபம் தோன்றினால் மதம் என்கின்ற தீயகுணமும், வயிரம் என்கின்ற தீயகுணமும் தோன்றும்.

அது அறில் இவைஅறும்; என்று இச்சைசினம் சாரார்:

கோபம் நீங்கினால் மதமும், வயிரமும் நீங்கிவிடும் ஆகையினால் காமமாகிய இச்சையையும், கோபமாகிய வெகுளியையும் அறிஞர் சாரமாட்டார்கள்.

யாமறிவு இங்கு இவ்வறிவில் எழும் இன்பம் எமதென்று எண்ணிடுவார் மண் அவனியை யாம்எமதென்று எண்ணார் சேமநிதி இறைவன்அவன் இறைவிஅவள் அதுதான் சிற்சுகம் என்று எண்ணிடுவார் நற்சுக பூரணரே:

நல்ல அறிவின் இன்பத்தை அடைந்த அறிவாளர் யாம் அறிவுப்பொருள், இங்கு அறிவில் எழும் இன்பம் எம்முடைய அநுபவப்பொருளாகும் என்று எண்ணிடுவார். இந்த மண்ணையும், இந்த உலகத்தையும் யாம் என்றும், எமது என்றும் கருதமாட்டார். நமக்குச் சேமமான பொருள் இறைவனாகிய சிவனும், இறைவியாகிய சிவையும் ஆகும்.

அந்த இறைவியின் அருளாலே தோன்றுவது சிற்சுகம் என்று கருதுவர்.

வாழ்த்து

நெய்யிழுதா கியவாறே நிகழ்சுகபூ ரணமாய்
நிறைந்தவடி வோர்வடிவாய் எழுந்தருளி நாயேன்
பொய்யறநும் திருநடனம் தூலமுதன் மூன்றாப்
புகன்றுஅடியேன் தனைஇன்பப் புணரியிலே வைத்தீர்
செய்யநும தருளடியார் நடையும்உரைத் திட்டீர்
சிறியேன்மேல் வைத்திடுபே ரருள்நாளும் வாழி
ஐயமற என் முடிமேல் வைத்ததிருச் செந்தாள்
அருள்வாழி அடியர்குழாம் வாழிசகம் வாழி. 52

பதவுரை:

நெய்யிழுதாகியவாறே நிகழ்சுக பூரணமாய் நிறைந்த வடிவோர் வடிவாய் எழுந்தருளி நாயேன் பொய்யறநும் திருநடனம் தூலமுதன் மூன்றாம் புகன்று அடியேன்தனை இன்பப் புணரியிலே வைத்தீர்:

நெகிழ்ந்த வடிவமுள்ள நெய், பின்னர் உரைந்து இழுது என்னும் கட்டியாய் வந்தாற்போல, நிட்சகலவடிவமாய் வந்த தாங்கள் சகல வடிவம் எடுத்து ஆச்சாரியன் என்ற பெயர்த் தாங்கி வந்து, எளிய நாய் போன்ற அடியேனுடைய பொய்யுணர் வெல்லாம் கெடும்படி உன்னுடைய படைத்தல் முதலான திருநடனமாகிய ஐந்தொழிலைத் தூலம் என்றும், சூக்குமம் என்றும், காரணம் என்றும் மூன்று வகையாகப் பிரித்துக் காட்டி, அடியேனை இன்பக் கடலில் இருக்கச் செய்தீர்.

செய்ய நுமதருள் அடியார் நடையும் உரைத்திட்டீர்:

அதன்பின் செம்மையான அருளைப் பெற்றிருக்கும் அடியவர்தம் ஒழுக்கமாகிய சீலத்தையும் எமக்கு உணர்த்தினீர்.

சிறியேன்மேல் வைத்திடு பேரருள் நாளும் வாழி, ஐயமற என்முடிமேல் வைத்த திருச்செந்தாள் அருள்வாழி அடியார் குழாம்வாழி சுகம் வாழி:

எளியேன் மீது தாங்கள் வைத்துள்ள பேரருள் என்றும் வாழ்வதாகுக. என்னுடைய சந்தேக விபரீதங்கள் நீங்கும்படி என்னுடைய தலையின்மேலே வைத்து உபதேசம் செய்வதற்குக் காரணமான உன் திருவடிகள் வாழ்க. உன்னுடைய அடியார் கூட்டங்கள் எல்லாம் வாழ்க. சிற்சுகம் வாழ்க.

தவத்திரு சிதம்பர சுவாமிகள் அருளிய

பஞ்சதிகார விளக்கம் மூலமும்,

அதற்குக் குகையூர் மூதறிஞர்

பேராசிரியர் திரு அடிகளாசிரியர்

எழுதிய உரையும் முற்றின.

உ

இறைவன் துணை

திருப்போரூர் முருகன் வழிபாட்டுப் பாடல்கள்

திருப்போரூர் தவத்திரு. சிதம்பர சுவாமிகள் என்னும் சிதம்பர முனிவர் முருகனுடைய திருவருளைப் பெற்ற சிறந்த அநுபவ ஞானியாவார்.

அவர் முருகனுடைய திருவருளிலே தோய்ந்து திருவாய் மலர்ந்தருளிய பாடல்களின் தொகுப்பே திருப்போரூர்ச் சந்நிதி முறையாகும். அச்சந்நிதி முறையுள் முதல் நூலாய் இருப்பது திருப்போரூர் முருகன் பிள்ளைத் தமிழாகும். இரண்டாவது நூலாய் இருப்பது திருப்போரூர் முருகன் அலங்காரமாகும். மூன்றாவது நூலாய் இருப்பது திருப்போரூர் முருகன் மாலை யாகும். இது முற்றிலும் வெண்பாவாலேயே அமைந்துள்ளது. காப்பு உட்பட நூற்றுமூன்று பாடல்களை உட்கொண்டது. இவற்றுள் சில நல்ல கருத்துடைய பாடல்களை இங்கே எடுத்துத் தருகின்றேன்.

1. ''இருட்டறையை நோக்குவிழிக்கு ஏற்றுவிளக்கு என்றூழ்
பொருள்தமையே காட்டும் அதுபோல''- மருட்டனையும்
மாயையினால், பேரருளால், மாற்றி, அறிவளிக்கும்
தாயனையான் போரூரன் தான். (3)

இப்பாட்டு என் மருளைமாற்றி அறிவளிக்கும் தாய் போன்றவன் என்று போரூர் முருகனைப் புகழ்ந்தது.

2. நாயேன்உன் சீரடிக்கு நன்கல்ல செய்தாலும்
பேயேன் இழைத்த பெரும்பிழையை — நீயே
பொறுத்தாள் வ(து)உன் கடனாம் போரூரா என்னை
ஒறுத்தால் எனக்கார் உறவு. (4)

வினாவும் விடையும் ஒரு தொடரிலேயே அமைந்த தொனிப் பாட்டு

3. இல்லறத்தான் அல்லேன், இயற்கைத் துறவியல்லேன்,
நல்லறத்து ஞானிஅல்லேன் நாயினேன்-
சொல்அறத்தில்
ஒன்றேனும் இல்லேன், உயர்ந்ததிருப் போரூரா
என்றேநான் ஈடேறு வேன். (7)

இப்பாட்டில் "என்றே நான் ஈடேறுவேன்" என்ற சொல் தொடரானது நான் எப்பொழுது ஈடேறப் போகின்றேன் என்று வினாவாகவும், போரூரா என்று சொல்லிக் கொண்டே ஈடேறு வேன் என்று விடையாகவும் அமைந்திருத்தலை அறிஞர் காண்க. இதனை வடமொழி அறிஞர் தொனிப்பொருள் என்பர்.

4. அருளே வடிவாகி ஆனந்த வாரிப்
பொருளாய்யான் என்னதெனல் போமோ?-மருள்ஏதும்
இல்லானே! போரூர் இறைவனே! நாயேற்கு
நல்லானே! சொல்லாய் நயந்து. (18)

5. தாயாம் எனக்குரிய தாதையாம் சற்குருவாம்
தேயாக் கருணைபொழி தெய்வமாம் – மாயப்
பொருள்நீக்கும் அன்பர் புனிதவீடு ஏற
இருள்நீக்கும் போரூர் இறை. (26)

உலக மக்கள் மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற நான்கும் ஒருவர்க்குச் சிறந்தவை என்பர். அச்சிறந்த நான்கும் போரூர் முருகனாகிய நீயே என்றது இப்பாட்டு.

6. கேட்டதெல்லாம் பாலிக்கும் கேடிலாத் தாதாவும்,
வீட்டுநெறி காட்டும் வியன்குருவும் — நாட்டமென
உள்நின்று நாயேற்கு ஒளிகாட்டும் சிற்பரனும்,
எண்ணின்ற போரூர் இறை. (27)

7. ஏதுபிழை செய்தாலும் ஏழையேனுக்(கு) இரங்கித்
தீது புரியாத தெய்வமே! — நீதி
தழைக்கின்ற போரூர்த் தனிமுதலே! நாயேன்
பிழைக்கின்ற ஆறுநீ பேசு. (32)

8. பேய்போம்; துயரம்போம்; பித்தம்போம்; போகாத
நோய்போம்; மிடிபோம்; நுவலுங்கால் — தாய்போல
நன்னிதியைப் போல நயந்ததிருப் போரூரன்
சன்னிதியைக் கண்டளவே தான், (46)

9. குமரா நமஎன்று கூறினார் ஓர்கால்
அமரா வதிஆளவ ரன்றி — யமராசன்
கைபுகுதார் போரூரன் கால்புகுவார் தாய்உதுரப்
பைபுகுதார் சேராப் பயம்: (47)

10. என்போதம் நின்பாலே ஈதலே நல்லறனாம்;
உன்போதம் கைக்கொள்வது ஒண்பொருளாம்;
— உன்பாதத்து
ஆனந்தம் இன்பமாம் ஆரமுதே போரூரா
மோனந்தான் வீடாகும் மொய்த்து. (55)

என்போதம் என்றது எனது அறிவு என்று பொருள்பட்டு ஆன்மசித்தறிவைக் குறிக்கும். உன்போதம் என்றது உன்னுடைய அறிவு என்று பொருள்பட்டு முருகனுடைய பேரருள் அறிவைக் குறிக்கும்.

இப்பாட்டு அறம், பொருள், இன்பம், வீடு எவை என்பதைக் கூறுகின்றது. இப்பாட்டு ஈதல்அறம் என்ற ஔவைப்பாட்டைப் பின்பற்றியது.

11. ஐவாய் அவாவையும் உன்னாரடிக்கே வைப்பதலர்;
மெய்யான அன்பே வியன்சலமாம் — பொய்யாத
உன்போதத் தால்அறிவது ஒண்சுடராம்; போரூரா
என்போதம் நைவேத்தி யம். (57)

இப்பாட்டு முருகனை ஐம்புலன் உணர்வாகிய மலராலும், அன்பாகிய தண்ணீராலும், முருகனுடைய திருவருள் ஒளி என்னும் கற்பூரச் சுடராலும், ஆன்மபோதமாகிய நைவேத்தியத்தாலும் வழிபடுக என்றது.

12. நோயுற்று அடறாமல் நொந்துமனம் வாடாமல்
பாயில் கிடவாமல் பாவியேன் — காயத்தை
ஓர்நொடிக்குள் நீக்கியெனை ஒண்போரூர் ஐயாநின்
சீரடிக்கீழ் வைப்பாய் தெரிந்து. (92)

இப்பாட்டு இறுதிக் காலநிலை இவ்வாறு அமைய வேண்டும் என்று முருகனிடத்து வேண்டிக் கொள்வதைக் கூறுகின்றது.

13. களங்கமெலாம் அற்றேன்; கதிபுகுந்தேன்; நாயேன்
உளங்குளிர ஆனந்தம் உண்டேன் — வளங்களெல்லாம்
உற்றேன் திருப்போரூர் உத்தமனார் சீர்பாத
நற்றா மரைதொழுத நான். (101)

திருப்போரூர் முருகன் திருவடியை வணங்கியதால் யான் பெற்ற பயன் இவை என்பது,

14. கருத்தே புகுந்து கதி காட்டுங்
கண்ணே வருக! மெய்ஞ்ஞானம்
கரும்பே வருக! கருணைபொழி
காரே வருக! ஆனந்தப்
பெருக்கே வருக! யாங்கள் பெறும்
பேறே வருக! மறை சொல்கிளிப்
பிள்ளாய் வருக! பிறங்கு தெய்வப்
பெருமாள் வருக! குற மடந்தை
தருக்கே வருக! மிடியகற்றுந்
தருவே வருக! மன்பதைக்னோர்
தஞ்சே வருக! எமையளிக்குந்
தாயே வருக! பவப் பிணிக்கு
மருந்தே வருக! சமரபுரி
வாழ்வே வருக! வருகவே!
மறையின் சிரமெய்ப் பொருளான
வள்ளல் வருக! வருகவே!

— திருப்போரூர் பிள்ளைத் தமிழ், வருகை - 7

15. பூமேவு நாபனும் நான்முகத் தோனும் புரந்தரனும்
தாமேவு வாழ்வும் அதிகார மும்பெறத் தார்புனைந்த
கோமேவு வேல் கொண்(டு) அவுணரை மாய்த்த குமரன் எங்கோன்
தூமேவு தாள் மலர் போரூரில் என்முடி சூடினனே.
உள்ளத்(து) அழுக்கினை எல்லாம் அகற்றி உனதுபத
வள்ளக் கமலத்(து) எழுநறவு ஆனந்த வாரியிலே
கள்ளச் சிறியனை வைத்தாள வேண்டும் கழனிமடை
அள்ளத் திறந்திடும் வாளைகள் போரி அகிலவனே

— அலங்காரம் 1, 98.

பேராசிரியர் திரு. அடிகளாசிரியரின் வாழ்வும் பணியும்

(அ. சிவபெருமான்)

தமிழ் நாட்டில் விழுப்புரம் மாவட்டம் கல்லக்குறிச்சி வட்டத்தின் தென்கோடியில் வடவெள்ளாற்றின் வடக்குக் கரையில் உள்ளது குகையூர் என்னும் கூகையூராகும். இவ்வூரை இலக்கியங்கள் குகையூர் என்று கூறும். பொது மக்கள் கூகையூர் என்று கூறுவர்.

திருமூல நாயனாருடைய கொள்கையில் பயிற்சியுடைய சித்தநாதர் என்னும் சித்தர் ஒருவர் இவ்வூருக்கு வந்து ஆற்றங்கரைப் புதருள் தங்கி, சிவயோக சமாதியை மேற் கொண்டிருந்தார். அவர் அட்டமா சித்தியிலும் வல்லவராய் இருந்தார்.

அவ்வூரை ஆண்டிருந்த குறுநில மன்னனாகிய மாலாங்கன் என்பவன் சித்தநாதருடைய பெருமையை உணர்ந்து தன் மனைவியுடன் வந்து பேரன்புடன் அவர்க்குப் பணிவிடை செய் தொழுகினான். அவ்விருவருடையபேரன்பினையும் மகப்பேறின்றி மூப்படைந்துள்ள நிலையினையும் உணர்ந்த சித்தநாதர் அவ்விருவரையும் இளமை உடையவராக ஆக்கி, வீரசைவ சமய நெறியை மேற்கொண்டு வாழுமாறு செய்து, பக்குவற்கு உபதேசிக்கும் மாதவக் குருபரனாக மாலாங்கனை ஆக்கினார். அம்மாலாங்கனிலிருந்து அவன் பரம்பரை சித்தநாதேச்சுரா தீனமாக ஆயிற்று. அப்பரம்பரையில் பிற்காலத்தில் பட்டத்துப் பெரியசாமி ஐயர் என்பவர் வளர்ந்து வந்தார். அவர் மனைவி குங்கும அம்மாள் ஆவார். அவ்விருவரும் நன்கு படித்தவர்கள்.

அவ்விருவர்க்கும் கி.பி. 1910 – இல் சாதாரணயாண்டு சித்திரைத் திங்கள் ஐந்தாம் நாள் ஞாயிற்றுக்கிழமை தனுர் இலக்கினத்தில் பூசம் நாளில் திரு. அடிகளாசிரியர் முதல்மகனாகப் பிறந்தார். இவரின் பிள்ளைப்பெயர் குருசாமி அய்யர் என்ப தாகும். பிற்காலத்தில் தனித்தமிழ் இயக்கத்தலைவர் தவத்திரு

மறை மலையடிகளார் கருத்துப்படி திரு. அடிகளாசிரியர் எனப் பெயரை மாற்றிக் கொண்டார்.

இளமைக்காலமும் கல்வியும்:

இவர்க்கு ஏழாம் யாண்டில் தந்தையார் காலமாகி விட்டார். இவர் தாயார் குங்கும அம்மாள் என்பவர்தான் இவரைப் பேணிப்புரந்து கல்வி கற்குமாறு செய்தார். பெரம் பலூருக்கு அண்மையிலுள்ள நெடுவாசல் என்னும் ஊர் இவர் தாயார் பிறந்த ஊராகும் தாய்மாமன் இருவராவர். மூத்தவர் திரு கு. சுப்பிரமணிய தேவர் இளையவர் திரு. கு. சிவப்பிரகாச தேவர் ஆவார். இவ்விருவரும் நன்கு தமிழ் பயின்றவர்கள். மருத்துவக்கலை, சோதிடக்கலை ஆகியவற்றிலும் வல்லவர்கள். அடிகளாசிரியர் இவர்கள் (தாய்மாமன்) வீட்டில் தங்கி, தமிழ்ப் பயிற்சியையும் வடமொழிப் பயிற்சியையும் பெற்றார்.

பெரம்பலூரில் வாழ்ந்த திரு. மருதநாடார் என்பவரிடம் சோதிடக் கலையைக் கற்றுக்கொண்டார். முசிறி அரசினர் உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராய் இருந்த உயர்திரு. வீ. குமாரவீரையர் என்பவரிடம் நன்னூல் காண்டிகை உரையை மட்டும் முறைப்படி பாடங் கேட்டார். 1937-இல் இவர் தனியாகப் பயின்று சென்னைப் பல்கலைக்கழகத்தில் தேர்வெழுதித் தமிழ்ப் புலவர் பட்டத்தைப் பெற்றார்.

மயிலம் கல்லூரியில் பணி:

14—7—1938-இல் மயிலம் திருமடத்தில் ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ்க் கல்லூரி என்ற பெயரால் ஒரு தமிழ்க் கல்லூரி தோன்றிற்று. அக்கல்லூரியில் இவர் முதலாசிரியராக அமர்ந்தார். அக்கல்லூரி பல்கலைக்கழக ஒப்புதல் பெற்றபின் 1—7—41 இலிருந்து 30—11—41 வரை விரிவுரையாளராகவும், 11—2—42 இலிருந்து 1—7—1950 வரை துணைத்தலைவராகவும் அங்குப் பணியாற்றினார்.

கரந்தைத் தமிழ்க் கல்லூரிப் பணி:

பின்னர் 3-7-1950-இலிருந்து 3-7-1970 வரை தஞ்சாவூர் கரந்தைப் புலவர் கல்லூரியில் விரிவுரையாளராகவும், துணை முதல்வராகவும் பணியாற்றினார். 4—4—70-இலிருந்து ஓய்வு பெற்றார்.

ஓய்விற்குப்பின்:

சேலம் மாவட்டம் ஆத்தூரில் அமைந்திருந்த தனியார் தமிழ்க் கல்லூரி ஒன்றில் முதல்வராக மூன்றாண்டுகள் பணி யாற்றினார்.

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் ஆராய்ச்சி யாளராக ஓராண்டு (1977) பணியாற்றினார்.

20—1—1982ஆம் நாளிலிருந்து 1—10—1985 ஆம் நாள் வரை தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் சுவடிப் புலத்தில் சிறப்பு நிலை இணைப்பேராசிரியராக அமர்ந்து தொல்காப்பிய ஆராய்ச்சியைச் செய்து வந்தார். அதன்பின் மூப்பின் காரண மாகத் தமிழ்ப் பல்கலைக்கழகப் பணியிலிருந்து தாமே விலகிக் கொண்டார். மூப்பின் காரணமாகத் தமிழ்ப் பல்கலைக்கழகப் பணியிலிருந்து தம்மை விடுவித்துக் கொண்ட அவர் தம் இல்லத்திலிருந்து அப்பணியை (தொல்காப்பிய ஆய்வுப் பணியை) நிறைவு செய்து வழங்கினார்.

குடும்பம்:

இருந்தமிழே உன்னால் இருந்தேன் வானோர்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்.

என்று தமிழுக்காக வாழ்ந்து வரும் பேராசிரியர் அடிகளாசிரியர் அவர்கள், தம் பிறந்த ஊரிலேயே பிறந்த கூரை வீட்டிலேயே மண் தரையில் இன்னமும் அமர்ந்து இந்த மண்ணோடு இருக்கும் பற்றை நிலைப்படுத்துவார்போல் வளங்குன்றிய வாழ்வே வாழ்ந்து வருகிறார். தமிழ்ப் பணிக்காகவே தம் பொருளா தாரத்தைச் செலவிட்டு, வேண்டுமென்றே வளங்குன்றிய வாழ்வைத் தேடிக் கொண்டவராவார்.

அறிவுசான்ற மூன்று ஆண்மக்களும், அமைதி சான்ற மூன்று பெண்மக்களும் வாசுகி அனைய மனையாளுமே இவரது சொத்துக்களாக உள்ளனர். சிந்தனை செய்தே சிறந்த இவர் உடல் இன்று பலரின் சிந்தனைக்கு உரியதாக உள்ளது. எழுதி எழுதியே முதிர்ந்த இவரது கைகள் எழுத மறுக்கின்றன. நடந்தே சிறந்த கால்கள் நடை தடுமாறுகின்றன. ஆனால் சிந்தனை மட்டும் தடுமாறாமல் தமிழையே இன்றும் சிந்தித்துக் கொண்டிருக்கின்றது. அகவை (94) முதிர்ந்த நிலையில் எந்த ஆசையும் அற்று, தம் நூல்கள் அச்சேறி உலாவர வேண்டு மென்ற பற்று ஒன்றுடன் மட்டுமே இவர் வாழ்ந்து வருகிறார்.

அடிகளாசிரியர் தமிழ்ப்பணி

''என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறு''

என்ற திருமூலர் வாக்குப்படி அடிகளாசிரியர் இன்றளவும் தமது முதிர்ந்த வயதிலும் (94) தமிழ்ப்பணி செய்து வருகின்றார் ஏறத்தாழ முப்பத்தைந்து ஆண்டுகள் கல்லூரிகளில் தமிழ் கற்பிக்கும் பணியை இவர் ஆற்றி வந்தார். அன்றியும் இடையறாது உழைத்துத் தமிழில் நூல்கள் எழுதுவதிலும் ஈடுபட்டுள்ளார். இதுகாறும் இவர் உரைநூல்கள், பதிப்பு நூல்கள், ஆராய்ச்சி நூல்கள், படைப்பிலக்கிய நூல்கள் என்ற வகையில் 55 நூல்களைப் படைத்துள்ளார். அவை வருமாறு:

அடிகளாசிரியர் படைப்புகள்

1. உரை நூல்கள்

அ) உரைப் பதிப்புகள் (உரையோடு விளங்கிய நூல்களைப் பதிப்பித்தல்)

1. அருணகிரி அந்தாதி-சரசுவதிமகால் வெளியீடு 1967
2. மருதூரந்தாதி உரை-சரசுவதி மகால் வெளியீடு 1968
3. காலச் சக்கரம்-சரசுவதி மகால் வெளியீடு (சோதிட நூல்) 1969-79
4. வராகர் ஓராசாத்திரம் (சோதிட நூல்) சரசுவதி மகால் வெளியீடு 1970-8-91
5. சிவஞான தீபம் உரை - சரசுவதி மகால் வெளியீடு 1970
6. சிவப்பிரகாச விகாசம் உரை - சரசுவதி மகால் வெளியீடு 1977

ஆ) உரைவரைவுகள் (தாமே உரை எழுதி வெளியிட்டவை)

7. முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ் உரை 1938
8. சேக்கிழார் பிள்ளைத் தமிழ் உரை 1967
9. தமிழகக் கல்வெட்டு விளக்கவுரை (மு. கோவிந்தராசனாருடன் இணைந்து எழுதியவை) 1967-58
10. திருவலஞ்சுழி தேவாரப்பாடல்கள் உரை 1956
11. திருவாசகக் கோயில் திருப்பதிகம் உரை 1981
12. சிவபுராணச் சிற்றுரை 1986-99
13. சதமணிமாலை மூலமும் உரையும் 1990
14. சித்தாந்த சிகாமணி அங்கத்தலத் திரட்டு உரை 1992
15. ஸ்ரீமத் சிவஞான பாலயத்தேசிகர் திருப்பள்ளி எழுச்சி உரை 1993

16. குதம்பைச்சித்தர் பாடலும் உரையும் 1999
17. இட்டலிங்க அபிடேக மாலை மூலமும் உரையும் 2001
18. சசிவன்ன போதம் மூலமும் உரையும் 2002

2. பதிப்பு நூல்கள்

(ஓலைச் சுவடிகளிலிருந்து பதிப்பித்தவை)

19. வீரசைவப் பிரமாணம் 1936
20. சதமணிமாலை (மூலம் மட்டும்) 1938
21. சிவப்பிரகாச விகாசம் (மூலம் மட்டும்) 1939
22. காமநாதர் கோவை 1957
23. மேன்மைப் பதிகம் 1957
24. சதுர்லிங்க தசகோத்திர சதகம் 1958

3. ஆராய்ச்சி நூல்கள்

25. தொல்காப்பியம்-எழுத்து-இளம்பூரணம் (அரிய ஆராய்ச்சிப் பதிப்பு) 1966
26. 'ஐவகையடியும்' என்னும் தொல்காப்பிய நூற்பா விளக்கம் (சென்னைப்பல்கலைக்கழகம்) 1977
27. தமிழ் இலக்கண இலக்கியங்களில் சைவசித்தாந்தம் 1978
28. தொல்காப்பியம் – சொல் – இளம்பூரணம் (தமிழ்ப் பல்கலைக்கழகம்) 1990
29. தொல்காப்பியம் – பொருள் – செய்யுளியல் (தமிழ்ப் பல்கலைக்கழகம்) 1985
30. தொல்காப்பியம் – பொருள் எட்டு இயல் மட்டும் (தமிழ்ப் பல்கலைக்கழகம்) (அச்சில்)

4. படைப்பிலக்கிய நூல்கள்

அ) **செய்யுள் வடிவம்**

31. பிள்ளைப்பாட்டு 1945
32. திருஅரசிலிக் காதை 1948
33. குழந்தை இலக்கியம் 1963
34. சான்றாண்மை (கோப்பெருஞ்சோழன் பற்றியது) 1964-1975
35. சென்னிமலை முருகன் தோத்திரம் 1980
36. அரசியல் இயக்கம் 1981
37. பல்சுவைப் பண்ணத்திப் பாடல்கள் (குழந்தை இலக்கியம்) 1983
38. அருள்திரு மாரியம்மன் திருப்பதிகம் 1984
39. உளத்தூய்மை 1984-94

40. தண்ணிழல் (திருமுடிக்காரியைப் பற்றிய அரிய இலக்கியம்) 1990
41. மறவர் நத்தக்குன்றமரும் திருமுருகன் 1993
42. தொழிலியல் 1993
43. மெய்ப்பொருட் காதை (மெய்ப்பொருள் நாயனார் வரலாறு) 1995
44. தமிழ் மாண்பும் தமிழ்த் தொண்டும் (தமிழியக்க வெளியீடு) 1996
45. ஒன்பான்கோள் வணக்கப்பாடல்கள் (தமிழியக்க வெளியீடு) 1999

ஆ உரைநடை

46. எங்களூர் 1937
47. தொடக்கப்பள்ளி - நாடகம்
48. வீரசைவ சிவ பூஜாவீதி 1949
49 விலையேற்றமும் வாழும் வழியும் 1984
50. திருமூலரும் பேருரையும் (தமிழக அரசின் முதற்பரிசு பெற்ற நூல்) 1998
51. காயத்துள் நின்ற கடவுள் 1999
52. திருவாசக அநுபூதி 2000
53. கீதையின் அறிவுப் பொருள் 2000
54. திருமந்திர உணர்வு 2001
55. தொல்காப்பியச் செய்யுளியல் – உரைநடை (அச்சில்)

பொருள் முட்டுப்பாட்டினால் முடங்கிக் கிடக்கும் அச்சேறா நூல்கள்

1. குழந்தை இலக்கியம் (தொகுதி மூன்று)
2. கலித்தொகை உரை (குறிஞ்சிக் கலி)
3. பிரபுலிங்கலீலை உரை
4. அடிகளாசிரியரின் சமுதாயப் பாடல்கள்
5. அடிகளாசிரியரின் இலக்கணக் கட்டுரைகள்
6. அடிகளாசிரியரின் இலக்கியக் கட்டுரைகள்
7. திருக்குறள் உரை (133 குறள் வரை)
8. முப்பால் - உரைநடை
9. சிவஞான பாலைய சுவாமிகள் கலம்பகம் மூலமும் உரையும்

பேராசியர் திரு. அடிகளாசிரியரைப் பற்றிய அரிய செய்திகள்

1. இவரின் இயற்பெயர் குருசாமி. இவர் மறைமலை அடிகளாரின் தொடர்பால் தம்பெயரை 'அடிகளாசிரியர்' என்று மாற்றிக் கொண்டார். மேலும். இவர் வீரசைவ ஆசிரியப் பரம்பரையினர் என்பதால் 'திரு' என்ற சொல்லை 'ஸ்ரீலஸ்ரீ என்ற சொல்லிற்குப் பதிலாகச் சேர்த்து திரு. அடிகளாசிரியர் என்ற அழைக்கப்படுகின்றார்.

2. திரு அடிகளாசிரியர், குகையூர் திருமூல சித்தநாதேச்சுர ஆதீனத் தலைவராக (குருவாக) அமர்ந்து அருளாட்சியும் செய்து வருகின்றார். இவ்வாதீனத்தில் எக்காலத்திலும் 'சிவம்' விளங்க வேண்டும்; மேலும் எல்லோரும் வந்து போகின்ற, ஒன்று படுகின்ற, ஞான நூல் நிலையமாகவும் இது இருத்தல் வேண்டும் என்பது இவரது குறிக்கோளாகும். இதற்காகவே இவர் பல ஆன்மீக நூல்களை எழுதி நல்ல பல சீடர்களை உருவாக்கி வருகின்றார்.

3. தமிழோடு தன்னைக் கரைத்துக் கொண்ட அடிகளாசிரியர் மயிலம், கரந்தை ஆகிய இடங்களில் அமைந்துள்ள கல்லூரிகளில் பேராசிரியராகவும், முதல்வராகவும் பணியாற்றிய பெருமையர். சென்னை, தஞ்சைப் பல்கலைக் கழகங்களின் ஆய்வுப் பணியில் முத்திரைப் பதித்த வித்தகர்.

4. செய்யுள், உரைநடை, புத்துரை, பதிப்பு, ஆராய்ச்சி என்ற வகையில் 55 நூல்களைத் தந்து தமிழுக்கு வளம் சேர்த்த 94 வயது பேராசான் இவரே ஆவார். இவரது வீடும் (வைக்கோல் வேய்ந்த மிகப்பழைய கூரை வீடு) வளமாயில்லை உடலும் நலமாயில்லை ஆனால் தள்ளாத வயதிலும் தமிழை ஆய்ந்து தழிழுக்காகவே வாழ்ந்து தமிழை வளப்படுத்தி வருகின்றார்.

பேராசிரியர் திரு. அடிகளாசிரியர் பெற்ற பாராட்டுக்கள்

1. 1967 ஆம் ஆண்டு இராசபாளையம் மணிமேகலை மன்றத்தார் நிகழ்த்திய தொல்காப்பியம் இரு சூத்திர விளக்கக் கட்டுரைப் போட்டியில் கலந்து கொண்டு முதற்பரிசு பெற்றுள்ளார்.

2. கோயம்புத்தூர் மாவட்டம் பேரூர் மடாலயத்தைச் சேர்ந்த தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்கள் இவரைப் பேரூர் ஆதீனப் புலவராக்கிச் 'செந்நாப்புலவர்' என்ற பட்டத்தை வழங்கியுள்ளார். (28-2-72)

3. விழுப்புரம் மாவட்டம் கல்லக்குறிச்சி தமிழ்க் கவிஞர் மன்றத்தினர் இவருடைய தொல்காப்பியம் எழுத்ததிகாரப் பதிப்பினைப் பாராட்டி, பொன்னாடைப் போர்த்திப் பாராட்டுப் பத்திரம் வழங்கியுள்ளனர்.

4 தஞ்சாவூர் கரந்தை மீனாட்சியம்மன் திருக்கோவிலில் முறையாகச் சைவ சித்தாந்த நூல்களைப் பாடம் சொன்னதால் அக்கோயில் சைவ பிரச்சார சபையினரால் பாராட்டப் பெற்றுள்ளார்.

5. தமிழ்மொழிக்கு எண்ணிறந்த சேவைகளைப் பல்லாண்டுக்காலம் சலியாது செய்து வருகின்றமையால் திருக்கோவிலூர் பண்பாட்டுக் கழகம் 1992 ஆம் ஆண்டிற்குரிய கபிலர் விருதை இவருக்கு வழங்கிச் சிறப்பித்துள்ளது.

6. சென்னைக் கம்பன் கழகத்தினர் இவருடைய தமிழ்ப் பணியைப் பாராட்டிச் சான்றிதழும் பணமுடிப்பும் வழங்கினர் (7-8-1992).

7, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் இவருடைய தொல் காப்பியப் பணியைப் பாராட்டி இவருக்குத் 'தொல்காப்பியச் செம்மல்' என்ற பட்டத்தை வழங்கியுள்ளது (4-6-1997)

8 கும்பகோணம் வீரசைவப் பெரியமடம் இவருக்கு 'வீரசைவக்காவலர்' என்ற பட்டத்தை வழங்கியுள்ளது

9. மயிலம் பொம்மபுர ஆதீனம் இவருக்கு, "கற்பனைக் களஞ்சிய நம்பி" என்ற பட்டத்தை வழங்கியுள்ளது (12-10-1998)

10 தமிழக அரசின் தமிழ்வளர்ச்சித்துறை இவரெழுதிய, "திருமூலரும் பேருரையும் என்ற ஆய்வு நூலை. 1998 ஆம் ஆண்டில் வெளிவந்த நூல்களுள் சிறந்த நூலாகக் கருதி ரூபாய் பத்தாயிரத்தை வழங்கிச் சிறப்பித்துள்ளது. (15-01-20 0)

11. சென்னையைச் சேர்ந்த சேக்கிழார் ஆய்வு மையத்தினர் இவரது தமிழ்ப் பணியைப் பாராட்டி, "சேக்கிழார் விருதையும்" நினைவுப் பரிசாக ரூபாய் பத்தாயிரத்தையும் வழங்கிச் சிறப்பித் துள்ளனர். (27-07-200!)

12. தஞ்சாவூர் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தினர் மேன்மை தங்கிய தமிழவேள் த.வே உமாமகேசுவரம் பிள்ளைப் பெயரில் விருது வழங்கிச் சிறப்பித்தனர். (9-1-2002)

தவத்திரு திருப்போரூர்

சிதம்பர சுவாமிகள் அருளிய

பஞ்சதிகார விளக்கம் மூலமும் உரையும்

உரையாசிரியர் : திரு. **அடிகளாச்சிரியன்**

பதிப்பாசிரியர்: **அ. சிவபெருமான்**

திரு. அடிகளாசிரியன்